Volume-13
Issue-10

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு. குலாம் முஹம்மது**

அக்டோபர்-2020 (ஸபர்-1442)

விலை ரூ. **20/-**




## நமது உச்ச நீதிமன்றத்தின்

# தாழ்ச்சியும் வீழ்ச்சியும்

**முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி A.P. ஷா**

## இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகள்

## இந்துத்துவாவின் ஆட்சியில்

# தலித்களுக்கு இதுதான் நிலை

“

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் மு்ஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

”


நமது உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்
முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி **A.P.** ஷா - 4

தலையங்கம் - 24

புத்தக மதிப்பு - 26

வேட்டையாடப்படும் முஸ்லிம் கல்வியாளர்கள்
டெல்லி கலவரம் – 32

காஷ்மீர் அப்பாவி மக்கள் படுகொலை – 35

இஸ்லாம் கூறும் மனித உரிமைகள் – 38

மனுசாஸ்திரம் கொன்ற மகாத்மா – 44

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் – 47

தலித்களுக்கெதிராகவும் கிறிஸ்துவர்களுக்கெதிராகவும்
நிகழ்த்தப்பட்ட அநீதிகள் – 51

சிலுவைப் போர்கள் 2.0 – 53

சுதந்திரத்திற்காக போராடி சிறை சென்ற முதல்
முஸ்லிம் பெண்மணி பேகம் முஹம்மது பாத்திமா – 54

இந்துத்துவாவின் ஆட்சியில் தலித்களுக்கு இதுதான் நிலை – 35

இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிராக
நிகழ்த்தப்பட்ட அநீதிகள் - 58

கொரோனா பாதுகாப்பு வழிகள் – 62

கத்தியின்றி ரத்தமின்றி முதல் கிப்லா
ஜெருசலம் மீட்பு வரலாறு! – 64



அக்டோபர்-2020 ஸபர்-1442

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham





# நமது உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்

## முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி A.P. ஷா

உச்ச நீதிமன்றம் இன்றைய நாட்களில் இழைத்துவரும் அநீதிகளால் அது தன் தரத்தில் தாழ்ந்து கொண்டே செல்கின்றது. அதன் முன்னாள் நீதிபதி என்ற அளவில் சில எச்சரிக் கைகளை எடுத்து வைப்பது என் கடமை என்று கருதுகிறேன்.

உலகின் பிரசித்திப் பெற்ற பேச்சாளனும் அரசியல் சிந்தனையாளனுமான எட்மெண்ட் பர்க் அவர்கள் ஒருமுறை சொன்னார்கள் :

"நீதிபதிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படு கின்றன. அதனால் அவர்கள் முடிவுகளில் எதி ரொலிக்கும் அநீதிகளை எளிதில் கண்டுகொள் வார்கள். அவற்றைஅகற்றிவிடுவார்கள்." ஆனால், நமக்கு இப்போது இங்கே (இந்தியாவில்) அப்படியொரு நீதிபரிபாலனமில்லை என்பதே உண்மை.

### உச்ச நீதிமன்றத்தின் பொன்னரிய பாரம்பரியம்

நமது உச்ச நீதிமன்றத்திற்கு பெருமைமிக்கப் பாரம்பரியம் இருந்த நாட்கள் உண்டு. அதைக் கண்டு நமது உச்சநீதிமன்றம் பெருமைப்பட்ட நாட்கள் உண்டு.

கேசவ நந்தா பாரதி வழக்கில் நமது உச்ச நீதி மன்றத்தின் 13 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு வழங்கிய தீர்ப்பு வரலாற்றில் வரையிட்டுக்காட்டப்படவேண்டியஒன்று. உச்ச நீதிமன்றம்தன்னைநீதிபரிபாலனத்தில்உயர்த்திப் பிடித்த நாட்கள் அவை. நமது அரசியல் சாசன சட்டத்தின் உண்மையான பாதுகாவலன் என்பதை பிரகடனப்படுத்திய நாட்கள் அவை.

அநியாயத்தைத் துணிந்து செய்யும் ஆட்சி யாளனுக்கு எதிராக எழுந்து நின்று நீ செய்வது அநியாயம், எனச் சொல்லுவதே மிகப்பெரிய ஜிஹாத். இறைவனின் பாதையில் செய்யும் மிகப்பெரிய போர்.

எஸ்.எம்.முஷ்ரிஃப், தாஹிர் மஹ்மூத் அவர்களைத் தொடர்ந்து, பிரசாந்த் பூஷன் அவர்கள், அவர்களைத் தொடர்ந்து, முன்னாள் உச்ச மன்ற நீதிபதி **A.P.** ஷா; இப்படி அணி வகுத்து எழுந்து உரக்க முழங்கி வருகின்றார்கள்,

நீதிமன்றங்களின் குறிப்பாக உச்ச நீதிமன்றத்தின் அநியாயகளுக்கெதிராக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள், உச்ச நீதிமன்றம் கட்டவிழ்த்துக் கொண்டிருக்கும் உச்சபட்ச அநீதிகளைப் பட்டியலிட்டார். அதனை வைகறை வெளிச்சம் செப்டம்பர்–2020 இல் தந்தோம்.

இங்கே அண்மையில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி **A.P.** ஷா அவர்கள் ஆற்றிய உரையையும், அதில் அவர்கள் நமது உச்ச நீதிமன்றம் எப்படி தனது தீர்ப்புகள் வழி உச்சபட்ச அநீதி மன்றமாகவும், ஆளும் பாசிச பா.ஜ.க. அரசுக்கு ஜால்ராவாகவும் அமைகின்றது என்பதை மிகவும் நுணுக்கமாச் சுட்டிக்காட்டு கின்றார்கள். அதனை இங்கே தருகின்றோம்.

உரையின் தலைப்பு
**THE SUPREME COURT IN DECLINE**

அன்றைய உச்ச நீதிமன்றத்தை உலக அரசியல் சாசன வல்லுநர் காரன்வல்லி ஆஸ்டின் “இந்தியா வின் உச்ச நீதிமன்றம் தன்னை அரசியல் சாசனத் தின் உண்மையான பாதுகாவலன் என்பதை நிரூபித்துவிட்டது” என்றார்.

அமைதியான சந்தடியில்லாத ஒரு நீதிமன்ற மாகத்தான் நமது உச்ச நீதிமன்றம் தன் கடமை களைத் தொடங்கியது. காலப் போக்கில் இந்த உச்ச நீதிமன்றம் இந்த நாட்டு இராஜாங்க நடை முறைகளை நெறிப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியது. அந்நிலையில், அது தனது பங்கை நன்றாகவே உணர்ந்தது. அது தன் ஆதிக்கத்தின் எல்லையை விரிவாக்கிக் கொண்டது.

எதிர்காலத்தில் அது மிகவும் துடிப்போடு செயல்படும் அடித்தளத்தை அமைத்துக் கொண் டது. கேசவனந்தா பாரதி வழக்கின் தீர்ப்புதான் இவை அனைத்திற்கும் தொடக்கம். அதன்பின் வழங்கிய பல தீர்ப்புகள், உச்ச நீதிமன்றத்தின் கண்ணியத்தை உயர்த்திக் காட்டியது. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை மேனகா காந்தி, பிரான்சிஸ் கோராலை முல்லின் (Menaka Gandhi "Frances CoralieMullin), வழக்குசர்வதேசியவிமானபோக்கு வரத்து ஆணையம் வழக்கு, International Airpots Authority. இவற்றின் வழி பல சட்ட நெறி முறைகள் வகுக்கப்பட்டன. அத்தோடு அரசியல் நிர்ணயச்சட்டம் உறுப்பு 21–இல் வழங்கப்பட்ட உரிமைகள் விரிவாக்கப்பட்டன.

## பொதுநல வழக்குகள்

பொதுநல வழக்குகள் என்ற கண்டுபிடிப்பு களின்வழி ஒரு புது சகாப்தம் தொடங்கப்பட்டது. அதனை நாம் சோசிலிச நீதிபரிபாலன காலம் எனக்கனிந்துரைக்கலாம். இந்த பொதுநல வழக்கு களின் வழி நீதித்துறை செயல்களத்திற்கே வந்து விட்டது எனலாம். இது 1990–களில் நடந்த விரிவான வளர்ச்சி நீதித்துறைதான் கைகளை வைக்காத புதிய தளங்களைத் தொட்டது. அவற் றில் ஒன்று சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு. இதில் பல முக்கியமான கேள்விகளுக்கு விடை கண்டது உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புகள் வழியாக! இதன் வழி செயல்துறையிலும் நீதிமன்றம் செயலில் வந்தது. நீதித்துறை இதில், நீதிதான் தன் எல்லையை மீறிவிட்டதாக சில செல்லமான விமர்சனங்களையும், எதிர்கொள்ள வேண்டிய தாயிற்று. இந்த விமர்சனங்கள் தவறானவை அல்ல. அவற்றில் பல நன்மைகளுமிருந்தன. இந்தப் பின்னணியில், பொதுநல வழக்குகள் மிகப்பெரிய பாராட்டுக்களைப் பெற்றன. சிலர் இந்தப் பொதுநல வழக்கைத் தவறாகவும் பயன் படுத்தினார்கள். ஆனால் அதை விவாதிப்பதற்கு உரிய இடம் இதுவல்ல.

உச்ச நீதிமன்றம் சில சரிவுகளையும், ஏற்றங் களையும் இதற்கு முன்னாலும் சந்தித்திருக் கின்றது. குறிப்பாக ADM ஜபல்பூர் வழக்கில் நீதிமன்றம் மிகவும் தரம் தாழ்ந்துப் போனது. தறிகெட்டு நெறிகெட்டுப் போனது. இதனால் இதைத் தொடர்ந்து வந்த பல ஆண்டுகளாக நீதிமன்றம் தான் இழந்த கண்ணியத்தை மீட்டி டுவதிலேயே செலவு செய்தது. 1980 – 1990களில் நீதிமன்றம் தான் இழந்ததை மீட்டது என்றே எண்ணினோம். மிகக் குறைந்ததொரு காலம் நீதிமன்றம் தன் கடமையைச் செய்தது என்ற

எண்ணம் மேலோங்கியது.

இதைத்தான் நம் நாட்டின் முதல் தலைமுறை நீதிபதிகள் எதிர்பார்த்தார்கள். இந்த நிலை நீடிக்கும் என்பதே அனைவரின் கணிப்பாகவுமிருந்தது. நம்பிக்கையும் அதுவே! நாம் இப்போது கண்ணியமற்ற அந்த நிலைக்கு வந்துவிட்ட தாகவே அறிகின்றோம். கையறுநிலை. நாம் இப்போது உச்ச நீதிமன்றத்தை எச்சரித்தே ஆக வேண்டும். அப்போது மட்டுமே நெருக்கடிகால அழிவுகளைப்போன்றகேவலமானஅழிவுகளைத் தவிர்க்க இயலும்.

> “ நாடாளுமன்றம் பல்வேறு கட்டுப் பாடுகளுக்கு உள்ளாகிபோனது. அது செயலற்று பல காலமாகி விட்டது. ”

## அனைத்து அதிகாரமும் கொண்ட அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம்

நீங்கள் இப்போது என்னை கேட்கலாம். இவையெல்லாம் இப்போது இன்றைய காலத் திற்குப் பொருத்தமானவைதானா?

காகிதத்தில், நாம் மிகவும் தாராளமான ஒரு ஜனநாயக, மதச் சார்பற்ற, சமதர்ம நாடு, குடியரசு. இந்த ஜனநாயக, மதச்சார்பற்ற சம தர்ம கோட்பாடுகளுக்கு தேவையான கால்களெல்லாம் களத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றன என்றும் நாம் எண்ணலாம்.

நமது அடிப்படை உரிமைகள், மிகவும் பாதுகாப்பாகவேஇருக்கின்றன. அவைதீயவர்கள் தீயிட்டுப் பொசுக்கிட இயலாத இடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்ட ராஜாங்க பரிபாலனம், அதிகாரப்பீடங்கள் ஒன்றை ஒன்றுத் தொட்டு தகர்த்திடாமல் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது நமது குடியரசின் பலம் மத்திய அரசின் அதிகார்த்திற்குட்பட்டவை. மாநில அரசின் தனித்துவமான அதிகாரத்திற்குட்பட்டவை என மத்திய – மாநில அரசுகளின் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு ஒரு கூட்டாட்சித் தத்துவம் நம்மிடமிருக்கின்றது. இப்படி ஒரு அமைப்பு நம்மிடமிருப்பதைக் கண்டு பொறாமை கொண்டவர்களும் உண்டு.

காகிதத்தில், வீற்றிருக்கும் சட்டங்களின் அடிப்படையில் (எக்சியூட்டிவ்) எனச் சொல்லப்படுகின்ற ஆதிக்கமிக்க அதிகாரவர்க்கம், தனது செயல்களுக்கு, நம்மிடம் பதில் சொல்லியாக வேண்டும். இதற்காகவே, சட்டமன்றமும், அரசியல் சாசனமும் இருக்கின்றன. அதேபோல்இந்தஅதிகாரவர்க்கம் சட்டம் ஒழுங்கிற்கும், நம்மிடம் (சட்ட மன்றங்களிலும் அதற்காக உருவாக்கப்பட்ட, வட்டங்களிலும்) பதில் சொல்லியாக வேண்டும்.

அதிகார வர்க்கம் பதில் சொல்லிடுவதற்கிருக்கின்ற மற்றொரு தளம் நீதிமன்றங்கள். இதற்காகத்தான் ஆடிட்டர் ஜெனரல் என்ற தணிக்கை குழு அதிகாரி. தேர்தல் ஆணையம், மனித உரிமை ஆணையம், லஞ்ச ஒழிப்புத்துறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இவை அல்லாமல், ஊடகங்கள், ஆன்றோர்கள், அரசியல் நோக்கர்கள் இவர்கௌல்லாமிருக்கின்றார்கள். ஆனால் நீங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இவையெல்லாம் காகிதத்தில்தான் வீற்றிருக்கின்றன. இதனை நான் ஏற்கெனவே கூறிவிட்டேன்.

## நடைமுறையில் மடிந்துவிட்ட நிறுவனங்கள், கட்டமைப்புகள்

இன்றைக்கு இந்தியாவில், அதிகாரவர்க்கத்தை கேள்வி கேட்கும் அத்தனை ஏற்பாடுகளும் அழிக்கப்பட்டுவிட்டன. அவை மிகவும் முறை



யாக திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டன. இந்த அழிக்கும் வேலை 2014–இல் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தநாள் முதலே தொடங்கி யது. இந்திராகாந்தி ஆட்சியில் அமர்ந்து ஆட்டம் போட்ட காலக் கட்டத்தில் அவை எப்படி அழிக்கப்பட்டனவோ அதே போலவே இந்த அழிவு வேலைகளும் நடைபெறுகின்றன. இந்த இன்றைய அழிவுகள் ஆழமானவை. விசாலமா னவை. அவை ஜனநாயகத்தின் அனைத்துக் கூறுகளையும் சின்னாபின்னமாக்கிவிட்டன. எல்லா அதிகாரமும் அதிகார வர்க்கத்திடம் குவிந்துக் கிடக்கின்றன.

## நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் பல்வேறு கட்டுப் பாடுகளுக்கு உள்ளாகிபோனது. அது செயலற்று பலகாலமாகிவிட்டது. அது மிகவும் இக்கட்டான நெருக்கடியை நாட்டு மக்களுக்கு தந்தது. ஆனால் அதைப்பற்றி விவாதிக்க நாடாளு மன்றம் ஒருமுறை கூட இயலவில்லை. கடைசியாக அது கூடியபோது, அதில் கேள்வி நேரமில்லை என கூறி அதன் குரல் வளையை நெறுக்கி விட்டார்கள்.

நாடாளுமன்றம்தான் இயங்கவில்லை என்றால் இதர நிறுவனங்கள், கட்டமைப்புகள் அதிகார வர்க்கத்தின் அநீதி இழைக்கும் கரங்களை ஒடுக்க எழுந்திருக்க வேண்டும். லோக்பால் போன்ற அமைப்புகள் பற்றிய பேச்சே இல்லை என்ற அளவுக்கு ஆக்கிவிட்டார்கள். தேசிய மனித உரிமை ஆணையம் மடிந்தே விட்டது.

## புலனாய்வு முகமைகள்

புலனாய்வு முகமைகள் முடிந்த அளவுக்குத் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அரசை எதிர்ப்பவர்கள் அனைவர் மீதும் புலன் விசாரணை, பொய் வழக்கு, இதற்காகவே எல்லாப் புலனாய்வு முகமைகளும் பயன் படுத்தப்படுகின்றன. இந்திய தேர்தல் ஆணையம் ஒன்றுமில்லை என்றாகிவிட்டது. ஆளுங்கட்சிக்காக அது ஆடும் ஆட்டம் மிகவும் கேவலமானது.

> “ மாணவர்களைக் கலகக்காரர்கள் எனச் சிறைப் பிடிக்கின்றார்கள். ஆசிரியர்களை சதிகாரர்கள் என சித்திரவதைச் செய்கின்றார்கள். பொது ஊடகங்கள் ஆளும் கட்சியின் எடு பிடிகள் என்றாகிவிட்டன. சமுதாய ஆர்வலர்களின் குரல் வளைகள் நெறிக்கப்பட்டுவிட்டன. ”



தகவல் அறியும் ஆணையம், தவிடுபொடியாக் கப்பட்டுவிட்டது. இப்படியே ஒவ்வொரு நிறுவனமும் ஆளும் கட்சியின் முகவர்களாக ஆகிப்போனதை அடுக்கிக் கொண்டே போகலாம். அஃதோர் முடிவுறா பட்டியலாகவே நீளும்.

ஊடகங்கள், சமுதாய ஆதர்வு நிறுவனங்கள், தன்னார்வ குழுக்கள் இவையெல்லாம் கூட அழிக்கப்பட்டுவிட்டன. பல்கலைக் கழகங்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

மாணவர்களைக் கலகக்காரர்கள் எனச் சிறைப் பிடிக்கின்றார்கள். ஆசிரியர்களை சதி காரர்கள் என சித்திரவதைச் செய்கின்றார்கள். பொது ஊடகங்கள் ஆளும் கட்சியின் எடு பிடிகள் என்றாகிவிட்டன. சமுதாய ஆர்வலர் களின் குரல் வளைகள் நெறிக்கப்பட்டு விட்டன.

## நீதித்துறை

இவற்றிலெல்லாம் மிகவும் கவலைக்குரியது நீதித்துறைதான். இந்தத் துறை குறித்து நிறையவே விவாதிக்க வேண்டியதிருக்கின்றது. நாடாளுமன்றம் நாடாளுவோரின் நரித்தனகூடமாக ஆகிப்போதால், நீதிமன்றங்கள் குறிப்பாக உச்ச நீதிமன்றம்தான் கஷ்மீரை மூன்றாக துன்டாடியதை விவாதிக்கும் அரங்கமாக ஆகியிருக்க வேண்டும்.

அதேபோல், அரசியல் சாசன அமைப்பின் அடிப்படையில்

CAA - என்ற குடியுரிமை திருத்தச் சட்டம், செல்லுமா? என்பதை விவாதித்திருக்க வேண்டும்.

அதேபோல் பொதுமக்களின் போராட்டங்களை அடக்கி, ஒடுக்கியதையும் பின்னர் அவற்றை தண்டனைக்குரிய குற்றங்களாக ஆக்கியதையும் விவாதித்திருக்க வேண்டும் உச்ச நீதிமன்றம். தேசத் துரோகம், தடை செய்யப்பட்ட செயல் களின் தடுப்புச் சட்டம் ஆகிய வற்றை தவறாகப் பயன்படுத் தியதையும் விவாதித்திருக்க வேண்டும். தேர்தல் கடன் பத்தி ரங்கள் பற்றியும் முழுமையான தொரு விவாதம் உச்ச நீதிமன்றத் தில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

> “ஆனால் இன்றைக்கு எல்லாமே கெட்டுப் போனது. நமக்குத் தெரியும், நீதிபதிகளின் நியமனம், அவர்களின் இடமாற்றங்கள் பல உயர்நீதிமன்ற நீதிபதிகளின் இடமாற்றம் எல்லாம் சட்ட அமைச்சகத்தின் ஆணைப்படி, ஏவலின்படி தான் நடக்கின்றன.”

ஆனால் இவையெல்லாம் உச்ச நீதிமன்றம் வந்தபோது ஒதுக்கி வைக்கப்பட்டன. அல்லது நீண்டநாட்களாகக் கிடப்பில் போடப்பட்டன.

நாம் ஒரு போர்காலத்தில் இல்லை. ஆனால் நாம் நிச்சயமாக ஒரு பெரும் நெருக்கடி காலத் திலிருக்கின்றோம். இப்படியொரு நெருக்கடி காலம் இதற்கு முன் நம் தலைமுறைகளில் வந்த தில்லை. இதில் எல்லாவற்றையும் விட மையமா னது என்னை மிகவும் மன அழுத்தங்களுக்கு ஆளாக்குவது உச்ச நீதிமன்றத்தின் போக்குதான்.

# உச்ச நீதிமன்றத்தின் தாழ்வும் வீழ்ச்சியும்

என்னைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றம் தரம் தாழ்ந்ததும், வீழ்ந்ததும், பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி 2014−இல் மத்தியில் அமைந்த போதுதான். தேசிய ஜனநாயக கூட்டணி என்ற பெயரில் அமைந்த அணி மகத்தான வெற்றியைப் பெற்றது என்பதை யாரும் மறுத்திட இயலாது. மிகவும் குறுகலான ஒரு கொள்கையைக் கொண்டது இந்த அணி. இதற்கு முன்னால் இவ்வளவு குறுகலான, வலது சாரி சிந்தனை கொண்ட ஓர் அணியை நாம் சந்தித்ததே இல்லை. இவர்களின் பிடியில் சிக்கி உச்ச நீதிமன்றம் தரத்தில் தரையில் வீழ்ந்தது, ஒரு சந்தர்ப்பவாத நிகழ்வு அல்ல. மாறாக, மிகவும் கவனமாக திட் டம் போட்டு கையகப்படுத்திக் கொண்ட ஒரு நிறுவனமாக உச்ச நீதிமன்றம் ஆகிப்போனது. ஆளும் கட்சியினுடைய அபிலா ஷைகளுக்குத் தகுந்தபடி பயன் தந்திடும் – ஆட்டம் போட்டிடும் ஒரு நிறுவனமாக அமைப்பாக ஆகிவிட்டது.

> “அதிகார வர்க்கம், ஒரு நிலைப்பாட்டை எடுத்துவிட்டால், உச்ச நீதிமன்றம் அதன் பக்கமே சாய்ந்து விடுகின்றது. இதனை நாம் கவனித்துக் கொண்டேதான் இருக்கின்றோம்.”

## நீதிபதிகளின் நியமனம்

எடுத்த எடுப்பிலேயே ஒரு முரண்பாடு. நீதிபதிகளை நியமிப்பதற்காக அமைக்கப்பட்ட தேசிய நீதிமன்ற நியமன ஆணையம் அமைத்த தில். நீதிபதிகளை நியமிக்க இப்படி ஓர் ஆணை யத்தை ஏற்படுத்த ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன் பெயர்தான் NATIONAL JUDICIAL APPOINTMENTS COMMISSION ACT 2015. இது நமது அரசியல் சாசனத்திற்கு எதிரானது. மாறானது. இதை உச்ச நீதிமன்றம் மிகவும் நெஞ்சுரத்தோடு எதிர்த்தது இல்லாம லாக்கியது. உண்மையைச்சொன்னால் 2014−இல் அமைந்த புதிய அரசை எதிர்கொள்வதில் உச்ச நீதிமன்றம் சற்று தைரியமாகவே நடந்து கொண்டது. நீதிமன்றம் தனது கடமையைச் செய்வதில் மிகவும், சாதுரியமாக செயல்பட்டது. புற வாசல்கள் வழியாக, நீதி துறைக்கு நியமிக்கப் பட்ட நியமனங்களை தைரியமாக தூக்கிவீசியது.

## நீதிபதிகளின் இடமாற்றம்

ஆனால் இன்றைக்கு எல்லாமே கெட்டுப் போனது. நமக்குத் தெரியும், நீதிபதிகளின் நியமனம், அவர்களின் இடமாற்ற

ங்கள் பல உயர் நீதிமன்ற நீதிபதி களின்இடமாற்றம்எல்லாம்சட்ட அமைச்சகத்தின் ஆணைப்படி, ஏவலின் படிதான் நடக்கின்றன. அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகள் அகில் குறைஷி, முரளிதர், ஜெயந்த் பட்டேல் ஆகியோரெல்லாம் மிகவும் கேள்விக்குரிய வகையி லேயே இடமாற்றம் செய்யப் பட்டார்கள். ஆனால் உச்ச நீதி மன்றம் ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லை. மாறாக, இந்த நீதிபதிகள் இடமாற்றம் செய் வதை மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. நீதித்துறையின், தனித்துவம், சுதந்திரம் என்றெல்லாம் தேசிய நீதித்துறை நியமன ஆணையத் தின்போது பேசப்பட்டவை. காற்றிலே வீசப்பட்டன.

2018 ஆம் ஆண்டு, 4 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது, சில சில்லறை சல சலப்புகள் இடம் பெற்றன. இந்த நான்கு நீதிபதிகளும், நீதித்துறை பரிபாலனத்தில் அரசின் தலையீடு இருப்பது குறித்து ஆதாரங்களை வெளிப்படுத்தினார்கள். அதன்பின் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சுய உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டன. மக்களின்தனித்திருக்கும்உரிமைபற்றியவழக்கை இதற்கான எடுத்துக்காட்டாகக் கூறலாம். அந்த வழக்கைதான், பட்டுச்சாமி அல்லது ‘ஷிரியா சின்கால்’ வழக்கு என்கிறாம்.

இந்த வழக்கில்தான், தகவல் தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 66A அகற்றப் பட்டது. முதன் முதலாக அடிப்படை உரிமை களை உறுதியளித்த, பிரிவு 19.1(a) க்கு எதிராக இருந்ததாக ஒரு சட்டத்தின் ஒரு பிரிவு நீக்கப் பட்டது. ஆனால், ஒருபால் புணர்ச்சியை குற்ற மற்ற செயலாக ஆக்குவது மூன்றாம்பால் மக்க ளின் உரிமைகளை அங்கீகரிப்பது, முத்தலாக் போன்றவற்றில் இதனை (நீதிமன்றத்தின் தனித் துவத்தை) பார்க்கமுடியவில்லை. எந்தெந்த வழக்குகளிலெல்லாம் அதிகார வர்க்கம் எதிர்த்ததோ மக்களின்உரிமையை மறுத்ததோ அந்த வழக்குகளில், அதிகார வர்க்கத்தின் பக்கமே உச்ச நீதி மன்றம் சாய்ந்தது. அங்கெல்லாம் மக்களின் உரிமைகள் பின்னுக் குத்தள்ளப்பட்டன. அரசியல் வர்க்கம் நீதி மன்றங்களை செயல் படவிடாமல் தடுக்கின்றது.

> “
> சபரிமலை விவகாரத்தில் வழங்கப்பட்ட முதல் தீர்ப்பு முன்னேற்றத் திற்கு முன்னோடியாக வழங்கப் பெற்றத் தீர்ப்பு. அது கேரளாவிலுள்ள சபரிமலை கோயிலுக்குள் புக பெண்களுக்கு அனுமதி வழங்கிற்று. ஆனால் அந்த உச்ச நீதி மன்ற தீர்ப்பை, கேரள அரசு செயல்படுத்திட தாலப்பட்டபோது, மத்தியிலே இருக்கின்ற பாரதீய ஜனதா கட்சி அரசு சபரிமலை பக்தர்களுக்கு ஆதரவாகவும், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகவும் செயல்பட்டது.
> ”

## கருத்துச் சுதந்திரம்

அதிகார வர்க்கம், ஒரு நிலைப் பாட்டை எடுத்துவிட்டால், உச்ச நீதிமன்றம் அதன் பக்கமே சாய்ந்துவிடுகின்றது. இதனை நாம் கவனித்துக் கொண்டேதான் இருக்கின்றோம். அண்மையில், ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ என்ற பத்திரிகை கருத்துச் சுதந்திரம் பற்றி நீதிமன்றம் சென்ற பத்து வழக்குகளில், நான்கு வழக்கு களில் மட்டுமே கருத்துச் சுதந் திரத்திற்குகாக வாதாடியவர்கள் அதைப் பெற்றார்கள். நான்கு வழக்குகளிலும் அரசு ஒரு நிலைப் பாட்டை எடுக்கவில்லை. அரசு ஒரு நிலைப் பாட்டை எடுத்திருந்தால் கருத்துச் சுதந்திரத்தை இல்லை என்றாக்கி இருப்பார்கள். இப்படித் தான் நீதிமன்றம் அரசுக்கு சாதகமாக பணிந்து பணியாற்றி வருகின்றது.

## பிரசாந்த் பூஷன்

உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தனக்குத் தானே ஒரு பெருந்தன்மையைப் பிரஸ்தாபித்துக் கொண்டது. அதில் அவருக்கு ‘ஒற்றை நாணயம்’ தண்டனையை விதித்தது. ஆனால் அவரை அதில் கண்டிக்காமலில்லை. பிரசாந்த் பூஷனின் மொத்த விவகாரத்திலும் ஒரு விஷயம் தெளிவு. அதாவது நமது உச்ச நீதிமன்றம் சகிப்புத் தன்மை அற்றதாக ஆகிவிட்டது.

உண்மை என்னவெனில், நமது உச்ச நீதி மன்றத்தின் பெருமைமிகு நாட்கள் காலங் கடந்த



வனாக ஆகிவிட்டன. அந்தப் பொன்னான நாட்களை எண்ணியே நாம் இன்றைய நாட்களை நகர்த்திட வேண்டியதாயிற்று. பட்டுச்சாமி வழக்கில் பெற்ற வெற்றியும் பறிக்கப்பட்டு விடுமோ என அஞ்ச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

## மறக்கடிக்கப்பட்டு விட்ட சுதந்திரங்கள்

உச்ச நீதிமன்றத்தின் வீழ்ச்சியின் உச்ச கட்டம், என்னவெனில் அது, கும்பலாட்சிக்கு மண்டி இடுவதுதில்தான் உள்ளது. நான் கும்பல் பலம் என்பதைக் கோடிட்டுக் காட்டிட விரும்புகின்றேன். காரணம், உச்ச நீதிமன்றம்தான் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும். ஜனநாயகம் என்பதே, சிறுபான்மை மக்களை எப்படி பாதுகாக்கின்றோம், அவர்கள் எப்படி பிரதி நிதித்துவப் படுத்தப்படுகின்றார்கள், என்பன வற்றிலே தான் இருக்கின்றது.

காரணம் அவர்களால் சட்ட சபையிலோ, நாடாளுமன்றத்திலோ தங்கள் உரிமையையோ ஆதிக்கத்தையோ நிலை

> “உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கிய வழங்கிய தீர்ப்பு, உண்மையிலேயே முழுமையான நீதியை வழங்கியதா? 1949 இலும் 1992 லும் இந்துக்கள் செய்தது அப்பட்டமான அநீதி என்பதை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், அந்த அநீதியை இழைத்தவர்களுக்கு, கைநிறையப் பெறுமதி களை அள்ளி வழங்கியது”

நாட்டிட இயலாது. பெரும்பான்மையினரின் குரூரங்களிலிருந்து சிறுபான்மையினரை பாதுகாப்பது நீதிமன்றங்களின் வேலை. நீதி மன்றங்களை நோக்கிவரும் மறு பரிசீலனை மனுக்கள் வழி அவர்களுக்கு எதிரான சட்டங்களை நீதிமன்றங்கள் ரத்துச் செய்திட வேண்டும்.

## சபரிமலை வழக்கும் அயோத்யா வழக்கும்

ஆனால் உச்ச நீதிமன்றம் அதன் கடந்தகால வழக்கங்களிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் தூரமாய்ப் போய்விட்டது. அத்தோடு கும்பலாட்சிக்குத் தயக்கமின்றி துணிந்து துணை போகின்றது. இதில் அண்மையில் வந்த இரண்டு தீர்ப்புகள் மிகவும் கவனமாகக் கவனிக்கத்தக்கவை. ஒன்று சபரிமலை வழக்கு இன்னொன்று அயோத்யா வழக்கு.

சபரிமலை விவகாரத்தில் வழங்கப்பட்ட முதல் தீர்ப்பு முன்னேற்றத்திற்கு முன்னோடியாக வழங்கப் பெற்றத் தீர்ப்பு. அது கேரளாவிலுள்ள சபரிமலை கோயிலுக்குள் புக பெண்களுக்கு அனுமதி வழங்கிற்று. ஆனால் அந்த உச்ச நீதி மன்ற தீர்ப்பை, கேரள அரசு செயல்படுத்திட தாலப்பட்ட போது, மத்தியிலே இருக்கின்ற பாரதீய ஜனதா கட்சி அரசு சபரி மலை பக்தர்களுக்கு ஆதரவாகவும், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகவும் செயல்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே அறுதியானதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், மத்திய அரசு வேறுவிதமாக சிந்தித்தது.


இதனால் உச்ச நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பை மறுபரிசீலனை செய்திட வேண்டும் விண்ணப்பங்கள் என உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்டன. (மத்திய அரசின் போக்கை புரிந்துகொண்டே இந்த விண்ணப்பங்கள் போடப்பட்டன. மறுபரிசீலனை மனுவை வேண்டுமென்றே தள்ளிப்

போட்டது உச்ச நீதிமன்றம்) காரணம், களத்தில் மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிரானவர்களுக்கு உதவி செய்து கொண்டே இருந்தது. காரணம் கேட்டதற்கு சபரிமலைக்குள் பெண்களை அனுமதிக்கலாமா கூடாத என்பதை, உச்ச நீதி மன்றத்தின் உச்சபட்ச அமர்வு ஒன்றுதான் தீர்மானிக்க வேண்டும் என்பதாக உச்ச நீதி மன்றம் பதில் சொன்னது. அதே நேரத்தில், நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பின் மேல் எந்தத் தடையு மில்லை. ஆனால் உச்ச நீதிமன்றம் மத்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் வகையில் முதல் தீர்ப்பு அறுதியானது அல்ல என அறிவித்தது. இப்படி அறிவித்து சபரிமலைக்குள் பெண்கள் பாது காப்பாக செல்ல அனுமதிக்க வேண்டும் என கோரப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டது.

> “முன்னாள் காவல்துறை அதிகாரி ஸ்ரீலியோ ரிபரியோ டெல்லி கலவரத்தை பற்றிய நேர்மையானதொரு புலன்விசாரணை நடை பெறவில்லை எனக் கருதுகின்றார். அவர் 1984இல் சீக்கியர்களுக் கெதிராக நடந்த கலவரங்கள், அந்தப் பின்னணியில் நடந்த தவறான புலன் விசாரணை போன்றதே இப்போது டெல்லிக் கலவரம் குறித்த நடந்த விசாரணையும் என்கின்றார்.”

உச்ச நீதிமன்றத்தின் இந்த நிலைப்பாடு, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் மீதே நமக்கு மிகப்பெரிய அவ நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டது. இந்தக் கசப்பான நினைவுகளுடை னேயே நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். இனிவரும் நாட் களிலும் இந்த கசப்பு நீடித்துக் கொண்டே இருக்கும்.

இனிவரும் நாட்களில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளையே வசதிக்கேற்ப திருப்பி எழுதலாம். அதற்கு மறு ஆய்வு மனுக்களை மத்திய அரசின் ஆசியோடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திட வேண்டும். (உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையே உச்ச நீதிமன்றம் கேலிக் கூத்தாக்கிவிட்டது.) சட்டத்தின் செயல்பாட்டில் இவையெல்லாம் என்ன தாக் கத்தை ஏற்படுத்தும்? என்பதைப் பற்றி உச்ச நீதிமன்றம் கவலைப் படவில்லை. (ஆளும் கட்சியை ஆனந்தத்தில் ஆழ்த்துவதையே சேவை எனக் கொண்டது.)



வழங்கப்படும் தீர்ப்பின் அறுதித் தன்மை, சட்டத்தின் செயல்பாடு இவை, மீண்டும் அயோத்தியா வழக்கில் விவாதமானது.

அயோத்யா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, வரலாறு காணாத அளவில் தீர்ப்பை வழங்கிய வர்களின் பெயர் குறிப்பிடாத அநாதையான அனாமதேய தீர்ப்பு. ஆனால் அனைவரும் கூடி ஒரு மனபட்டு (ஒருதலைப் பட்சமாக) வழங்கப் பட்ட தீர்ப்பு. (UNANIMOUS BUT UNUSUALLY ANANYMOUS DECISION) இந்தத் தீர்ப்பில், உச்ச நீதிமன்றம், அலகபாத் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏற்புடையதல்ல. காரணம் (பாபரி மஸ்ஜித் வீற்றிருந்த இடத்தை மூன்றாகப் பிரிப்பது இயலாத ஒன்று அப்படி பிரிப்பது அமைதியை நிலை நாட்டிடவும் செய்யாது என்றது.

ஆனால், உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித்

வழக்கிய வழங்கிய தீர்ப்பு, உண்மையிலேயே முழுமையான நீதியை வழங்கியதா? **1949** இலும் **1992** லும் இந்துக்கள் செய்தது அப்பட்டமான அநீதி என்பதை ஏற்றுக்கொண்ட உச்சநீதி மன்றம், அந்த அநீதியை இழைத்தவர்களுக்கு, கைநிறையப் பெறுமதிகளை அள்ளி வழங்கியது. நிச்சயமாக இது சமத்துவத்திற்கு எதிரானது. குற்றமற்றவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றால் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டார்கள்.

சபரிமலை வழக்கில் மத்திய அரசு, உச்ச நீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்திட வழிவிட வில்லை. அயோத்தியா வழக்கில் மத்திய அரசு உச்ச நீதிமன்றம் செய்த அநீதிக்கு மேலே சென்று இன்னொரு அநீதியை செய்தது. அது, 1992 இல் பாபரி மஸ்ஜித்–ஐ இடிப்பதில் ஈடுபட்ட கரே சேவர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் என்ற இந்து மகா சபையின் கோரிக் கையை பரிசீலிக்க உள்ளது. அத்தோடு அவர்கள் மீதுள்ள வழக்குகளையும், ரத்து செய்ய வேண்டும், அவர்களின் பெயர்கள் அந்த இடத்தில் – பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் பதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வைக்கச் சொல்லி பரிசீலித்து வருகின்றது. ஆனால் உச்ச நீதிமன்றமோ அன்று அநியாயத்தைச் செய்த வர்களின் மீதுள்ள வழக்குகள் தொடர வேண்டும் எனக் கூறி இருக்கின்றது. இதில் அர்த்தமுள்ள எதுவும் நடக்கும் என்ற நம்பிக்கை இல்லை.

அயோத்தியா வழக்கில் முஸ்லிம்கள் சமர்ப்பித்த எந்த மேல் முறையீட்டு மனுவையும் உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை.

## அரசியல் நிர்ணயச் சட்டத்தின் தேட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியங்கள்

அரசியல் நிர்ணயச் சட்டத்தை, பாதுகாப்பதில் உச்ச நீதிமன்றம் மிகப்பெரிய சரிவை சந்தித்து வருகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு – 21இன் உணர்வை பாதுகாத்திட தவறி விட்டது. ‘கோவிட்–19’ கொரோனா பேரழிவின் போது, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் பட்ட கஷ்டங்கள் சொல்லிமாளாது. அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால் வருவாய்க்கு வழி இல்லை. வாழ்வின் அடிப்படை தேவைகள் அவர்களின் கைகளுக்கு எட்டாதப் பொருளாக ஆகிப்போயின. அவர்கள் தங்கள் இல்லங்களுக் கும் திரும்பிட இயலவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்களைப் பாதுகாத்திட வேண்டும் என்பதற்காக உச்ச நீதிமன்றத்தை அனுகியபோது, முதலில் இந்த புகார்களைப் பெற்றுக் கொள்ள மறுத்தது உச்ச நீதிமன்றம், பின்னர் முடிந்த அளவுக்கு அவற்றைத் தள்ளிப் போட்டது. (ஏனெனில் தான் வழங்கிடும் தீர்ப்பு ஆளும் கட்சிக்கு எதிராகப் போய்விடுமோ என்ற பீதிதான்)

## புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் மரணமும், உச்ச நீதிமன்றமும்

புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் சார்பில் செய்யப்பட்ட புகார்களில் பல சர்ச்சைக்குரிய சொற்களை சொன்னது. ஒரு கட்டத்தில், அவர்களுக்கு இரண்டு வேளை சாப்பாட்டை அரசு வழங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னது. அவர்களில் பலர் நடந்தே தங்கள் வீடுகளுக்குச் செல்கின்றார்கள். போகும் வழியில் அவர்கள் தண்ட வாளங்களின் மேல் தலை வைத்துத் தூங்கினார்கள். பலர் கொல்லப்பட்டார்கள். இதையெல்லாம் உச்ச நீதிமன்றத்தில் சொல்லிய போது, “அவற்றையெல்லாம்” எப்படி தடுப்பது எனக் கேட்டது”



உணவு பெறும் உரிமை வழக்கு, சுற்றுப்புறச் சூழல் வழக்கு என வந்தபோது எங்கே நாம் அரசுக்கு எதிராகப் போய்விடுவோமோ என்ற பீதியில் அரசின் கொள்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது எனக்கூறி தன் பொறுப்பை தட்டிக் கழித்தது. ஆனால், இதுபோன்ற வழக்கு களின் முந்தைய காலங்களில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, நல்ல தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் தந்திருந்தது. அப்போது நீதிமன்றமே நல்ல கொள்ளைகளை வகுத்துத் தந்தது அவற்றைச் செயல்படுத்தும்படி சொன்னது.

> ஏப்ரல் திங்கள் 2019 ஆண்டில் NIA என்ற தேசிய முகவாண்மைக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கிட வேண்டும் என உச்ச நீதிமன்றம் எடுத்த தவறான அணுகுமுறை கீழே உள்ள உயர்நீதி மன்றங்களின் கைகளைக் கட்டிப் போட்டு விட்டது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விவகாரத்தில் அரசே சிறந்த நீதிபதி எனக்கூறி தன்னை விட அரசை தூக்கிப்பிடித்தது உச்ச நீதிமன்றம். (அப்படியானால் உச்ச நீதிமன்றம் என்றொன்று எதற்கு? என்றொரு கேள்வியை யாரும் கேட்கவில்லை)

இப்படிச் சொன்ன நீதிமன்றம், பின்னர் தானாக முன்வந்து வழக்கை, மிகவும் தாமதமாகவே கையிலெடுத்தது. (இதற்குள் பல நூறு நீதிபதிகளும் வழக்கறிஞர்களும், சமூக ஆர்வலர்களும் உச்ச நீதிமன்றத்தின் போக்கை விமர்சித்து கடிதங்களை எழுதி உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள். மோடியை ஆதரிக்காமல் தங்கள் சொந்தக்காலிலேயே நிற்க பழகிக் கொண்ட பல ஊடகங்களும், பத்திரிகைகளும் இந்தக் கடிதங்களை வெளியிட்டு உச்ச நீதிமன்றத்தை கலவரப்படுத்தின. அதன் பின்னரே தன்னிச்சையாக அந்த வழக்கை உச்ச நீதிமன்றம் கையிலெடுத்தது என்பது குறிப் பிடத்தக்கது)

உச்ச நீதிமன்றம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வழக்குகளைத் தள்ளியும், நீட்டியும் போட்டுக்கொண்டிருந்தபோது, பல உயர்நீதி மன்றங்கள், அந்த ஏழை பாழைகளின் உயிரைக் காப்பாற்றும் தீர்ப்பை வழங்கின. உயர் நீதிமன்றங்கள் வழங்கிய அந்தத் தீர்ப்புகளில், பகுத்தறிவு, நெஞ்சுரம், அன்பு, பரிவு ஆகியவை பளிச்சிட்டன. அவர்கள் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் என்றொரு சொல்லாட்சியையும் கொண்டுவந்தார்கள். அது குறித்த கேள்விகளை மாநில அரசுகளிடம் கொண்டுவந்தன உயர் நீதிமன்றங்கள்.

உயிர் கொடுத்த உயர் நீதிமன்றங்களின் செயல்முறைகளுக்கு நேர் எதிராக, உச்ச நீதி மன்றம் நடந்து கொண்டது. அங்கே மத்திய அரசின் வழக்கறிஞர்கள் சார்பில் (மனசாட்சியற்ற வாதம் ஒன்று முன் வைக்கப்பட்டது. அதில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனை என்பது பொய் செய்திகளின் உருவாக்கம் என்று கூறப்பட்டது. இதில் வேதனையும், வேடிக்கையும் என்னவெனில், உச்ச நீதிமன்றம், இதனை ஏற்றுக் கொண்டது. அத்தோடு ஊடகங்களைப் பொறுப்போடு நடந்து கொள்ளப்பணித்தது. (என்னே அதன் ஆழிய ஞானம்)

புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் காய்ந்த வயிற்றுக்கும் உதிர்ந்த உயிர்களுக்கும் நிவாரணம் வழங்க நேரம் கிடைக்கவில்லை, உச்ச நீதி மன்றத்திற்கு. ஆனால், பல ஆயிரம் டாலர்கள் மதிப்புள்ள கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாக நிலை குறித்து விவாதிக்கவும், ஒரு பெரிய ஊடகவியலாளர் என்று கருதப்படுகின்ற (சிறுமை மனிதன் அரவிந்த் கவ்சாமியின்) வர்களின் மேல் முறையீட்டு வழக்கை இரவு அமர்ந்து விசாரிக்க நேரம் கிடைத்தது. ஏனெனில் இவர்களிடம் (கிரிக்கெட் வாரியத்திடமும், ஊடகவியலாளரிடமும் பணமிருந்தது உச்ச நீதிமன்றத்தின் நேரத்தை வாங்கிட. ஆனால், புலம் பெயர்ந்த தொழிலாளர்களிடம் உச்ச நீதிமன்றத்தின் நேரத்தை வாங்கிட பணமில்லை. அரசுக்கு மனமில்லை அவர்களுக்கு உதவிட அரசோடு உச்ச நீதிமன்றமும் இணைந்து நம் உரிமைகள் பலவற்றை அழித்து அடையாளமில்லாமல் ஆக்கி விடுகின்றன. அவற்றுள் போராடும் உரிமையும், சுதந்திரமாக பேசும் உரிமையும் உண்டு.

## வீழ்ந்துபோன உரிமைகள்

இன்றைய ஆதிக்கவர்க்கம், இந்த உரிமைகளை இல்லாமலாக்க வேண்டும் என விரும்பு

கின்றது. அதற்கு உச்ச நீதிமன்றம் அமைதியாக ஆனால் அழுத்தமாக துணை போகின்றது. சில நேரங் களில் உச்ச நீதி மன்றம் வெளிப் படையாகவே அதிகார வர்க்கத் திற்கு துணை போகின்றது. இன்னும் பல நேரங்களில், அது அமைதி காப்பதன் மூலம் இந்த உரிமைகளை இல்லாமலாக்கு கின்றது. நமக்கு மிகவும் அதிமாகக் கவலை தந்திட வேண்டியது இதுதான்.

> “உபா’ (UAPA) வை நிரந்தரமாக அப்பாவிகள் மீது செலுத்துவதும், தொடர்ந்து பிணை மனுக்களை நிராகரிப்பதும், எதிர்த்துக் குரல் கொடுப் பவர்களின் குரல்வளையை நசுக்குவதும் பீமா கோரோகோனில் நடந்தது. இங்கே சிந்திப்பதே மிகப்பெரும் குற்றம் எனக் கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் தண்டனைகள் வழங்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.”

CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டம், அரசியல் அமைப்பிற்கு எதிரான சட்டம். இந்தச் சட்டத்தை மக்கள் எதிர்த் தார்கள். இதற்கெதி ராகவும், உச்ச நீதிமன்றத்தை அனுகினார்கள். ஆனால் உச்ச நீதிமன்றம் சில உப்பு சப்பற்ற காரணங்களைச் சொல்லி வழக்கை தட்டிக் கழித்தது. அதே நேரத்தில் அதிகாரவர்க்கம் (அரசு) அந்த போராட்டக்காரர்களை குரூர கரம் கொண்டு அடக்கிக் கொண்டிருந்தது. நிச்சயமாக அது விரக்தி வயப்பட்டு போராட்டத்தை எப்படியேனும் அடக்கி ஆக வேண்டும் என்பதற் காக மூர்க்கத்தனமான வழிமுறைகளைக் கை யாண்டது. தங்களை விமர்ச்சிக்கும் எல்லாக் குரல்களையும் ஒடுக்கியே ஆக வேண்டும் என்பது ஆளும் ஏதேச்சதிகாரிகளின் வன்மம். அதேபோல் மாற்றுக் கருத்துகள் இடம் பெற்றுவிடக்கூடாது என்பதும் அவர்களின் சதிகளுள் ஒன்று. நீதித்துறை அவர்கள் செய்யும் அட்டூழியங்களையும், அநியா யங்களையும் ஓர் ஓரத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. தவறியும் வாய்திறப்பதில்லை.

## டெல்லி கலவரங்கள் 2020

எதிர்ப்புகளை அடக்கி ஒடுக்குவதில் ஒவ்வொரு மாநிலத்திலும், ஒரு அணுகுமுறை கையாளப்படுகின்றது. உத்திரப் பிரதேசத்தில் முதலமைச்சர், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடுபவர்களைப் பழிவாங்குவேன் எனக் கூறினார். அதேபோல் சுதந்திரம், அடிமை யாக நடத்துவதிலிருந்து விடுதலை என்றெல்லாம் பேசுகின்றவர்கள் தேசத்துரோக குற்றத்தைச் செய்கின்றார்கள் எனப் பேசப்படு கின்றது.

அமைதியாகப் போராடு பவர்கள் மீது காவல் துறையை ஏவி கலவரங்களை நடத்துகின் றார்கள். அடியும் உதையும் வாங்கி எழுந்து நடக்க முடியா மல் துவளும் போராட்டக் காரர்கள் கைது செய்யப்படுகின் றார்கள். அவர்களின் வாகனங் கள் நெருப்பிடப்படுகின்றன. அவர்களின் இல்லங்களுக்குள் புகுந்து துவம்சம் செய்கின்றார் கள். இதில் முக்கிய இலக்குகளாக முஸ்லிம் இளைஞர்கள் குறி வைக்கப்படுகின்றார்கள்.

தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டாஸ் சட்டம் போன்ற வழக்குகள் முஸ்லிம் இளைஞர்கள் மீது புனையப்படுகின்றன உத்திரப் பிரதேசத்தில்.

## தீர்ப்புகளுக்கெதிராக வன்முறை - முஸ்லிம் இளைஞர்கள் இலக்கு

இதில் டெல்லி கலவரங்கள் தாம் மிகவும் முக்கியமாகக் கனன்று கொண்டிருக்கின் றன. நேர்மையான கருத்துக்களைச் சொல்லுபவர் களையெல்லாம் அரசு குறி வைக்கின்றது. இப்படி நேர்மையாகக் கருத்துக்களைச் சொல்பவர்கள், நேர்மையாக போராடவும் செய்கின்றார்கள். சிலபல நேரங்களில் ஓரங்க நாடகங்களையும் நடத்துகின்றார்கள். நிராயுத பாணியாக நின்று அமைதி வழியில் போராடிக் கொண்டிருந்த மாணவர்களை காவல்துறையை ஏவி தாக்கி னார்கள். அபூர்வானந்த் யோகேந்திர யாதவ், ஆகியசமூக ஆர்வலர்கள் உள்நோக்கம் ஏதுமின்றி,



கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதற்காக வழக்குகளில் இணைக்கப்பட்டார்கள்.

டெல்லியைப் பொறுத்தவரை ஆளும் கட்சி யின் அதிகார வர்க்கத்தின் உத்தி. எதிர்ப்பட்ட எல்லோரையும், டெல்லி கலவர வழக்கில் இணைப்பது தான். அதில் கிரிமினல் குற்றச் சாட்டுகளை சுமத்தி விடுகின்றார்கள். சட்டத் திற்கு விரோதமாகக் கூடினார்கள். கிரிமினல் சதித்திட்டங்களைத் தீட்டினார்கள் என்பன போன்ற அன்றைய காலனி ஆதிக்க சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. மூச்சுவிட்டாலே தேசத் துரோக வழக்குப் பாய்ந்து விடுகின்றது. உடனே யே, முதல் மூச்சிலேயே, "உபா" (UAPA) என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடுப்புச் சட்டம் பாய்ந்து விடுகின்றது.

அதேநேரத்தில் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள், வன்முறையைத் தூண்டும் வகை யில் உணர்ச்சியூட்டும் உரைகளை உதிர்க்கின் றார்கள். ஆச்சர்யப்படத்தக்க அளவில் அவர்கள் மீது எந்த குற்ற நடவடிக்கையும் இல்லை.

மாறாக ஒரு நீதிபதி (நீதி அரசர் முரளிதர்) சில நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டார். உடனே யே அவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்திற் கெதிராக வாய்திறந்தால் கைது என்பதே அரசின் நடைமுறைச் சட்டம், குடியுரிமை சட்டத்திற் கெதிராகச் சொல்லப்படும் கருத்துக்கள் எவ்வளவு அறிவுப் பூர்வமானதாக இருந்தாலும் சட்டப் பூர்வமாக இருந்தாலும் கைது மட்டுமே ஆட்சியாளர்களின் பதில். அடுத்து தேசத்துரோகி என்றபட்டமும் சூட்டப்படும். உடனேயே சட்டத்தைச் செயல்படுத்துவோர் சந்திக்குவந்து, தங்கள் கெடுபிடிகளைத் தொடங்கி விடுவார்கள். குடியுரிமை திருத்தச் சட்டம் நமது அரசியல் சாசனத்திற்கு முற்றிலும் எதிரானது என்பதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை.

குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்ப் பவர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டவர்கள். அவர்கள் ஓர் ஆயுத புரட்சி வழி நாட்டை துண்டாட துடிக்கின்றார்கள் என்றெல்லாம் காவல்துறை பொய்யுரைகளைப் புனைந்து வழக்குகளாய் பதிவு செய்கின்றது. இத்தோடு இன்னொரு கதையையும் அரசு சொல்லுகின்றது. அது, முஸ்லிம்கள் அரசுக்கு எதிராக சுமந்து திரியும் கசப்புகள் உரிய நேரத்தில் இந்த அரசை வீழ்த்தப் பயன்படுத்தப்படும்.


முன்னாள் காவல்துறை அதிகாரி ஜூலியோ ரிபரியோ டெல்லி கலவரத்தை பற்றிய நேர்மை யானதொரு புலன்விசாரணை நடைபெற வில்லை எனக் கருதுகின்றார். அவர் 1984இல் சீக்கியர்களுக்கெதிராக நடந்த கலவரங்கள், அந்தப் பின்னணியில் நடந்த தவறான புலன் விசா ரணை போன்றதே இப்போது டெல்லிக் கலவரம் குறித்த நடந்த விசாரணையும் என்கின்றார்.

இந்தியாவில் வகுப்புக் கலவரங்கள் திரும்பத் திரும்ப நடந்துகொண்டே இருக்கின்றன. காரணம் கலவரம் செய்யும் இந்துத்துவ சக்தி

களுக்கு அரசும், காவல்துறையும் துணை நிற்கின்றது. அவன் சொன்னான், இவன் சொன்னான் எனப் பாதிக்கப்பட்டவர்கள் மீதே குற்றப் பத்திரிகைய தாக்கல் செய்யப்படுகின்றது. இதனால் டெல்லி கலவரத்தில் உண்மையிலேயே திட்டமிட்டு தாக்குதல் நடத்தியவர்கள், கொலைகளை நடத்தியவர்கள், கொள்ளை அடித்தவர்கள் இவர்களெல்லாம் இன்று உல்லாசமாக ஊர் சுற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதிகாரப் பீடத்தில் இருப்பவர்களுக்கும் டெல்லி காவல்துறையினருக்கும், கலவரக்காரர்களுக்கும் எங்கிருந்து வந்தது இவ்வளவு தைரியம். அத்தனையும் பலவீனப்பட்டுக் கிடக்கும் நீதித் துறையால் வந்ததே!

உச்ச நீதிமன்றம் கைகட்டி, வாய்ப்பொத்தி வெறும் வேடிக்கைப் பார்க்கும் நிறுவனமாக இல்லாதிருந்தால், டெல்லி கலவரத்தை காலத்தே அடக்கி இருக்கலாம். (பல அப்பாவி உயிர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும்) மக்கள் தாமாக உச்ச நீதிமன்றத்தை அணுகியபோது, அதில் தலையிட மறுத்துவிட்டது. தொடர்ந்து வழக்குகளைத் தள்ளிப்போட்டுக் கொண்டே இருக்கிறது. இது கலவரக்காரர்களுக்கு இன்னும் அதிகமான நெஞ்சுரத்தைத் தந்தது. அவர்கள் – இந்துத்துவ தீவிரவாதிகள் தங்கள் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் மத்திய அரசின் உதவி மட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியும் கிடைத்துவிட்டதாகக் கருதினார்கள்.



டெல்லிக் கலவரம் மட்டுமல்ல, அதைப் போன்றே எல்லா வழக்குகளிலும் அமைதிகாத்தது. இதன்மூலம் அதிகார வர்க்கத்திற்கு தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது. அரசுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் வாரக்கணக்கில் தள்ளிப்போட்டது. அவையெல்லாம் அவ்வளவு அவசரமான வழக்குகளோ அவசியமான வழக்குகளோ இல்லை எனக் காட்டிக் கொண்டது.

(உத்திரப் பிரதேச அரசு பல சட்டவிரோத செயல்களைச் செய்து வருகின்றது) அவற்றுள் ஒன்று. அது, CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்களின் புகைப்படங்களைப் போட்ட பதாகை ஒன்றை முச்சந்திகளில் வைத்தது. இதனை அகற்ற வேண்டும் என போராட்டக்காரர்கள், அலஹாபாத் உயர்நீதிமன்றத்தை அணுகினார்கள். அலஹாபாத் உயர் நீதிமன்றம் 24 மணிநேரத்திற்குள், அந்தப் பாதாகைகளை அகற்றிட வேண்டும் என ஆணைப் பிறப்பித்தது. உடனேயே உத்திரப் பிரதேச அரசு, உச்ச நீதிமன்றத்தை அணுகியது. உச்ச நீதிமன்றத்தில் அது இரண்டு நீதிபதிகளின் முன்வந்தது. அவர்கள் அலஹபாத் நீதிமன்றத்தின் தீர்ப்பு சரிதான். ஆனால், விவகாரத்தை மூன்று நீதிபதிகளின் அமர்வுதான் முடிவு செய்திட வேண்டும் எனக் கூறி வழக்கை குழப்பி, தள்ளி வைத்தனர். இதன்மூலம் பதாகைகளை 24 மணி நேரத்திற்குள் அகற்றிட வேண்டும் என்ற அலஹபாத் நீதி மன்றத்தின் தீர்ப்பை செயல்படாமல் செய்து விட்டது உச்சநீதிமன்றத்தின் துணையுடன் அந்த பதாகைகள் அகற்றப்படாமல் அப்படியே இருந்தன.

## உச்ச நீதிமன்றத்தின் இன்னொரு தகிடுதத்தம் NIA Vs ZAHOOR WATALI

ஏப்ரல் திங்கள் 2019 ஆண்டில் NIA என்ற தேசிய முகவாண்மைக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கிட வேண்டும் என உச்ச நீதிமன்றம் எடுத்த தவறான அணுகுமுறை கீழே உள்ள உயர்நீதி மன்றங்களின் கைகளைக் கட்டிப் போட்டு விட்டது. இதில் ஸஹூர் வாட் அலீ என்பவர் ‘உபா’ (UAPA) என்ற சட்டத்திற்குப் புறம்பான

நடவடிக்கைகள், தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதில் கைது செய்யப் பட்ட ஸக்கூர் அலீக்கு எதிரான சாட்சியங்கள் சட்டத்தின் முன் செல்லாதவையாகும். இதை உச்ச நீதிமன்றம் ஒத்துக்கொண்டது. சாட்சியங்கள் சட்டத்தின் முன்செல்லாதவை என்பதனால், அவர் இறுதியில் இந்த வழக்கில் விடுதலை அடைவார் என்பதும் உச்ச நீதிமன்றத்திற்கு தெரியும். ஆனால் அவர் வழக்கு முடியும் வரை சிறையிலேயே இருக்க வேண்டும். அவர் மீது போடப்பட்டுள்ள 'உபா' (UAPA) ஐ நீக்க முடியாது என உச்ச நீதிமன்றம் கூறிவிட்டது. இது (Evidence Act) என்ற சாட்சி யங்களின் சட்டங்களுக்கும் எதிரானது. பிணை விதிகளுக்கும் எதிரானது மட்டுமல்ல, நமது அரசியல் நிர்ணய சட்டத்தின் விழுமியங்களுக் கும் எதிரானது. இந்நிலையில் இப்போது 'உபா' (UAPA) என்ற வழக்கில் பிணை என்பது பித்த லாட்டமாக ஆகிப்போனது.

சாட்சியங்களின் மீது மிகப்பெரிய தடைகளை விதித்திருப்பதனால் குற்றம் சுமத்தப் பட்டவருக்கு பிணை கிடைக்காது என்ற நிலை வந்துவிட்டது. ஒருவரை காலவரையறை இன்றி சிறையில் வைப்பது மிகவும் எளிதாக ஆகிப்போ னது. இதனால் 'உபா' (UAPA) பேய்போல் முஸ்லிம் இளைஞர்களைத் துரத்துகின்றது.

உச்ச நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பை, அரசு காவல்துறை நீதிமன்றங்களில் அரசுக்காக வாதாடும் வழக்கறிஞர்கள், இவர்களெல்லாம் ஆதாரங்கள் ஏதுமின்றி அப்பாவிகளை சிறையில் வைத்திட தாராளமாகப் பயன்படுத்தினார்கள்.

இப்போது அரசுக்கு எதிராக குரல் எழுப்பு பவர்கள் அனைவரும் இந்த 'உபா' (UAPA) என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடை சட்டத் தின் கீழ்தான் கைது செய்யப்படுகின்றார்கள். தேசத் துரோகம், சதித்திட்டம் என்றெல்லாம் குற்றச் சாட்டுகளைக் குவிக்கின்றார்கள். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் உயர்நீதிமன்றங்களின் கைகள் கட்டிப்போடப்பட்டுள்ளன. அதனால் பிணைகளை மறுக்கின்றன. வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதி என நிரூபிக்க இயலாத நிலை ஏற்படுகின்றது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த பாரதூரமான முடிவால் உயர் நீதிமன்றங்கள் உண்மையிலேயே எந்த ஒரு வழக்கிலும் சாட்சியங்களை சீர்தூக்கிப் பார்த்திட இயலாதவையாக ஆகிவிட்டன. இதனால் எல்லா வழக்குகளிலும், பிணையை மறுத்தே ஆக வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப் பட்டுவிட்டார்கள். இவையெல்லாம் நெருக்கடி காலத்தையே நமக்கு நினைவுறுத்துகின்றன. அந்த நெருக்கடி காலத்தில்தான் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்த நெருக்கடி காலத்தில் தான் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு நீதித்துறையை அணுகிட இயலாத நிலை வந்தது. நீதித்துறையும் மக்களின் உரிமைகளை மீட்க முடியாத கையறு நிலைக்கு வந்தது. (நெருக்கடி காலத்தின் போது நாங்களெல்லாம் கோழைகளாகிப் போனோம் என அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதிகளுள் ஒருவரான Y.V. சந்திரசூட் குறிப்பிட்டார்.) (Front LIne Dec-6,2019 - Page-12)

## நெருக்கடிகால பேரழிவைத் தவிர்க்க

நெருக்கடி காலத்தின் பேரழிவுகள் தவிர்க்கப் பட வேண்டும் என்றால், மேலே விவாதித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, திரும்பப் பெறப்பட வேண்டும் அல்லது அதன் கடுமையை தளர்த்த வேண்டும். இல்லையேல் தனிமனித உரிமைகள் பெருமளவில் பறிப்போய் விடும். பீமா கோரோகோன் வழக்கில் தலித் தலைவர்களும் சிந்திப்பதே குற்றம்.

### பீமா கோரோகோன் - தலீத் தலைவர்கள்

'உபா' (UAPA) வை நிரந்தரமாக அப்பாவிகள் மீது செலுத்துவதும், தொடர்ந்து பிணை மனுக் களை நிராகரிப்பதும், எதிர்த்துக் குரல் கொடுப் பவர்களின் குரல்வளையை நசுக்குவதும் பீமா கோரோகோனில் நடந்தது. இங்கே சிந்திப்பதே மிகப்பெரும் குற்றம் எனக் கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் தண்டனைகள் வழங்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல தனிமனிதர்கள் இப்படி சிறையிலடைக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிரான சாட்சி யங்கள், தட்டச்சு செய்யப்பட்ட, கையெழுத் திடாத, தேதியோ – நாளோ குறிப்பிடப்படாத, ஆவணங்கள். இவையெல்லாம் ஏற்கெனவே




பொதுத்தளத்தில் கிடைக்கின்றன. இவற்றை "வாராவாராவ் கௌதம்" நவ்காலாக ஆகியோரின் கம்ப்யூட்டர்களிருந்து பதிவிறக்கம் செய்திருக்கின்றார்கள். இதை வைத்துக்கொண்டு அவர்கள் ஏதோ பதுக்கி வைத்திருந்தார்கள் என வழக்கை பதிவு செய்திருக்கின்றார்கள். இவர்கள் இந்தியாவில் ஒரு புரட்சியைக் கொண்டு வந்திட திட்டம் தீட்டினார்கள் என்றும் வழக்கு.

இந்தப் "புரட்சிக்கான திட்டம்" என்ற தலைப்பில் சில பகுதிகள் அவர்களின் கம்ப்யூட்டரில் இருந்ததாக சொல்கின்றார்கள். அந்த தலைப்பு Strategy And Tactics of the Indian Revolution "இந்திய புரட்சிக்கான உக்தியும், குயுக்தியும்" என்பதாகும். இந்த தலைப்பு ஆறு வருடங்களுக்கு முன்னால் வெளியிடப்பட்ட ஒரு நூலிலுள்ள ஓர் அத்தியாயமாகும். இதுவும் பொது தளத்தில், இணைய தளத்தில் எல்லா இடங்களிலும் கிடைக்கின்ற ஒன்றாகும்.

அதேபோல் சுதாபரட்வாஜ் (SUDHA BHARADWAJ) வழக்கில் 161 வாக்குமூலம் என்று எந்த (தனிப்பட்ட சாட்சியத்தின்) வாக்குமூலமுமில்லை.

இத்தனை பொய்யும், புரட்டும் நிறைந்த இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அப்பாவிகள் யாருக்கும் பிணை கிடைக்க வில்லை. காரணம் அவர்கள் மீது 'உபா' என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடை சட்டம் (UAPA) பாய்ச்சப் பட்டிருக்கின்றது.

## நீதிபதிகளுக்கு கண்கள்..?

இப்போது எல்லோர் மனதிலும் ஓர் வினா எழும், அது நீதிபதிகளுக்கு கண்கள் இல்லையா? என்பதே அது. ஆமாம் நீதிமன்றங்களோ, மனசாட்சியும் நீதியின் மீது நாட்டமும் கொண்ட, எந்த நீதிபதியோ பிணை வழங்கிட இயலாது. காரணம் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள (நாம் மேலே விவாதித்த) தீர்ப்பு. 'உபா' வந்துவிட்டால் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பக்கத்திலுள்ள தாரதம்மியங்களைப் பார்த்திட இயலாது.

இந்த வழக்குகளில் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகள் ஒரே மாதிரியானவை. சமூக ஆர்வலர்கள், அறிவாளிகள், பொதுத் தளத்தில் உலாவரும் அறிவுடைய ஆன்றோர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சமூக சேவை செய்தவர்கள் இவர்களெல்லம் முதலில் மாவோயிஸ்ட்டுகள் என்றும், சதித் திட்டக்காரர்கள் என்றும், தலித் மக்களை தவறாக வழி நடத்தினார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டு உபா (UAPA) வின் கீழ் கைது செய்யப்பட்டு பிணை இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இதில் சுதா பரட்வாஜ் (Sadha Bharadwaj) இரண்டு வருடங்களாக சிறையில் இருக்கின்றார். வராவார ராவ் (varavara Rao) இவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர். அவருடைய மருத்துவ சிகிச்சைக்காகக் கூட அவரை வெளிவர அனுமதிக்கவில்லை. இன்னும்

அடிக்கடி பலர் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். நவ்லாஹா வழக்கு "Navlakha's Case" என்பது, எப்படி உயர் நீதிமன்றங்கள் செயல்பட முடியாமல் தவிக்கின்றன என்பதற்கு உன்னதமான எடுத்துக்காட்டு. இதற்கு உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பே காரணம்.

நவ்லாகா உயர்நீதிமன்ற நீதிபதியின் முன்னால் தன்னை பிணையில் விடும்படி ஒரு மனுவை தாக்கல் செய்தார். அந்த மனு விசாரணைக்கும் வந்தது. ஆனால் நீதிமன்றத்திற்கு தகவல் சொல்லாமலே அவரை மும்பையிலுள்ள ஒரு சிறைக்கு மாற்றிவிட்டார்கள். இதை எப்படி? ஏன் செய்தீர்கள் என நீதிமன்றம் கேட்ட போது, அரசிடமிருந்து எந்தப் பதிலுமில்லை. ஆனால், இதனிடையே மத்திய அரசின் வழக்கறிஞர் இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் எடுத்துச் சென்றார். உச்ச நீதிமன்றம் முகத்தில் அறைந்தாற் போல், அவரது பிணை மனுவை நிராகரித்தது. இதனால் உயர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தவை எல்லாம் திடுதிப்பென ஒரு முடிவுக்கு வந்தன.

> “ஈரான் பிரிட்டிஷ் நாட்டின் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இந்த அறிக்கையை ரத்து செய்திட வேண்டும் எனக் கேட்டது. உச்ச நீதிமன்றத்தில் சமுதாய நலன் கருதிதான் இந்த சுற்றறிக்கை விடப்பட்டதாக கூறியது பிரிட்டீஷ் பொதுநிதி கருவூலம். ஈரான், நாங்கள் விதிகளுக்கு உட்பட்டுதான் எங்கள் வங்கியை நடத்துகின்றோம். ஆகவே எங்கள் வங்கிக்கு பணப் பரிவர்த்தனை செய்திடும் உரிமை முதன்மையானது என்றது. (இஃதோர் முதலீட்டு வங்கி அல்லாமல் வட்டி பரிவர்த்தனை உள்ள வங்கி அல்ல). பிரிட்டீஷ் உச்ச நீதிமன்றம், பிரிட்டீஷ் பொதுநிதி கருவூலத்தின் அறிக்கை செல்லாது எனத் தீர்ப்பு தந்தது. காரணம் ஈரான் வங்கியின் உரிமைக்கும் சமுதாய நலனுக்குமிடையே ஓர் சமநிலையை இந்த சுற்றறிக்கை கடைப்பிடிக்கவில்லை. இந்த அறிக்கை ஒருதலை பட்சமானது என்றது.
>
> (வழக்கு : Bank Mellat Vs Treasury).”

விடுவது. கஷ்மீர் வழக்கில் தான் ஒரு நீதிமன்றமாகவே உச்ச நீதிமன்றம் காட்டிடவில்லை. எடுத்துக்காட்டாக :

கஷ்மீரில் இணையதள சேவைகள் துண்டிக்கப்பட்ட வழக்கு. இதில் அனுராதா பாஷின் வழக்கு. மிகவும் முக்கியமானது. இணைய தள சேவைகள் துண்டிக்கப்பட்ட இந்த வழக்கில் நீதி மன்றம் உயர்வான கொள்கைகளைப் பேசியது.

கொரோனா காலத்தில் கஷ்மீரில் இணைய தள சவைகளை மத்திய அரசு துண்டித்துவிட்டதால் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பெற்றிட இயலவில்லை. மருத்துவ சேவைகள் மக்களை எட்டிடவில்லை. மருத்துவமனைகள் பற்றிய தகவல்களைமக்கள்பெற்றிடஇயலவில்லை. பாதுகாப்பு என்றொரு பூச்சாண்டியைக் காட்டி மக்களை இருட்டுக்குள் வைத்திருக்கின்றனர் என்றெல்லாம் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது.

இதில் உச்ச நீதிமன்றம் மருத்துவ உதவிகளைப் பெறுவது, தொலைத் தொடர்பு சாதனங்கள், இணையதளம் இவற்றையெல்லாம் பயன்படுத்துவது மக்களின் அடிப்படை உரிமைகள் என்றது. ஆனால் இந்த அடிப்படையில் எந்த உத்தரவையும் பிறக்க வில்லை. மாறாக, இணையதள வசதிகளைத் துண்டிப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவிடமே விவகாரத்தை அனுப்பியது இணைய தள சேவைகளை துண்டித்தவர்களே அந்த விவகாரத்தை முடிவு செய்ய வேண்டும் என்றது. இப்படி தனது அதிகாரத்தை மட்டுமல்ல, தனது கடமையையும் குற்றம் சுமத்தப்

## வழக்குளை விசாரிக்காமல் தப்பிப்பது உச்ச நீதிமன்றத்தின் உத்தி

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியின் இன்னொரு தன்மை என்னவெனில், நீதி செலுத்தாமல் – வழக்குகளைவிசாரணைக்குஎடுக்காமல்தப்பித்து

பட்ட குழுவிடமே விட்டுந்தந்தது.

அந்த வழக்கில் எழுப்பப்பட்டிருந்த அரசியல் சாசனத்தின் பிரிவுகள் 14,19,21 பற்றி விவாதித்திருக்க வேண்டும். உச்ச நீதிமன்றம் அதையும் செய்ய வில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு தான் எழுத வேண்டிய தீர்ப்பை ஒரு குழுவிடம் குத்தகைக்கு விட்டுவிட்டது.

தகவல் தொடர்பை கஷ்மீரில் துண்டித்தது சட்டப்படி செல்லுமா? செல்லாத என்பதைப் பற்றியும் தெளிவாக எதையும் குறிப்பிடவில்லை. இதனால் அந்த மக்களுக்கு 4G இணையதள சேவை கிடைக்காமல் போய்விட்டது.

அதிகார வர்க்கத்திடம் தீர்ப்பை ஒப்படைத்தது அரசியல் சாசன சட்டப்படி செல்லாத ஒன்று. மூத்த வழக்கறிஞர் அரவிந்த் டட்டார் இதை Justice Having been outsourced : நீதி வழங்குவதை நீதி மன்றத்திற்கு வெளியே உள்ளவர்களிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்றார்.

## கஷ்மீர் விவகாரங்களில் உச்ச நீதிமன்றம்

கஷ்மீர் விவாகாரங்களைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றம் தொடர்ந்து நீதி வழங்குவதை தவிர்த்தே வந்தது.

இன்னொரு வழக்கில் இதேபோல் இணைய தள முடக்கத்தால், மக்களது நோய்க்கு சிகிச்சை பெறும் உரிமை, கல்வி, வியாபாரம், பொருளாதாரம்இவையெல்லாம்பாதிக்கப்பட்டு கஷ்மீரில் வாழும் ஒரு கோடியே 30 லட்சம் மக்களும்



தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை விரிவாக விளக்கியபோது உச்ச நீதிமன்றம் உரிய உயர்நீதிமன்றத்தை அணுகுமாறு கேட்டது. நிச்சயமாக நமது உச்ச நீதிமன்றம் யதார்த்த பிரச்சனைகளுக்கு நீதி வழங்கிட விரும்பவில்லை. இதனால் நீதி மறுக்கப்பட்டு விடுகின்றது என்பதே உண்மை.

## வெளிநாடுகளில் உச்ச நீதிமன்றங்கள் வழங்கிக் கொண்டிருக்கும் நீதிகள்

நாட்டின் பாதுகாப்பும், தனி மனிதர்களின் உரிமையும் என்ற விவகாரத்தில் நம் நாட்டுக்கு வெளியே உள்ள நாடுகளில் எப்படி தீர்ப்பு வழங்கின என்பதைப் பார்த்திடும்போது நமது உச்ச நீதிமன்றத்திற்கும் அவற்றிற்கு மிடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமிருப்பதைப் பார்க்கலாம்.

### பிரிட்டன்

நீதிபதி 'மேக்மில்லன்' அவர்கள், லிவர் சைட்ஸ் VS ஆண்டர்சன் வழக்கில் இப்படிக் கூறினார். "நாடு போர்க்களத்தில் நின்று கொண்டிருக்கின்றது என்பதற்காக சட்டத்தை அரசு முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் விட்டுத் தந்திட முடியாது. நீதி மன்றங்கள் தங்களுடைய கண்காணிப்பை தளர்த்திட முடியாது."

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப்பின், (9/11) ஆங்கில நாடு 'பிரிட்டன்' (United Kingdom) தனது குடி மக்கள் அல்லாத அனைவரையும் அவர்களுக்கு தீவிரவாதத்தோடு தொடர் பிருந்தால் தடுப்புக் காவலில் வைத்திடவும், நாடு கடத்தவும் வகை செய்யும் சட்டம் ஒன்றை இயற்றியது. அந்நாட்டு நீதிமன்றம் அந்தச்சட்டம் செல்லாது என அறிவித்தது. (A.V.Secretary of State for the home department.) நீதிமன்றம் சொன்ன காரணங்களுள் ஒன்று பிரிட்டன் நாட்டில் குடியேறிட வந்தவர்களிடையே பாரபட்சம் காட்டுகின்றது இந்தச் சட்டம். அடுத்து பொட்டில் அறைந்தாற்போல் இன்னொரு

காரணத்தையும் சொன்னது. “நாட்டின் பாது காப்பு என்பது அரசியல் மற்றும் நாடாளுமன்ற விவாதத்திற்கு உட்பட்டது. ஆனால் தனி மனித உரிமைகள் என்பன நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டது”

## அமெரிக்கா

அமெரிக்காவில் ஒரு வழக்கில், அரசின் இராணுவ ஆணையம் என்ற அமைப்பை செல்லாதது என அறிவித்தது. காரணம், அந்த ஆணையம் இரண்டு பொது விதிகளுக்கு எதிரானது என்றது. ஒன்று "Uniform code of Military Justice" அதாவது எல்லோருக்கும் ஒன்றுபோல இராணுவ நீதி கிடைக்க வேண்டும் என்ற பொது விதிக்கு எதிரானது.

அடுத்து அது அமெரிக்கா கையெழுத்திட்ட ஜெனிவா ஒப்பந்தத்திற்கு எதிரானது. இதில் மிகவும் ஆச்சர்யம் என்னவெனில் அமெரிக்காவின் இராணுவ ஆணையம் கவுண்டனாமோ சித்திரவதைகளை நியாயப்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்க உச்ச நீதிமன்றம். இந்த ஆணையம் செல்லாது எனச் செல்லி விட்டது.

கவுண்டனாமோ சிறையை கொஞ்சம் கொஞ்சமாக கலைக்க நேரிட்டது. ஹம்தான் VS ரம்ஸ்ஃபீல்டு என்ற வழக்கில் ஹம்தான் ஓசாமா பின்லாடன் அவர்களின் வாகன ஓட்டி என்ற போதிலும், நீதிமன்றம் சற்றும் தயங்காமல் நீதியை, மனித உரிமையை நிலை நாட்டியது.

## ஈரான் வங்கியும், பிரிட்டீஷ் உச்ச நீதிமன்றமும்

பிரிட்டனில் ஈரான் வங்கி ஒன்று செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கு Bank Mellat




‘பேங்க் மில்லத்’’ என பெயர். இந்த வங்கி ஈரானின் ஏவுகணை தயாரிப்பிற்கும் வளர்ச்சிக்கும் நிதியுதவி செய்கின்றது என்றொரு குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் பிரிட்டீஸ் (UK) அரசின் பொதுநிதி கருவூலம் (Treasury) ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில் நாட்டில் யாரும் ஈரானின் வங்கியோடு பணப் பரிவர்த்தனை செய்திடக் கூடாது என்றது.

ஈரான் பிரிட்டிஷ் நாட்டின் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. இந்த அறிக்கையை ரத்து செய்திட வேண்டும் எனக் கேட்டது. உச்ச நீதிமன்றத்தில் சமுதாய நலன் கருதிதான் இந்த சுற்றறிக்கை விடப்பட்டதாக கூறியது பிரிட்டீஷ் பொதுநிதி கருவூலம். ஈரான், நாங்கள் விதிகளுக்கு உட்பட்டுதான் எங்கள் வங்கியை நடத்துகின்றோம். ஆகவே எங்கள் வங்கிக்கு பணப் பரிவர்த்தனை செய்திடும் உரிமை முதன்மையானது என்றது. (இஃதோர் முதலீட்டு வங்கி அல்லாமல் வட்டி பரிவர்த்தனை உள்ள வங்கி அல்ல). பிரிட்டீஷ் உச்ச நீதிமன்றம், பிரிட்டீஷ் பொதுநிதி கருவூலத்தின் அறிக்கை செல்லாது எனத் தீர்ப்பு தந்தது. காரணம் ஈரான் வங்கியின் உரிமைக்கும் சமுதாய நலனுக்கு மிடையே ஓர் சமநிலையை இந்த சுற்றறிக்கை கடைப்பிடிக்கவில்லை. இந்த அறிக்கை ஒருதலை பட்சமானது என்றது. (வழக்கு : Bank Mellat VS Treasury).

நிச்சயமாக நமது உச்ச நீதிமன்றம், பிரிட்டீஷ் உச்ச நீதிமன்றம், அமெரிக்க உச்ச நீதிமன்றம் போன்ற தங்கள் முன்மாதிரி உச்ச நீதிமன்றங்களிலிருந்து பாடம் படிக்க வேண்டும். தனது மனதை ஆழமாக செலுத்தி தீர்ப்புகளை வழங்கிட வேண்டும்.

## ரோஸ்டரின் மாஸ்டர் MASTER OF THE ROSTER

விளக்கம் :

(உச்ச நீதிமன்றத்தில் பல அமர்வுகள், சில அமர்வுகளில் ஓரிரு நீதிபதிகள் அடங்கிய அமர்வுகள் இருக்கின்றன) இதில் எந்த வழக்கை எந்த அமர்வுக்கு அனுப்புவது என்பதை தீர்மானிப்பது யார்? என்றொரு சர்ச்சை எழுந்தது. இதைத்தான் யார் ரோஸ்டரின் மாஸ்டர் என்கின்றார்கள். பெரும்பாலும் எந்த வழக்கை,

எந்த நீதிபதிகளின் அமர்வுக்கு அனுப்புவது என்பதை தலைமை நீதிபதியே தீர்மானிக்கின்றார். அதனால் அவரே ரோஸ்டரின் மாஸ்டர் என்கின்றார்கள்.

நீதித்துறை அதன் அனைத்துத் தனித் தன்மைகளையும் இழந்து அதலபாதாளத்தில் வீழ்ந்துவிட்டது. இதற்குக் காரணம் (ஆளும் வர்க்கத்தின்) அதிகார வர்க்கம்தான் என்பது வெளிப்படையானதொரு இரகசியம். அதிகார வர்க்கம் இதனை எப்படிச் செய்கின்றது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. உச்ச நீதிமன்றம் ஆளும் அரசுக்கு சாதகமான நீதிபதிகளால் நிரப்பப்பட்டுள்ளது. இதனை விளக்க நாம் அதிகமான சக்தியை செலவிட தேவையில்லை. 30 நீதிபதிகள் ஒன்றுபோலவே சிந்திக்கின்றார்கள் என்பது நம்புவதற்குக்கடினமானது. ஆனால்சாத்தியமாகி இருக்கின்றது. ரோஸ்டரின் மாஸ்டர் ஒருவிதமான இந்திய தலைமை நீதிபதிகள் (நமக்கு ஆளும் வர்க்கத்திற்கு) “வேண்டிய நீதிபதிகள்” "Master of the Roster" "Certain kind of Chief Justices of India" இவை தனித்து இயங்கும் நீதித்துறையை துவம்சம் பண்ணிவிட்டது. இஃதோர் நயவஞ்சகம். ஆனால் அதுதான் இப்போது இந்தியாவின் நீதித்துறையில் நர்த்தனமாடிக் கொண்டிருக்கின்றது. தனித்துவமாக இயங்கும் நீதிபதிகள், நீதிக்கு உண்மையிலேயே விசுவாசமாக இருப்பவர்கள், இவர்களெல்லாம் பின்னுக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். அவர்களின் அமர்வுக்கு சில–தனி மனிதர்களின் விவகாரங்கள் மட்டுமே வருகின்றன. இந்த வழக்குகள் அவற்றில் வழங்கப்படும் தீர்ப்புகள், இவற்றால் எந்த விளைவும் ஏற்படப் போவதில்லை. நிறைய விமர்சகர்கள் ஒன்றை திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டார்கள். அது கடைசியாக இருந்த மூன்று தலைமை நீதிபதிகள், ரோஸ்டரின் மாஸ்டர்கள் என்ற பதவியைப் பயன்படுத்தி, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளை இப்போது ஓய்வு பெற்ற நீதிபதி அருண் மிஸ்ராவின் அமர்வுக்கு மாற்றினார்கள் என்பது.

இந்தியாவின் நீதித்துறை சுதந்திரமாகச் செயல்பட முடியாமல் போனதற்குக் காரணம், ஆளும் வர்க்கமும், அதிகார வர்க்கமும்தான். சிலபல நேரங்களில் இயற்றும், சட்ட மன்றங்களிலிருந்தும், நாடாளுமன்றங்களிலிருந்தும்



வருகின்றது. ஆனால், நீதித்துறையில் இருப்பவர்களை இதர இடங்களுக்கு மாற்றிடலாம் என்பது முற்றிலும் மாறுபட்ட ஒருகதை. இன்றைய சூழ்நிலையை பல ஆண்டுகளுக்கு முன்னரே 1985–ல் தலைமை நீதிபதி Y.V. சந்திரசூட் இப்படிக் குறிப்பிட்டார்.

நீதித்துறையின் சுதந்திரத்திற்கு பல ஆபத்துக்கள் இருக்கின்றன. இந்த ஆபத்துக்கள் நீதித்துறைக்கு வெளியே இருந்து வருவதல்ல நீதிதுறைக்கு உள்ளே இருந்துதான் வருகின்றது.

எந்த ஒரு இதோ உபதேசமும் எந்த பயனையும் தந்திடாது. இப்போது செயல்படும் நீதித்துறையின் செயல்பாட்டில் மாற்றங்கள் எதையும் கொண்டு வந்திடாத வரை.

## ஜனநாயகங்கள் செத்து மடிந்தது எப்படி?

ஜனநாயகங்கள் எப்படி மடிந்தன என்பதைப் பற்றி ஸ்டீவன் லிவிட்கி என்பவரும், டேனியல் சிப்லாட் என்பவரும் இணைந்து நூல் ஒன்றை எழுதி இருக்கின்றார்கள். அதில் பெரும்பாலான ஜனநாயகங்கள் மடிந்தது இராணுவ தளபதிகளாலோ, இராணுவ சிப்பாய்களாலோ அல்ல. மாறாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளால்தான். (ஜனநாயகங்கள் மடிந்திருக்கின்றன.) அவர்கள் அந்த நூலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஜனநாயக நிறுவனங்களை கீழறுப்பு வேலைகளின் வழி ஒன்றுமில்லாமல் ஆக்கி இருக்கின்றார்கள் என்பதை விளக்கி இருக்கின்றார்கள். இதற்காக உலகெங்கும் நிகழ்ந்த பல நிகழ்வுகளை மேற்கோள் காட்டுகின்றார்கள்.

வாக்கெடுப்புகள் வேண்டாம் என்ற அளவில் முடிவுகளை எடுப்பது. அதற்கு சட்ட மன்றங்களும், நீதிமன்றங்களும் துணைபோவது. இவற்றையெல்லாம் செய்து கொண்டே ஜனநாயகம் நன்றாகச் செயல்படுகின்றது எனப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பது. இதுபோன்ற

சூழலை ஏற்படுத்தி அதில் தங்கள் விருப்பம் போல் ஆட்டம் போடுபவர்களை “தேர்ந்தெடுக் கப்பட்ட சர்வாதிகாரி” Elected Dictators என்கின்றார்கள் ஸ்டீவன் லிவிட்கியும் டேனியல் சில்லாட்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த சர்வாதிகாரிகள், ஜனநாயக நிறுவனங்களை தங்களுடைய ஆயுதங்களாகப் பயன்படுத்துகிறார்கள். இவர்கள் ஊடகங்களையும், தனியார் துறைகளையும் வாய்மூடி மௌனமாக இருக்கச் செய்து விடுகின் றார்கள். தங்களது எதிரிகளை வீழ்த்தவும், தங்கள் சுய நலங்களைப் பாதுகாக்கவும், அவர்கள் சட் டங்களை திருத்துகின்றார்கள். புதிய சட்டங் களைப் புனைகின்றார்கள். இதற்கு மேலும் சிலர் குரல் எழுப்பினால், அவர்கள் மீது தேசத்து ரோக வழக்குகளும், வருமான வரியை ஏய்த்த வழக்குகளும் புனையப்படுகின்றன. இப்படி அவர்கள் ஜனநாயகத்தின் பல்வேறு உறுப்பு களையும் ஜனநாயகத்தை அழிப்பதற்குப் பயன் படுத்துகின்றார்கள்.

பச்சையாகச் சொன்னால் இதுதான் இன்று இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் தலைகீழாக மாற்றிடும் பலம் ஒரு துறைக்கு உண்டு. அதுதான் நீதித்துறை. ஆனால் அதுவும் பாதைமாறி போய்விட்டது.

இதற்கு முன்னாலும் ஒரு வரலாறு உண்டு நீதித்துறைக்கு. அது நெருக்கடிகால பிரகடனம். அப்போதும் நீதித்துறை, உச்ச நீதிமன்றம் இந்த நாட்டு மக்களின் காலை வாரியது. ஆனால் பின்னால் அதுதன் தவறை உணர்ந்து மீண்டும், சரியான பாதைக்கு வந்தது.

இப்போதும் நிறைய நல்ல நேர்மையான நீதிபதிகளும், தலை சிறந்த வழக்கறிஞர்களுமிருக்கின்றார்கள். அவர்கள் மீண்டும் சட்டத்தின் ஆட்சியையும், அரசியல் சாசனத்தின் செயல் பாட்டையும் நிலை நிறுத்துவார்கள். இவர்கள் நிச்சயமாக தலை நிமிர்த்துவார்கள். நாட்டை அழிலிவிருந்து காப்பாற்றுவார்கள்.


70 ஆண்டுகளுக்கு முன் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள் அரசியல் நிர்ணய சாசன சபையில் சொன்னதை நினைவு கூறுகின்றேன். “நமக்கு மிகவும் நேர்மையான நீதிபதிகள் தேவைப் படுகின்றார்கள். அவர்கள் அதிகார வர்க்கத்தின் அலம்பல்களைப் பற்றிக் கவலைப்படாமல் நீதியின் பக்கம் நிலையாய் நிற்க வேண்டும். அந்த அதிகார வர்க்கத்தினர் எத்துணை வலி மைமிக்கவர்களாக இருந்தாலும் சரியே!”

மீண்டும் நாம் சிறந்த நீதியாளர்களைப் பெறுவோம் என நம்புவோம்.

– தமிழ் வடிவம் **MGM**

- Live Law -ஸ்

*18, செப்டம்பர் 2020–இல் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி A.P. ஷா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழ் வடிவம் இது. முன்னாள் நீதிபதி ஹோஸ்பெட் சுரேஷ் அவர்கள் நினைவாக ஆற்றப்பட்ட உரை.*



தலையங்கம்

# என்று தணியும் இந்த கொலை வெறி?

இந்த 2020−ம் ஆண்டின் துவக்கம் முதலே நமது காதுகளில் அதிகம் வந்து சேர்ந்த செய்திகள் மரணங்கள். எங்கு திரும்பினாலும் மரணச் செய்திகள். உள்ளூர் முதல் உலக நாடுகள் வரை முதிர்ந்த கிழம் முதல் வாலிப இளம் வரை எவரையும் விட்டு வைக்கவில்லை இந்த மரணம்.

இதற்குமேல் யாருடைய மரணத்தையும் ஏற்றுக் கொள்ள நம் காதுகளிலும் மனங்களிலும் இடம் இல்லை என்ற அளவுக்கு நம் மனங்கள் மாறிப்போயின. காரணம் ஊர்காரர்களில் இருந்து உறவுக்காரர்கள் வரை பல மரணங்களை பார்த்துவிட்டோம், பாதிக்கப்பட்டு விட்டோம்.

இப்படிப்பட்ட சூழலில் எவருடைய மனமும் மரணத்தை விரும்பாத நிலையில் சில செய்திகள் நம்மை இன்னும் அதிகம் காயப்படுத்துகின்றன.

இயற்கையாக உயிர்கள் பிரியும் நேரத்தில் சில நிமிட படுகொலைகளும் நடத்தப்பட்டுள்ளது. அதுவும் பச்சிளம் குழந்தைகள். குழந்தைகள் என்பதைவிட சில வாரங்களே ஆன, சில நாட்களே ஆன இன்னும் சொல்லப்போனால் சில மணிநேரங்களே ஆன பச்சிளம் குழந்தைகளை திட்டமிட்டு கொலை செய்துள்ளனர். அதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களும் சம்பவங்களும்....

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே மீனாட்சிபட்டி என்ற கிராமத்தில் வசித்து வரும் தம்பதிகள் வைரமுருகன்−சௌமியா இவர்களுக்கு முதலாவது இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. இதற்கிடையில் கடந்த ஜனவரி 30−ந் தேதி இரண்டாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இரண்டாவது பெண் பிறந்ததால் கவலையுற்ற பெற்றோர்கள் அந்த குழந்தையை கொலை செய்யத் திட்டமிட்டு கடந்த மார்ச் 2−ம் தேதி கள்ளிப்பால் ஊற்றி கொலை செய்துவிட்டு குழந்தை உடல் நலக்குறைவால் இறந்துவிட்டதாக வீட்டின் அருகாமையில் புதைத்து விட்டனர். கொலைக்கு வைரமுருகன் தந்தையும் (தாத்தா) உடந்தை. சம்பவம் அறிந்த அக்கம் பக்கத்தினர் அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து குழந்தையின் தாய் மற்றும் தந்தை, தாத்தா ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதைத் தொடர்ந்து அதே மதுரை மாவட்டம், சோழவந்தான், பூமேட்டுத் தெருவைச் சேர்ந்த தவமணி−சித்ரா என்ற தம்பதிக்கு ஏற்கெனவே மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். இதற்கிடையில் கடந்த மே மாதம் 10−ந் தேதி 4−வது பெண் குழந்தை பிறந்தது. மருத்துவமனையில் இருந்து அழைத்து வரப்பட்ட மறுநாளே, அதாவது குழந்தை பிறந்து 3−வது நாளே ஆன குழந்தை, உடல் நலக் குறைவால் இறந்து விட்டதாகக் கூறி வீட்டின் அருகே உள்ள முற்புதரில் புதைத்து விட்டனர். சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் அளித்த புகாரின் பேரில் விசாரித்ததில் 4−வதும் பெண் குழந்தை என்பதால் எருக்கம்பால் கொடுத்து குழந்தை யின் தந்தை மற்றும் அவரின் தாய்(பாட்டி) இருவரும் சேர்ந்து கொன்றுவிட்டதாக கூறினார்கள். இந்தச் சம்பவம் குழந்தையின் தாய் இல்லாத சமயத்தில் நடத்தப்பட்டதாக கூறியுள்ளனர். இருவரையும் வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ளனர்.

இதேபோன்று தேனி மாவட்டத்திலும் சுரேஷ்−அனிதா என்ற தம்பதிக்கு கடந்த பிப்ரவரி 26−ந் தேதி பெண் குழந்தை பிறந்தது. இவர்களுக்கு ஏற்கெனவே 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். மூன்றாவதாக பெண் பிள்ளை என்பதால் கணவனுக்குத் தெரியாமல் குழந்தை யின் தாய் மற்றும் அவரின் தாய் (பாட்டி) இருவரும் சேர்ந்து கள்ளிப்பால் ஊற்றி கொலை செய்துள்ளனர். இதற்கு மாமியாரின் தூண்டுதல்தான் காரணம் என்று கூறியுள்ளனர்.

இப்படி சம்பவங்களை இந்த வருடம் ஆரம்பம் முதல் இந்த நிமிடம் வரை பெண் குழந்தைகள் கொலையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

சமீபத்தில் செய்தியாக செப்டம்பர் 1−ம் தேதி தஞ்சை மாவட்டம், கும்பகோணம், மடாகுடி கிராமத்தில், மாரியம்மன் கோவில் குளத்தில் பிறந்து சில மணிநேரங்களே ஆன பெண் குழந்தை தொப்புள் கொடியுடன் இருப்பதாக தகவல்கள். போலீஸ் விசாரணை நடந்து வருகிறது.

இதுவரை 1 மில்லியன் பெண் கருக்களை வயிற்றிலே கண்டறிந்து அழிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில வருடங்களில் 2 முதல் 5 மில்லியன் வரை உயர வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வருகின்றன.

இந்தியாவின் மக்கள் தொகையில் பெண்கள் என்ற ஒரே காரணத்திற்காக மற்றும் கடந்த 3 தலைமுறைகளில் மட்டும் 50 மில்லியன் பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இறப்பு விகிதத்தின் கணக்கில் ஆண் குழந்தை இறப்பு விகிதத்தைவிட 75 சதவீதம் அதிகம் என்ற அதிர்ச்சித் தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் சிசு கொலை என்பது மற்ற நாடுகளையெல்லாம் விட சீனாவிலும் இந்தியாவிலும்தான் அதிகம் என்று ஐக்கிய நாடுகளின் சமூக மற்றும் பொருளாதாரத்துறை கூறுகிறது. கிட்டத் தட்ட ஒவ்வொரு நாளும் இந்தியாவில் 2000 சிசுக்கள் கருவிலேயே கலைக்கப்படுகிறது என்ற தகவலையும் தருகிறது.

இப்படி இவர்கள் திட்டமிட்டு பெண் குழந்தை களை மட்டும் கொலை செய்வதற்கு பெரும்பாலானோர் கூறும் காரணம் 1) வறுமை, 2) வரதட்சணை. நாம் பார்த்த

செய்திகளில் அவர்கள் கூறும் காரணமும் இவைதான். ஒன்றுக்குமேல் தொடர்ந்து பெண் குழந்தைகள். இவர்களுக்கு வயது வந்ததும் எப்படி திருமணம் செய்து வைப்பது, தொடர்ந்து வறுமையில் இருக்கின்றோம் இவர்களை எப்படி வளர்ப்பது என்று.

நாம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சமூக பிரச்சனைக்கும் நமது தலையங்கங்களில் இஸ்லாத்தைத் தீர்வாக முன் வைக்கின்றோம். காரணம், மனிதனை படைத்த இறைவனால்தான் மனித வாழ்வியலுக்கான வழிகாட்டுதலை வழங்க முடியும்.

பிரபல இணையதள பக்கமான WIKIPEDIA பெண் சிசுக் கொலை நடக்கும் நாடுகளை பட்டியலிடும் போது அரேபியாவைக் குறிப்பிடும்போது மட்டும் 7–ம் நூற்றாண்டுகளுக்கு முன் நடந்ததாகக் குறிப்பிடுகிறது.

7–ம் நூற்றாண்டுக்கு முன் நடந்தது என்ன?

அரேபிய மண்ணில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை என்பது 7–ம் நூற்றாண்டுக்கு முன், 7–ம் நூற்றாண்டுக்குப் பின் என்று தான் வரலாற்றைப் பார்க்க முடியும். இரண்டும் அவ்வளவு வித்தியாசப்பட்ட வாழ்க்கை முறை.

7–ம் நூற்றாண்டுக்கு முன் அவர்களின் வாழ்க்கை மிகவும் கரடுமுரடான, சரியான வழிகாட்டுதல் இல்லாத மிக கொடுமைகள் நிறைந்த வாழ்க்கை. நாம் இன்று பார்க்கும் தீமைகளை எல்லாம் விஞ்சிநிற்கின்றது அவர்களின் வாழ்க்கை.

இன்றுபோல் அன்றும் பெண் குழந்தைகளை கொலை செய்தார்கள் சற்று வித்தியாசத்துடன்.

பெண் பிள்ளைகள் பிறப்பதை சற்றும் ஏற்றுக் கொள்ள முடியாத மனோ நிலையில் வாழ்ந்தார்கள் அன்றைய அரபுக்கள். பெண் பிள்ளைகள் பிறந்தால் பிறந்த உடனேயே கொன்று விடுவார்கள். இது அவர்களின் வழக்கம். அவர்களின் கொலை என்பது நாம் பார்த்ததைவிட வித்தியாசமான கொடூரமான முறை.

குழந்தை பெற்ற தாய், தயார் ஆனவுடன் அந்தத் தாயின் கண் முன்னே ஒரு குழி தோண்டப்படும். குழந்தை பிறந்து வெளிவரும் போது அது ஆணா, பெண்ணா என்று பார்க்கப்படும் அது ஆணாக இருந்தால் சந்தோசமாக எடுத்துக் கொள்ளப்படும். பெண்ணாக இருந்தால் அந்த குழியில் அப்படியே போட்டு விடுவார்கள். மண்ணைப் போட்டு மூடி விடுவார்கள்.

இன்னொரு சம்பவம் ஒரு மனிதருக்கு பெண் குழந்தை பிறக்கும் அந்த குழந்தையை கொல்ல போகும்போது மனைவி அழுது கேட்டுக்கொண்டதற்கு இணங்க அந்த குழந்தையை விட்டுவிட்டான். அந்த குழந்தை வளர்ந்து வந்தது. தாய் கவனமாக அந்த குழந்தையை பார்த்து வந்தாள். ஒருமுறை கணவன் வந்து அந்தக் குழந்தையை விளையாடுவதற்காக வெளியில் அழைத்து போவதாகக் கூறி அழைத்தார். மனைவி பதறி மறுத்தார். விளையாடுவதற்குத்தான் என்று கூறி அழைத்துச் சென்றான். அனுப்பும்போது எதுவும் செய்துவிட வேண்டாம் என்று அனுப்பினாள் மனைவி.

சற்று தூரம் அழைத்துச் சென்றான் குழந்தையின் தந்தை. முதல் முறை வெளியில் செல்வதால் சந்தோஷத்துடன் கை விரல்களைப் பிடித்து விளையாடிக் கொண்டுச் சென்றது. ஒரு இடத்தில் பெரிய குழி தோண்டினார். அந்தக் குழந்தையை இறங்கச் சொன்னார். அந்தக் குழியில் குழந்தை இறங்கி விட்டாள். அந்தக் குழந்தை தந்தை புதுவித விளையாட்டு என்று எண்ணியது. அப்படியே அந்தக் குழந்தை, கதறக் கதற, குழியை மூடிவிட்டார்.

இப்படித்தான் இருந்தது அவர்களின் வாழ்க்கை முறை. இப்படி வாழ்ந்தவர்களுக்கு மத்தியிலே தான் இஸ்லாம் அறிமுகமானது. பின் நாட்களில் பெண் பிள்ளைகளை விரும்பி பெற்றுக் கொள்பவர்களாக மாறிப்போனார்கள்.

இஸ்லாம் பெண் பிள்ளைகளை கொலை செய்வதைக் கடுமையாக எச்சரிக்கிறது.

இறைவன் திருமறையில் இப்படிக் கூறுகிறான் :

மனிதர்களே நீங்கள் வறுமைக்கு பயந்து உங்கள் குழந்தைகளை கொலை செய்து விடாதீர்கள். நாம் அவர்களுக்கும் உணவளிப்போம். உங்களுக்கும் உணவளிப்போம். அவர்களை கொலை செய்வது நிச்சயமாக பெரும் பாவமாகும். 17:31

இன்னும் இப்படி எச்சரிக்கின்றான்.

அப்போது (மறுமைநாளில்) உயிருடன் புதைக்கப்பட்ட பெண் குழந்தைகளை நோக்கி கேட்கப்படும்.

எந்த குற்றத்திற்காக நீங்கள் உயிருடன் புதைக்கப்பட்டீர்கள் என்று. 81.8,9

நீங்கள் பெண்களுக்கு அவர்களுடைய 'மஹரை' (திருமணக் கட்டணத்தை) கண்ணியமான முறையில் கொடுத்து விடுங்கள். 4:4 (திருக்குர்ஆன்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்... பெண் பிள்ளைகள் பெற்றவர்களுக்கு இப்படிக் கூறினார்கள்.

2 பெண் குழந்தைகளை பெற்று அதை நல்ல முறையில் வளர்த்து திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்களுக்கு சொர்க்கம் என்றார்கள்.

இன்றைக்கு பெண் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கான, எத்தனையோ சட்டங்கள் இயற்றப்படுகிறது. அதில் ஏன்? தொட்டில் திட்டம் சட்டங்கள் இருந்தும், அது பல சமயங்களில் பயனற்றுதான் போய்விடுகின்றது.

மனிதனைப் படைத்த இறைவனால் தான் மனித வாழ்வியலுக்கான சரியான வழிகாட்டுதலை தர முடியும். அந்த இறைவனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இதுபோன்ற மாபாதக செயல்களை விட்டு வாழ முடியும்.

இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் மட்டுமே (திருக்குர்ஆன்)

# புத்தக மதிப்புரை




## இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு..?

இந்தியாவில் நடத்தப்படும் தீவிரவாத சம்பவங்களை புலனாய்வு செய்வதற்காகவே ATS (தீவிரவாத தடுப்பு பிரிவு) ஒன்று இயங்கி வந்தது. இதன் தலைவராக இருந்த கர்கரே மும்பை தாக்குதலில் கொல்லப்பட்டார். தனது நண்பன் கர்கரே கொல்லப்பட்டதன் பிண்ணனியை ஆராய தொடங்கிய IPS அதிகாரி எஸ்.எம்.முஷ்ரிப் அவர்களுக்கு அதிர்ச்சிகரமான பதில் கிடைத்தது.

இந்தியாவில் நடந்த குண்டுவெடிப்புகளுக்கு பின்னால் முழுக்க ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் அதன் கிளை அமைப்புகளும் இருக்கின்றன. இதற்கு உளவுத்துறை, ஊடகம், ராணுவம் என பல தரப்பில் இருந்து உதவிகளும் கிடைத்திருக்கின்றது என்பதை கண்டறிகிறார்.

இதனை "கர்கேரேயைக் கொலை செய்தது யார்?" என்றும் "26/11 நீதித்துறை மயங்கியது ஏன்" இரண்டு விரிவான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அதன் தொடர்ச்சியாகவே இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு என்ற 64 பக்கம் கொண்ட சிறு நூலையும் எழுதியிருக்கிறார்.

இந்த நூல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மூத்த பத்திரிக்கையாளர் குலாம் முஹம்மது அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே முஷ்ரிப் எழுதிய இரண்டு நூல்களையும் தமிழில் மொழியாக்கம் செய்தவர் குலாம் முஹம்மது.

இந்த புத்தகத்தை கண்டிப்பாக ஒவ்வொருவரும் படித்தாக வேண்டும். அப்போது தான் நம் நாட்டில் சூழப்பட்டிருக்கும் பாசிச பிடியை பற்றி நாம் விளங்குவோம்.

இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய சம்பவங்கள்,

புத்தகத்தின் ஆசிரியர் ஒரு IPS அதிகாரி என்பதால் ஒவ்வொன்றையும் மிகவும் ஆதாரப்பூர்வமாக கொடுத்திருக்கிறார்கள். தாங்கள் வைக்கும் குற்றச்சாட்டுக்கு காவல்துறையால், நீதித்துறையால் கொடுக்கப்பட்ட ஆவணங்களையே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

### ஆர்.எஸ்.எஸ்

அஜ்மீர் (2007), மக்கா மஸ்ஜீத் (2007), சம்ஜௌதா எக்ஸ்பிரஸ்(2006) மாலேகான் (2008), மொடாஸா (2008) நாண்டேட் (2006) பர்பணீ (2003) ஜாலாணா (2004) போர்னா (2004) லாம்பா கேரா, போபால் (ம.பி), கான்பூர் (2008), கண்ணுர்(2008) என மொத்தம் 13 குண்டு வெடிப்பு சம்பவங்களில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தீவிரவாதிகள் ஈடுபட்டிருப்பது காவல்துறையின் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உலகில் உள்ள அனைத்து பயங்கரவாத சம்பவங்களையும் ஆராய்ந்து அதனை ஆவணப்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த

வேண்டும் என்ற நோக்கத்தோடு Terrorism, Watch and warning என்ற அமெரிக்க அமைப்பு www.terrrorism.com என்ற ஒரு இணையத்தளத்தை நடத்தி வருகிறது. அதில் 2014ல் வெளியான கட்டுரையில் உலகில் உள்ள பயங்கரவாத அமைப்புகளில் ஒன்று ஆர்.எஸ்.எஸ் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் இந்தியாவில் நடந்த 14 தீவிர மான குண்டு வெடிப்பு சம்பங்களில் RSS ஈடுபட்டுள்ளது. இந்த குண்டுவெடிப்புகள் அனைத்தும் தாசஉ பயன்படுத்தப்பட்ட தீவிர பாதிப்பை உண்டாக்கும் குண்டுகள்.

இந்தியாவில் குண்டுவெடிப்புகளை நிகழ்த்து வதற்கு ஆர்.எஸ்.எஸ் மூளையாக செயல்பட்டா லும் அதனை செயல்படுத்த பல்வேறு கிளை அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது.

## அபினவ் பாரத்

ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பு தான் அபினவ் பாரத். 2002–2003ம் ஆண்டுகளில் நாட்டில் உள்ள தீவிர சிந்தனை கொண்ட பிராமணர்கள் பலர் இணைந்து அபினவ் பாரத் அமைப்பை உருவாக்கி னார்கள்.

அஜ்மீர் (2007), மக்கா மஸ்ஜீத் (2007), சம்ஜூதா எக்ஸ்பிரஸ்(2007), மாலேகான் (2006 மற்றும் 2008), மொடாஸா (2008) ஆகிய குண்டு வெடிப்புகளில் அபினவ் பாரத் சம்பந்தபட்டி ருப்பது உறுதி செய்யப்பட்டு குற்றப்பத்திரிக் கையாகவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

## சனாதன் சாஸ்தா

ஆர்.எஸ்.எஸ் உடைய மற்றொரு கிளை அமைப்பான சானதன் சாஸ்தா பல்வேறு தீவிரவாத வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த அமைப்புக்கும் தீவிரவாத வழக்கில் கைது செய்யப்பட்ட கர்னல் புரோகித்க்கும் தொடர்பு இருப்பது கோவா(2009) குண்டுவெடிப்பு விசாரணையில் தெரிய வந்தது.

எழுத்தாளர் கோவிந்த் பன்சாரே கொலை செய்யப்பட்ட வழக்கிலும் சனாதன் சாஸ்தாவை சேர்ந்த பயங்கரவாதி ஒருவனை கைது செய்திருக் கிறது காவல்துறை.

பன்வேல் (2008), தானா (2008), வாஷி (2008) ஆகிய குண்டுவெடிப்புகளில் சனாதன் சாஸ்தாவுடனான தொடர்பு நிரூபிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக் கிறது. இதில் இரண்டு வழக்குகளில் கைது செய் யப்பட்ட சனாதன் சாஸ்தா உறுப்பினர்கள் குற்றவாளிகள் என்று உறுதி செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட் டிருக்கிறது.

## முஸ்லிம்கள் மீது பழி

கர்கரே தீவிரவாத தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரியாவதற்கு முன்பு வரை இந்தியாவில் எங்கு குண்டு வெடித்தாலும் அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த குண்டு வெடிப்புக்கு காரணம் முஸ்லிம்கள் தான் என்று அரபு பெயரில் ஒரு அமைப்பின் பெயர் குறிப்பிடப்படும். இது தொடர் கதையாக இருந்தது.

ஆனால், 2008 மாலேகான் குண்டுவெடிப்பை கர்கரே ஆய்வு செய்ய தொடங்கிய பின் நாட்டில் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புக்கு பின்னால் இருந்த சதி கண்டறியப்பட்டது.

## மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கு

மாலேகானில் 2008ம் செப்டம்பர் 29ம் தேதி மாலேகான் நகரில் குண்டு வெடித்தது. இதில் 6 பேர் பலியானார்கள். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தார்கள். குண்டு வெடித்த சில மணி நேரங்களில் உளவுத்துறை இந்த குண்டுவெடிப்புக்கு காரணம் ஜெய்ஷ் இ முஹம்மது மற்றும் இந்தியன் முஜாஹிதீன் என்று அறிவித்தார்கள். ஊடகங்களும் இதை எடுத்துக் கொண்டு முதற்பக்க செய்தியாக வெளியிட்டன.

ஆனால், விசாரணையை தொடங்கிய கர்க ரேவுக்கு கிடைக்கும் ஆதாரங்கள் வேறு திசையை நோக்கி கொண்டு சென்றது. அது, குண்டுவெடிப் புக்கு காரணமாக இருந்த மோட்டார் சைக்கிள் சாத்வி பிரக்யா சிங் எனும் இந்துத்துவ பெண் சாமியாருக்கு உரியதாக இருந்தது. இந்த சாத்வி பிரக்யா தான் இன்று இந்தியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்

இதன் தொடர் விசாரணையில் பல்வேறு கைதுகள் நடந்தது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடந்த குண்டுவெடிப்பு முழுக்க

திட்டமிட்டு நிர்வாக மயமாக்கப்பட்ட ஒரு செயல் என்று கண்டறிந்தார்.

2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் தேதி கர்கரே கொல்லப்பட்டார். இந்த கொலையும் திட்டமிட்டு இந்துத்துவவாதிகளால் நிகழ்த்தப் பட்டது என்கிறார் எஸ்.எம்.முஷ்ரிப்.

## இராணுவத்தின் உதவி

கர்கரே அவர்களால் மாலேகான் குண்டு வெடிப்பில் கர்னல் புரோகித் என்ற இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மூன்று மடிக் கணிகளில் இருந்து இந்துத்துவ தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்த பல்வேறு குண்டுவெடிப்புகள் பற்றிய தகவல் வெளியானது.

“புரோகித் லேப்டாப்பில் இருந்தது என்ன?” புத்தகம் வேர்கள் பதிப்பகத்தால் போடப்பட்டி ருக்கிறது.

கர்னல் புரோகித் மூலம் இராணுவத்தின் கைகளில் இருக்கும் RDX வெடிகுண்டுகள் இந்துத்துவ தீவிரவாதிகளின் தீவிரவாத செயலுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் தெரிய வந்தது.

இந்த கர்னல் புரோகித் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு நடத்தும் பயிற்சி முகாம்களில் ஆயுத பயிற்சி அளிப்பவராகவும் இருந்துள்ளார். மத்திய பிரதேசத்தில் இவர் பயிற்சி அளித்தது குற்ற ப்பத்திரிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## அஜ்மீர், மக்கா மஸ்ஜீத், சம்ஜௌதா எகஸ்பிரஸ்

2007ம் ஆண்டு அஜ்மீர் தர்காவில் நடந்த குண்டுவெடிப்பில் இருவர் பலியானார்கள். அதே போல் மக்கா மஸ்ஜீதில் நடந்த குண்டு வெடிப்பில் 9 பேர் பலியானார்கள்.

குண்டு வெடித்த ஒரு மணி நேரத்திற்குள் உளவுத்துறை, இந்த குண்டுவெடிப்பிற்கு காரண மானவர்கள் லஷ்கரே தய்யிபா, ஹர்கத்துல் முஜாஹிதீன், ஜைஷ் இ முஹம்மது, மற்றும் சிமி அமைப்பு என்று அறிக்கை விட்டார்கள்.

அதே போல் பாகிஸ்தானிற்கும் இந்தியா விற்கும் இடையே சென்று வரும் சம்ஜோதா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பில் இந்தியாவின் பானிபட் நகரில் 68 பேர் பலியானார்கள்.

இந்த மூன்று குண்டுவெடிப்பிலும் இந்துத் துவ தீவிரவாதிகள் தான் ஈடுபட்டிருந்தனர். இதனை கைது செய்யப்பட்ட கர்னல் புரோகித் உண்மையா, பொய்யா எனக் கண்டறியும் நார்கோ சோதனையின் போது ஒப்புக் கொண்டார்.

## குற்றங்களை ஒப்புக்கொண்ட தீவிரவாதிகள்

தீவிரவாத சம்பவங்களுக்கு காரணம் என கைது செய்யப்பட்ட கர்னல் புரோகித் மற்றும் சாமியார் அசீமானநந்தா இருவரும் தாங்கள் குண்டு வெடிக்க உதவியதாகவும் இதில் பல்வேறு இந்துத்துவ அமைப்பினருக்கு தொடர்பு இருப்பதையும் ஒப்புக்கொண்டார்கள்.

கர்னல் புரோகித் நார்கோ சோதனையில் ஒப்புக்கொண்டார். சாமியார் அசீமானநந்தா நீதிமன்றத்தில் நடுவருக்கு முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அசீமானந்தாவின் வாக்குமூலம் என்று தனியாக வேர்கள் பதிப்பகம் மூலமாக புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது. பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## NIA

ATS (தீவிரவாத தடுப்பு படையின்) மீது நம்பிக்கை இழந்து அது முழுக்க அரசின் கைப்பாவையாக செயல்படுகிறது என்ற குற்றச் சாட்டின் அடிப்படையில் தீவிரவாத வழக்கு களை விசாரிப்பதற்காக NIA என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஒரு குண்டுவெடிப்பு வழக்கு சரியான திசையை நோக்கி நகரும் போது அது திட்ட மிட்டு விசாரிக்கும் அதிகாரியிடம் இருந்து மாற றப்பட்டு ATSக்கு மாற்றப்படும். இதன் பிறகு இந்துத்துவ தீவிரவாதிகள் நிகழ்த்திய குண்டு வெடிப்புக்கு அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டார்கள்.

2006ம் ஆண்டில் மாலேகான் குண்டு வெடிப்பு சம்பவத்தை ஆய்வு செய்த IG முக்கிய மான தடயங்கள் கிடைத்திருக்கிறது விரைவில் கைது செய்து விடுவோம் என்று அறிக்கை

விட்டார். ஆனால் அந்த வழக்கு அவசர அவசமாக ATS பிரிவுக்கு மாற்றப்பட்டு முஸ் லிம்கள் குற்றவாளிகளாக்கப் பட்டார்கள்.

இதன் பிறகு இத்தகைய வழக்குகளில் மறு விசாரனை NIAவின் வசம் ஒப்படைக்கப்பட்டது. NIA விசாரித்து மக்கா மஸ்ஜீத், அஜ்மீர் குண்டு வெடிப்பில் இந்துத்துவ தீவிரவாதிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது.

மாலேகான் மறு ஆய்வு வழக்கிலும் இந்துத் துவ தீவிரவாதிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது.

ஆனால், இதுவெல்லாம் NIA 2014க்கு முன் செய்தவை. 2014க்கு பின் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு NIA அமைப்பு தற்போது அரசின் கைப் பாவையாக செயல்படுவதை கண்கூடாக பார்க்கிறோம்.

## முஸ்லிம்கள் மீது புனையப்பட்ட குற்றச்சாட்டுகள்

இந்துத்துவ தீவிரவாத செயல்களுக்கு முஸ்லிம்கள் பலிகடாவாக மாற்றப்பட்டனர். அதில் காவல்துறை முஸ்லிம்களை எப்படி யெல்லாம் சிக்கவைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கு.

இதில் குற்றம் சாட்டப்பட்ட முஷாவரஹ் சௌக், குண்டுவெடிப்பு சம்பவத்தின் போது மாலேகான் நகரிலிருந்து 700 கி.மீ தொலைவில் இருக்கும் அயொத் மாகாணத்தில் இருந்தார்.

குண்டுவெடிப்பின் சூத்திரதாரி என்று குறிப்பிடப்பட்டிருந்த ஷப்பீர் மஸீஹுல்லாஹ் குண்டு வெடிப்பின் போது ஏற்கனவே காவல் துறையால் மற்றொரு வழக்கில் சிறையில் இருந்தார். இன்னொரு குற்றவாளியான நூருல் ஹுதைபா பல காலமாக காவல்துறை கண் காணிப்பு வட்டத்திற்குள் இருந்தவர்.

இப்படி 700 கி.மீ அப்பாலிருந்த ஒருவரை, குண்டு வெடிப்பின் போது சிறையில் இருந்த ஒருவர் என எந்த முகாந்திரமும் இல்லாமல் கூட முஸ்லிம்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள்.

ஆனால் இவர்கள் மீது குற்றசாட்டை உறுதி செய்ய காவலர்கள், இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள் எனவும், இவர்கள் குற்றம் செய்ததற்கு இரண்டு சாட்சிகள் இருப்பதாகவும், குற்றவாளி என்று உறுதி செய்ய குற்றம் சாட்டப் பட்டவர் வீட்டிலிருந்து குண்டு வெடிப்புக்கு தொடர்புள்ள மாதிரிகளை கைப்பற்றியதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். இப்படி தான் ஒவ்வொரு முறையும் முஸ்லிம்கள் கைது செய்யப்படும் போது திட்டமிட்டு சாட்சிகள் உருவாக்கப் படுகிறது.

## தானாக வெடித்த குண்டுகள்

புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடித்த இந்துத்துவ தீவிரவாதிகள் என்றல்லாமல் இறை வனின் செயலால் பல இந்துத்துவ தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். பல முஸ்லிம்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

2006ல் நந்தேத் நகரில் ஆர்.எஸ்.எஸ் தீவிர வாதிகள் வெடிகுண்டு தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட போது குண்டு எதிர்பாரா விதமாக வெடித்தது. இதில் இருவர் பலியானார்கள். நான்கு பேர் காயத்துடன் கைது செய்யப் பட்டார்கள்.

கைதானவர்கள் தாங்கள் ஆர்.எஸ்.எஸ் உறுப் பினர்கள் என்பதையும், தயாரித்த குண்டுகள் பர்பணீ, ஜால்னா, போர்னா ஆகிய பள்ளிவாசல் களில் வைப்பதற்காக தயாரிக்கப்பட்டது என்ப தையும் நார்கோ சோதனையில் ஒப்புக் கொண் டார்கள்.

அதே போல் 2008ல் கான்பூர் நகரில் குண்டு தயாரிக்கும் போது ஏற்பட்ட விபத்தில் ஆர்.எஸ். எஸ் ஊழியர்கள் பலியானார்கள். அங்கிருந்து பல்வேறு வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டது.

கேரளாவின் கண்ணூர் நகரில் இதே போல் 2008ல் வெடிமருந்து தயாரிக்கும் போது ஆர்.எஸ்.எஸ் ஊழியர்கள் பலியானார்கள். அப்போது அருகில் இருந்த ஸ்ரீ பிரகாசன் என்ற பாஜக தலைவரின் வீட்டிலிருந்து வெடி குண்டுகள் எடுக்கப்பட்டன.

மார்கௌன் நகரில் 2009ம் ஆண்டில் குண்டுகள் தயாரித்த ஆர்.எஸ்.எஸ் தீவிரவாதிகள் இருவர் பலியானார்கள்.

இப்படி இறைவனின் செயலால் மாட்டிக்

கொண்ட தீவிரவாதிகள் இவர்கள். ஒருவேளை இவர்கள் குண்டுகள் தயாரித்து அதனை வைத் திருக்கும் நிலையில் அந்த குண்டுவெடிப்புக்கும் முஸ்லிம்களை தான் கைது செய்திருப்பார்கள். அதனால் தான் இறைவனின் செயலால் முஸ்லிம்கள் காப்பாற்றப்பட்டார்கள் என்று கூறினேன்.

## போன்சாலா இராணுவ பள்ளி

போன்சாலா இராணுவ பள்ளி 1937ல் ஆர்.எஸ்.எஸ் ஸ்தாபகர்களில் ஒருவரான மூஞ்சேவால் தொடங்கப்பட்டது. தற்போது மஹாராஷ்டிராவில் இரண்டு பெரிய கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறது.

இந்த இராணுவ பள்ளியின் மூலம் குண்டுகள் தயாரிக்கும் வேலை போன்ற தீவிரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதும் இந்துத்துவ தீவிரவாதத்தை பற்றிய விசார ணையில் தெரிய வந்தது.

2001ம் ஆண்டு நாக்பூரில் உள்ள போன்சாலா இராணுவ பள்ளியில் 40 நாட்கள் 115 பயங்கர வாதிகள் இணைந்து பயிற்சி மேற்கொண்டதும் காவல்துறை குற்றப் பத்திரிக்கையில் குறிப் பிட்டிருக்கிறது. ஆனால், இந்த கல்வி நிறுவனம் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை.

## இந்துக்களுக்கு எதிரானவர்கள்

கோவாவில் 2009ம் ஆண்டு சனாதன் சாஸ்தா அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் குண்டு தயாரிக்கும் போது விபத்து ஏற்பட்டு பெரும் தீவிரவாத செயல் தடுக்கப்பட்டது.

இவர்கள் குண்டு வைக்க நினைத்தது பள்ளி வாசல்களிலோ, முஸ்லிம்கள் கூடும் இடங் களிலோ அல்ல. தீபாவளி அன்று இந்துக்கள் ஒன்று கூடும் பகுதியில் குண்டு வெடிக்க திட்டமிட்டிருந்தார்கள். வெடிகுண்டை அரபு மொழி பதிந்த ஒரு பையில் போட்டும், அந்த பையில் முஸ்லிம்கள் அதிகம் உபயோகிக்கும் அத்தர் வாசனை திரவியங்களை நிரப்பி வைப் பதற்கான தயாரிப்போடு இருந்தார்கள்.

அந்த குண்டு திட்டமிட்டபடி நடந்திருந்தால் இந்துக்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். முஸ் லிம்கள் மீது பழி போடப்பட்டிருக்கும். அப்பாவி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

## தமிழகத்தில் இந்துத்துவ தீவிரவாதிகள்

2008 ஜனவரி மாதம் 24ம் தேதி தென்காசியில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் குண்டு வெடித்தது. ஆரம்பத்தில் முஸ்லிம் அமைப்புகள் தான் காரணம் என குற்றம் சுமத்தப்பட்டன. அதன் பிறகு தீவிர விசாரணைக்கு பிறகு எட்டு இந்துத் துவ தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

வேண்டுமென்றே வெடிக்க செய்து முஸ்லிம் களுக்கு எதிராக கலவரத்தை தூண்டி விடுவதே தங்கள் நோக்கம் என குற்றவாளிகள் வாக்கு மூலத்தில் தெரிவித்தனர்.

## பழிக்கு பழி தான் குண்டுவெடிப்புகள்

ஒரு கட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தவுடன் இந்த குண்டு வெடிப்புகள் அனைத்தும் இந்துக்களின் கோயில்களில் முஸ்லிம்கள் வைத்த குண்டு களுக்குபழிவாங்கும்சம்பவம்தான்எனஅக்சர்தம் கோவில் குண்டுவெடிப்பை காட்டி நியாயப் படுத்தினார்கள்.

2002ல் அக்சர்தாம் கோவிலில் குண்டு வெடித்தது. இதனை முஸ்லிம் தீவிரவாதிகள் தான் செய்தார்கள் என கைது செய்தார்கள். அதன் பிறகு 12 ஆண்டுகள் கழித்து 2014ம் ஆண்டு மே மாதம் நீதிமன்றம் கைது செய்யப்பட்ட ஆறு பேரும் அப்பாவிகள் என்று விடுதலை செய்தது.

இந்த அக்சர்தம் கோவில் குண்டுவெடிப்பும் முஸ்லிம்களால் நிகழ்த்தப்பட்டதல்ல. இது கண்டிப்பாக இந்துத்துவ சதியாக இருக்கக் கூடும் என மறுவிசாரணைகாக கோரப்பட்டது. ஆனால் அது காதில் வாங்கப்படவே இல்லை.

## முஸ்லிம் அப்பாவிகள் சிறைகளில்

இப்படி இந்துத்துவ தீவிரவாதிகள் நிகழ்த்திய குண்டுவெடிப்பில் பல ஆண்டு காலங்கள் முஸ்லிம்கள் குற்றவாளிகளாக தங்கள் வாழ்க் கையை சிறையில் கழித்தார்கள். 10 ஆண்டு களுக்கு பிறகு நீதிமன்றம் விடுதலை செய்தது.

அக்சர்தம் கோவில் குண்டுவெடிப்பில் கைது செய்யப்பட்ட ஆறு பேரையும் நிரபராதிகள் என்று விடுதலை செய்த பின்னர் நீதிபதிகள்

இப்படி குறிப்பிட்டார்கள், "எண்ணற்ற அப்பாவி களை பிடிப்பதற்கு பதிலாக காவல்துறையினர் ஏதும் அறியாத அப்பாவிகளை கைது செய்து சிறையில் அடைத்து அவர்கள் மீது படு மோச மான குற்றங்களை சுமத்தி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள்."

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் 1996ம் ஆண்டு ஒரு குண்டு வெடித்தது. இதில் பல முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். 2010ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மதுரை உயர் நீதிமன்றக் கிளை வழங்கிய தீர்ப்பில் கைத் செய்யப்பட்டவர்கள் அப்பாவிகள். பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி சிறையில் தள்ளிய காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரை செய்தது.

காலுபூர் (2006) குண்டுவெடிப்பிற்கு பிறகு பல முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர். எட்டு ஆண்டுகள் கழித்து 2014ல் நீதிமன்றம் கொடுத்த உத்தரவில் கைது செய்யப்பட்டவர்கள் அனை வரும் அப்பாவிகள் என்று விடுதலை செய்தது.

## பயிற்சி முகாம்கள்

புனேவில் ஜெல்லட்டின் குண்டுகளை உபயோகிக்கும் பயிற்சி, நாக்பூரில் ஆயுதங்களை கையாளுதல், வெடுகுண்டு பயிற்சி, RDX வெடிமருந்து பயிற்சி, பெண்களுக்கான கத்தி, வாள், அரிவாள் கையாளும் பயிற்சி, துப்பாக்கி சுடுதல் பயிற்சி, வெடிகுண்டு தயாரிக்கும் பயிற்சி முகாம் என நாட்டில் 71 இடங்களில் இதுபோல் பயிற்சி முகாம் நடத்தப்பட்டிருப்பது காவல்துறையினர் குற்றப்பத்திரிக்கையில் பதிவு செய்திருக்கிறார்கள்.

## இன்னும் நிறைய தகவல்கள்

இப்புத்தகத்தில் இருக்கும் முக்கிய தகவல் களை மட்டும் தான் குறிப்பிட முடிந்தது. கண்டிப்பாக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு வரும் படிக்க வேண்டிய நூல். முஸ்லிம்கள் மீது எப்படியெல்லாம் சதித்திட்டம் தீட்டப்படுகிறது என்பதனையும் தெரிந்து கொள்ளலாம்.

30 ரூபாய் மதிப்புள்ள புத்தகம். மறக்காமல் படியுங்கள். மற்றவர்களுக்கும் பரப்புங்கள்.

– அபூ சித்திக்.


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்

பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது



ஹிமை: S.B.S. பஷீர்

•பாஸ்போர்ட் ஆன்லைன்
•விமான டிக்கெட்
•விசா சர்வீஸ்
•ECNR & PCC
•எம்பஸி அட்டெஸ்டட்
•GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:
12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789

# வேட்டையாடப்படும்

# முஸ்லிம் கல்வியாளர்கள்



டெல்லியில் பிப்ரவரி மாதம் அமைதியாக நடந்த சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களுக்கெதிராக நடந்த கலவரத்தில் **53** உயிர்கள் பறிபோனது. அந்த கலவரத்தில் பாதிக்கப்படவர்கள் மீதே வழக்கு போடுவதும், எந்த சாட்சியும் இல்லாமல் அவர்களை நீண்ட நாட்கள் சிறையில் அடைத்து வைக்கும் கொடுமையும் நடந்து வருகிறது.

இதில் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக இருந்த இடதுசாரி மாணவர்களும், முஸ்லிம் கல்வியாளர்கள் பலரும் சிறைப்படுதப் பட்டிருக்கிறார்கள்.

பிஞ்ரா தோட் அமைப்பை சேர்ந்த இடதுசாரி மாணவர்கள், குல்ஃபிசா பாத்திமா, காலித் சைபி, சர்ஜீல் இமாம், இன்னும் பல கல்வியாளர்கள் UAPA எனும் கொடுமையான சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அந்த வரிசையில் தற்போது உமர் காலித் என்ற கல்வியாளரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

### உமர் காலித் செய்த குற்றம் என்ன..?

உமர் காலிதின் என்ற மாணவர் அமைப்பின் தலைவர் டெல்லி கலவரத்திற்கு காரணம் என கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவரைப் போல் இன்னும் பல்வேறு மாணவர்களும் இதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதில் குறிப்பாக உமர் காலித் ஒரு வீடியோவில் இந்தியாவிற்கே விரோதமாக பேசியிருப்பதாக கூறுகிறார்கள். அந்த வீடியோவில் காலித் பேசியது,

“நீங்கள் வன்முறையை எங்களிடம் காட்டினால் நாங்கள் திருப்பி வன்முறையில் இறங்க மாட்டோம். நீங்கள் எங்கள் மீது வெறுப்பை காட்டினாலும் நாங்கள் உங்கள் மீது அன்பை காட்டுவோம். நீங்கள் உங்கள் கைகளில் லத்திகளை உயர்த்தினால் நாங்கள் தேசிய கொடி ஏந்துவோம்."

ஆனால், இந்துத்துவாவினரும், காவல்துறையினரும் நேரடியாக கலவரத்தில் ஈடுபட்ட காட்சிகள் வீடியோ





## டெல்லி கலவரம்

பதிவுகளாகவே இருக்கிறது, ஆனால், அவர்கள் மீது ஒரு வழக்கும் கூட பதிவு செய்யப்பட வில்லை. அதன்படி வெளிவந்த சில வீடியோக்கள்

முதலாவதாக, வீடியோவில் காவல் துறைக்கு ஆதரவாக காவல்துறையினருடன் கலந்து கலவரத்தில் ஈடுபட்ட சிஏஏ ஆதரவு போராட்டக்காரர்களை ஏன் கைது செய்யவில்லை ..?

மசூதிகளை கொழுத்தி விட்டு சிரித்துக் கொண்டே வீடியோ எடுத்து மகிழும் இந்த கயவர்களை ஏன் கைது செய்யவில்லை..?

செங்கற்களை கொட்டி கலவரத்திற்கு தயாராகும் கலவரக்காரர்கள் ஒருவராவது கைது செய்யப்பட்டார்களா?..

மருத்துவமனையின் மாடியில் இருந்து கலவரம் செய்து உதவிய சிஏஏ ஆதரவு போராட்டக்காரர்களை ஏன் கைது செய்ய வில்லை ?

கலவரத்தில் தங்கள் பங்களிப்பு தெரியக்கூடாது என சிசிடிவிக்களை உடைத்த காவலர்கள் ஒருவர் மீதாவது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ?

பிஜேபியின் தலைவர் நடு வீதியில் நின்று கலவரத்திற்கு முன்னால் பல நூறு மக்கள் முன்னிலையில் தேச விரோதிகளை சுட்டுத் தள்ளுங்கள் என்று முஸ்லிம்களை குறிப்பிட்டு பேசினார்?.. ஏன் அவரை கைது செய்யவில்லை?..

டெல்லி கலவரத்திற்கு மூல காரணமாக இருந்த கபில் மிஸ்ராவின், “சிஏஏ எதிர்ப்பு போராட்டக்காரர்களை நாளைக்குள் காவலர்கள் அப்புறப்படுத்தாவிட்டால் நாங்கள் அப்புறப்படுத்துவோம்” என்ற பேச்சைக் குறிப்பிட்டு இவர் மீது ஏதாவது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?..

பிபிசி போன்ற பத்திரிக்கைகள் காவல்துறை எப்படியெல்லாம் கலவரத்தில் பங்கெடுத்தது என்று தெளிவாக வீடியோ சாட்சிகளுடன் குறிப்பிட்டு செய்தி வெளியிட்டிருக்கிறது. இதில் ஒருவர் மீதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?..

இன்னும் இது போல் பல சம்பவங்கள் இருக்கிறது. கலவரத்திற்கு முக்கிய காரணமான வர்கள் யாரின் மீதும் வழக்கில்லை.

அமைதி, சகோதரத்துவம், இந்திய அரசிய லமைப்பு உரிமை என பேசியவர்கள் எல்லாம் சிறைக்கம்பிகளுக்கு பின்னால்! துப்பாக்கி ஏந்தி தெருவில் திரிந்தவர்கள், கொலை செய்தவர்கள், சுடுங்கள், கொல்லுங்கள் என்று சொன்ன வர்கள் எல்லாம் தாராளமாக வெளியில் சுற்றித் திரிகிறார்கள்.

## தான் பல வருடங்கள் சிறை வைக்கப்படலாம் – காலித்

உமர் காலித் தன் கைதுக்கு முன்பாகவே தான் டெல்லி காவல்துறையால் கைது செய்யப் படலாம் என்று ஊடகத்திற்கு கைதுக்கு முன் பாகவே பேட்டியளித்திருந்தார்,

அதில், காவலர்கள் உண்மையான குற்ற வாளிகளை பாதுகாக்க அப்பாவி மக்களையும், சிஏஏ எதிர்ப்பு போரட்டத்தை முன்னெடுத்தவர் களையும் குறி வைக்கிறார்கள். எனக்கெதிராக இப்போது பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கப் படுகிறது. எதற்கும் அவர்களிடம் ஆதாரம் இல்லை.

எப்படியும் நான் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதன் பிறகு என் மீது பல்வேறு பொய்ச்செய்திகள் திட்டமிட்டு பரப்பப்படும். எத்தனை ஆண்டுகள் சிறையில் இருக்க வருமென்று தெரியவில்லை. ஆனால், இறுதியில் என் மீது எந்த குற்றமும் இல்லை யென்று விடுதலை அடைவேன்.” என்று கூறியிருக்கிறார்.

உமர் காலித் குறிப்பிட்டது போலவே அவர் மீது பல்வேறு பொய்ச்செய்திகள் கட்ட மைக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் இந்துத் துவ பயங்கரவாதிகளால் பரப்பப்படுகிறது.

( தகவல் – News laundry 14.09.2020)

## UAPA சட்டம் கொடுமையானது – ஏன்?..

போலீசார் இத்தகைய பொய்க் குற்றச் சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படுவர்கள் UAPA பிரிவின் கீழ் தான் கைது செய்யப் படுகிறார்கள். இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் போது அப்பாவியாக இருந்தாலும்




அந்த தனிப்பட்ட நபரின் மொத்த வாழ்க்கையும் சீரழித்து விடும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

அப்பாவி ஒருவர் uapa கீழ் கைது செய்யப் படும் போது அவரை சிறைக்குள் வைக்க என்ன மாதிரியான வழிகள் பின்பற்றப்படுகின்றன.

கைது செய்து சிறையில் தள்ளிய பிறகு அவருக்கு எதிராக பொய் சாட்சியங்கள் உருவாக்கப்படும். அந்த சாட்சியங்களை நீதிபதிக்கு முன்பாக குற்றவியல் சட்டம் பிரிவு 164க்கு கீழ் பதிவு செய்யப்படும். தனக்கு எதிராக சாட்சியம் அளிக்கப்பட்டவரின் விவரங்கள் கைது செய்யப்பட்டவருக்கு வழங்கப்படாது.

கைது செய்யப்பட்ட ஆறு மாதத்திற்கு பிறகு குற்றப்பத்திரிக்கை கைது செய்த நபருக்கு தரப்படும். அப்போதுதான், தன் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கிறது என்பது கைது செய்யப்பட்டவருக்கு தெரியும். இந்த ஆறு மாத காலத்தில் பிணை வழங்கப்படாது.

ஆறு மாதத்திற்கு பிறகு பிணை வழங்கும் வாய்ப்புகள் இருப்பதால் குற்றப்பத்திரிக்கையில் மற்றொரு பிரிவில் வழக்கு பதிந்து மீண்டும் ஒரு ஆறு மாத காலம் சிறையிலேயே பிணை கிடைக்காமல் வைக்கப்படுவார்.

பிறகு விசாரணைக் காலம் தொடங்கப்படும். இப்போதும் கைது செய்யப்பட்டவருக்கு பிணை கொடுத்தால் சாட்சிகள் கலைத்துவிடுவார் என பிணை கிடைக்காமல் செய்து விடுவதற்கான சட்ட வழிகள் இருக்கிறது.

விசாரணைக்காலம் முடிய ஐந்து வருடங் களாவது ஆகும். இந்த ஐந்து வருடங்களும் கைது செய்யப்பட்ட நபர் சிறையில் கழிக்க வேண்டி யிருக்கும். இப்படி கைது செய்யப்பட்டு சிறைக் காலத்திற்கு பின் நிரபராதி என விடுதலை செய்யப்பட் டாலும் அவருக்கு எந்தவித நிவாரணமும் வழங்கப்படாது.

கேரளாவில் ISIS தீவிரவாதி என கைது செய்யப்பட்டவரின் வழக்கில் இப்படித்தான் நடந்தது. இறுதியில் அவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப் பட்டார். ஆனால், அதற்குள் நான்கு வருடங் களுக்குமேல் அவர் சிறையில் இருக்க வேண்டிய தாயிற்று.

இப்போது நடந்து கொண்டிருக்கும் பீமா கொரிகியன் (Bhima Koregaon) வழக்கும் இதை போன்று தான். நான்கு வருடங்களுக்கு மேல் கல்வியாளர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பிணையும் இல்லை. அவர்களுக் கெதிரான சாட்சியங்கள் நீதிமன்றங்களின் முன்னால் நிரூபிக்கப்படவுமில்லை.

இதுவரை UAPA வழக்குகள் பதிவு செய்த வழக்குகளில் 67% வழக்குகளில் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் குற்றமற்றவர் என்று நீரூபிக்கப்பட்டிருக்கிறார் அல்லது அந்த வழக்கு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அப்போது அந்த 67% வழக்குகளில் சிறைத் தண்டனை அனுபவித்த அப்பாவிகளுக்கான நீதி என்ன?..

UAPA பிரிவு 43(D) கீழ் கைது செய்யப்பட்ட நபரின் மீது எந்த சாட்சியங்கள் இல்லாத போதும் விசாரணை அதிகாரிகள் அவர் மீது குற்றச் சாட்டை சுமத்தினால் பிணை வழங்காமல் மறுக்க நீதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது.

காவல்துறை உள்நோக்கத்தோடு யாரை வேண்டுமானாலும் பல ஆண்டுகள் சிறைப் படுத்த முடியும் என்பது தான் UAPA சட்டத்தின் சாராம்சம்.

– அபூ சித்திக்.

# காஷ்மீர்

## அப்பாவி மக்கள் படுகொலை

காஷ்மீரின் சிறப்பு பிரிவு 370 ரத்துக்கு பிறகு காஷ்மீரை பற்றி சர்வதேச பத்திரிக்கைகள் குறிப்பிடும் போது திறந்த வெளி சிறைச்சாலை என்றே அழைக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 85 லட்சம் முஸ்லிமக்கள் தொகை கொண்ட காஷ்மீர் வெளி உலக தொடர்பற்று கிடக்கிறது. இன்றும் கூட காஷ்மீரில் பெரும் பாலான பகுதிகளில் 4G இணைய வேகம் தடை செய்யப்பட்டிருக்கிறது.

காஷ்மீரில் நடக்கும் நிகழ்வுகள் இந்தியாவில் செய்தியாக தர எந்த வெகுஜன ஊடகங்களும் முன்வராததால் அந்த செய்திகள் கூட நம்மை வந்து சேருவதில்லை.

1990களில் காஷ்மீர் பெரும் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டது. அப்போது போர் சூழலை காரணம் காட்டி அந்த அடக்குமுறைகள் நிகழ்த் தப்பட்டது. தற்போது அந்த காலகட்டத்தை விட மோசமான அடக்குமுறைகள் நிகழ்த் தப்படுவதாக காஷ்மீரக மக்கள் கூறுகிறார்கள்.

கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் பல காஷ்மீர அப்பாவி கள் இந்திய ஆயுத படை வீரர் களால் கொலை செய்யப் பட்டிருக் கிறார்கள். அதற்கெதிராக காஷ் மீரில் பல்வேறு போராட்டங்களும் தொடர்ந்து வருகிறது.

### மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொலை

ஜூலை மாத இறுதியில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொன்தாக செய்திகள் வெளியானது. ஆனால், செய்தி வெளியான சில மணி நேரங்களிலேயே மூன்று இளைஞர்களின் குடும்பத்தவர்களும் எங்கள் குழந்தைகள் அப்பாவிகள். அவர்கள் திட்ட மிட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று போராட்டங்களில் ஈடுபட்டனர்.

காவல்துறையினர் இறந்தவர் உங்கள் குழந் தைகள் அல்ல என்று கூறிவிட்டனர். ஆனால், குடும்பத்தார்கள் நம்பவில்லை. எங்களுக்கு உடல்களை காட்டுங்கள் என்று சொல்லியும் அதற்கு காவல்துறை அனுமதி தரவில்லை.

குடும்பத்தாரின் நீண்ட போராட் டத்திற்கு பிறகு இறந்தவர் களின் DNA சோதனை

ந ட த் த



ஏற்பாடு செய்யப்பட்டது. DNA சோதனையின் முடிவில் தங்களது குழந்தைகள் தான் கொல்லப் பட்டார்கள் என்று தெரிய வரும் என்கிறார் கொல்லப்பட்டதாக சொல்லப்படும் இளைஞரின் சொந்தக்காரர்.

மூன்று இளைஞரில் ஒரு இளைஞனுக்கு 16 வயது தான். அந்த 16 வயதுடைய இளைஞனின் சொந்தக்காரரான சலீம், இறந்து போன மூன்று உடல்கள் என சொல்லப்படும் புகைப்படத்தை பார்த்து அதிலிருப்பவர் தன் மாமாவின் மகன் என்று கூறியிருக்கிறார்.

இப்படியான குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையிலும் DNA மாதிரி எடுக்கப்பட்டு ஒரு மாதமான பிறகும் கூட கொல்லப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் மறைக்கப்பட்டே வைக்கப் பட்டிருக்கிறது.

## 26 வயது இளைஞன் காவல்துறை கஸ்டடியில் கொலை

26 வயதான இர்ஃபான் தார் மூன்று ஆயுத படை வீரர்களால் சோதனை என்ற பெயரில் அழைத்து செல்லப்படுகிறார். இது சிசிடிவி யிலும் பதிவாகியுள்ளது.

இதை தொடர்ந்து இர்ஃபானின் சகோதரன் ஜாவித்தும் காவல்நிலையத்துக்கு அழைத்து செல்லப்படுகிறார், அங்கே அவரிடம் சில மனிதர்களை பற்றி விசாரிக்கப்படுகிறது. அப்பகுதியின் பெரிய மனி தர்கள் அனைவரும் காவல் நிலையத்திற்கு வரவே ஜாவித் வீட்டுக்கு அனுப்பபடுகிறார். அப்போது தன் சகோதரன் இர்ஃபான் தங்களிடம் இருப் பதாகவும் நாளை காலை அவனை விடுவிப்பதாகவும் அதிகாரி ஒருவர் கூறியிருக் கிறார்.

ஆனால், காலையில் தன் தம்பி இர்ஃபான் இறந்து விட்டதாக செய்தி வருகிறது. இரவு 12 மணிக்குமேல் இஃர் பானிடம் இருந்து வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும், மேலும் வெடிகுண்டுகள் இருக்கும் இடத்தை அடை யாளம் காட்டுவதற்காக அழைத்து செல்லப் பட்ட போது தப்பிக்க முயற்சித்ததால் கொல்லப்பட்டதாகவும் காவலதுறையால் சொல்லப்படுகிறது.

குடும்பத்தார்கள் இதனை முழுமையாக மறுக்கிறார்கள். இர்ஃபானை அழைத்து சென்றது சிசிடிவியில் பதிவாகியிருக்கிறது. அவனிடம் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை. அவனை திட்டமிட்டு படுகொலை செய்திருக்கிறார்கள்.

இது காஷ்மீரில் ஒன்றும் புதிதல்ல. எங்கள் இளைஞர்களை இவர்கள் இப்படியான அநியா யங்களை செய்து தான் கைகளில் ஆயுதங்களை ஏந்த வைக்கிறார்கள். இதனால் தான் எங்களுக்கு இந்த அநியாய அரசிடமிருந்து சுதந்திரம் வேண்டு மென்று கூறுகிறோம். என அங்கிருக்கும் ஒரு தாயார் குறிப்பிடுகிறார்.

இர்ஃபானின் நண்பர் ஒருவர் கூறும் போதும், இர்ஃபான் நல்ல மனிதர், சமீபத்தில் அவரது தந்தை இறந்த பிறகு மிகவும் உடைந்து போய் விட்டான். மீண்டும் தற்போது தான் வேலையில் கவனம் செலுத்த தொடங்கினான். அவன் கொல்லப்பட்டது அதிர்ச்சி தருகிறது. வெகு புத்திசாலித்தனமாக அவனது உடலை குடும்பத்தாரிடம் தராமல் குடும்பத்தின் சில உறுப்பினர்களை வைத்தே காவல்துறையினர்



புதைத்து விட்டார்கள் என்கிறார். (தகவல்: Kashmirwalla 15.09.2020)



## 45 வயது பெண் படுகொலை

காஷ்மீர் ஸ்ரீ நகர் மாவட்டத்தில் பாதமல்லு பகுதியில் உள்ள 45 வயதான கௌன்சர் என்ற பெண்மணி செப்டம்பர் 17ம் தேதி காலை 3.30 மணிக்கு ரொட்டி வாங்குவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்துள்ளார். அவரை அழைத்து செல்ல அவரது 25 வயது மகன் அகீப் உடன் வந்துள்ளான்.

அகீப் வண்டி எடுத்து வீட்டிற்கு வெளியே வருவதற்குள் ஆயுத படையினரால் அகீபின் அம்மா கௌன்சர் துப்பாக்கி குண்டுகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் துப்பாக்கி குண்டுகளால் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் எந்த தீவிரவாதிகளும் பிடிபடவில்லை. இருந்தும் இராணுவத்தினர் அநியாயமாக கொலை செய்திருப்பதாக அப்பகுதியினர் போராட்டம் செய்தனர்.

3.30 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்ட கௌன்சர் அவர்களின் உடலையும், அவரது மகன் அகீப்பையும் காவல்நிலையம் அழைத்து சென்று விட்டனர் காவலர்கள். அங்கே காலை 7 மணி வரை அகீப்புக்கு தனது அம்மாவின் உடலை அதிகாரிகள் காட்டவே இல்லை.

தனது அம்மாவின் இரத்தம் தோய்ந்த ஆடைகளை கட்டிக்கொண்டு ஏன் என் அம்மாவை கொன்றீர்கள் என கதறி கேட்கிறார் அகீப்.

அப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் அநியாயங்கள் நிகழ்த்தும் இந்திய அரசுக்கு எதிராகவும், ஆயுத படையினருக்கு எதிராகவும் கோசங்கள் எழுப்பினார்கள். (தகவல் : The Kashmir walla : 17.09.2020)

## காஷ்மீருக்கு என்ன தான் தீர்வு?

காஷ்மீர் மக்கள் வேண்டுமென்றே இந்திய அரசின் மீது கோபம் கொள்வதில்லை. அவர்களை அப்படியொரு சூழலிலேயே தான் வைத்திருக்கிறோம்.

காஷ்மீரிகள் கொல்லப்படுவதும், காணாமலாக்கப்படுவதும் இயல்பான ஒன்றாக மாறியிருக்கிறது. இந்தியாவின் சிரியா என்று கூட காஷ்மீரை வரையறுக்கலாம்.

(செப்டம்பர் 17) காஷ்மீரின் ஒரு குழந்தை தன் பள்ளி ஆசிரியரிடம் இன்று என்னால் ஆன்லைன் வகுப்பு கல்ந்து கொள்ள முடியாது என்று கூறுகிறது. அதற்கு காரணம், தனது வீடு இருக்கும் பகுதியில் எண்கவுண்டர் சம்பவம் நடந்துள்ளது. எங்களது வீடுகளின் ஜன்னல் கதவுகளை ஆயுத படை வீரர்கள் உடைத்து விட்டார்கள். அதனால் கலந்து கொள்ள முடியாது என்று ஆசிரியருக்கு பதில் அனுப்பியது அந்த குழந்தை. இதனை அவரது தந்தை எடுத்து பகிர்ந்திருந்தார்.

இப்படியொரு சூழலை காஷ்மீரக குழந்தைகளுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு தமிழர்களான நாம் ஒரு பென்னிக்ஸ் படுகொலைக்கு எதிராக நாம் பெரிய அளவில் போராட்டங்களை எதிர்கொண்டோம். அந்த ஒரு நிகழ்வுக்காக அதனை நிகழ்த்திய காவலர்கள் மீது வெறுப்புக்கொண்டோம்.

ஆனால் அதுவே காஷ்மீரில் இதுவரை இதுபோல் ஆயிரம் படுகொலை நிகழ்த்தப்பட்டாலும் அதில் ஒன்றில் கூட நியாயமான விசாரணை நடத்தப்பட்டு ஒரு அதிகாரி கூட தண்டிக்கப்படவில்லை.

நாம் காஷ்மீரிகளை வேண்டுமென்றே விலக்கி வைக்கிறோம். இறுதியில் அவர்கள் நம்முடன் இணைவதில்லை என்ற பொய்யையும் பரப்புகிறோம். நமக்கு காஷ்மீர் தேவை என்றால் அந்த மக்களும் தேவை என்பதை உணர்ந்தால் தான் அமைதியான நிலை உருவாகும்.

– அபூ சித்திக்



# இஸ்லாம் கூறும் மனித உரிமைகள்

## இஸ்லாமிய ஆட்சியின் கீழ் பின்பற்றப்படும் மனித உரிமைகள்

உலக யுத்தம் (World war) 2 ன் முடிவுக்கு பிறகு தான் ஐ.நா 1945ல் உருவாக்கப்படுகிறது. அதன் பிறகு தான் மனித உரிமைகளுக்கான சட்டம் என 1948ல் வரையறுக்கப்படுகின்றன. ஆனால், இஸ்லாம் அதை 1400 ஆண்டுகளுக்கு முன்னால் செயலில் காட்டியிருக்கிறது.

உலகில் உள்ள எந்த தத்துவமும் இஸ்லாத்தின் உரிமைகளுக்கு ஈடாக ஒரு மனித உரிமைக்கான தத்துவத்தை வழங்கிடவில்லை. இங்கே முஸ்லிம் களும், முஸ்லிம்களல்லாதவர்களுக்கும் ஒரே நடைமுறையின் கீழ் தான் நடத்தப்பட்டார்கள் .

## இஸ்லாத்தில் மனித உரிமை

சர்வதேச நீதிமன்ற நீதிபதி சி.ஜி. வீரமந்திரி இஸ்லாத்தில் இருக்கும் மனித உரிமைகள் பற்றி இப்படிக்குறிப்பிடுகிறார், “தனிமனிதகண்ணியம் என்பது இஸ்லாமிய சட்டங்களில் மிகவும் உயர்வாக மதிக்கப்படுகின்றது. மனித உரிமைகள் என்பது இந்த நெறிக்குள் மிகவும் லாவகமாக வந்துவிடுகின்றது. திருக்குரான் தொடர்ந்து துன்புறுத்தல், (தனிமனித) உரிமை ஆக்கிரமிப்பு, தனி மனிதர்களின் கண்ணியத்தை களங்கப்படுத்த நினைப்பவர்களை கடுமையாக எச்சரிக்கிறது. திருக்குரானில் 299 இடங்களில் மனித உரிமைகளை மீறுவது குறித்து எச்சரிக்கப் படுகிறது.”

மனிதர்கள் அனைவரும் சமம் – அவர்கள் அனைவருக்கும் சமமான உரிமை வழங்கப்பட வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது

“17:70. நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம்; இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்.”

49:13. மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; ( அதாவது, உங்களுக்குள் எந்த ஏற்றத்தாழ்வுகளும் இல்லை. நீங்கள் அனைவரும் ஒரு தாய், தகப்பனிடமிருந்து உருவானவர்கள்)

நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி பேருரையில்,

“மக்களே அறிந்து கொள்ளுங்கள் உங்கள் இறைவனும் ஒன்றே, உங்கள் தந்தையும் ஒன்றே. எந்த அரேபியர்களும் அரேபியர்கள் அல்லாத வர்களை விட உயர்ந்தவர்கள் அல்ல. அரபியர் அல்லாத மக்களும் அரேபியர்களை விட உயர்ந்த வர்கள் அல்ல. எந்த சிவப்பு மனிதரும் கருப்பு மனிதரை விட உயர்ந்தவர் அல்ல. எந்த கருப்பு

மனிதரும் சிவப்பு மனிதரை விட உயர்ந்தார்கள் அல்ல. எல்லோரும் சமம்."

## சமூக நல்லிணக்க ஒழுக்க நெறிகள்

ஒரு சமூகத்தில் பெரிய பிரச்சனைக்கு வித்திடுவது ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரின் ஆன்மிக நம்பிக்கையை அநாகரிகமாக விமர்சிக்கும் போது உண்டாகும் விபரீதங்கள். இது சமூகத்தின் நல்லிணக்கத்தை பெரிதளவில் பாதிக்கும்.

அதனால் தான் இஸ்லாமியர்களுக்கு மற்ற மத நம்பிக்கைகளை கீழ்மையாக விமர்சிக்க கூடாது என்றும் மற்ற மதக்கடவுள்களை திட்டக் கூடாதென்றும் கட்டளையிடப் பட்டிருக்கிறது.

அதனால் தான் உலகில் அனைத்து பகுதியிலும் முஸ்லிம்களுக்கெதிராக மற்ற மதத்தவர்கள் ஆபாசமாக விமர்சனங்களையும், கார்டூன்களையும் வெளியிட்டு காட்டு மிராண்டித்தனம் மேற்கொள்ளும் போதும் கூட முஸ்லிம்கள், தங்கள் மதத்தை கேவலப்படுத்தி விட்டான் அதனால் அவனது மதத்தை கேவலப் படுத்துவேன், கடவுளை திட்டுகிறேன் என்று எதிர்வினையாற்றுவதில்லை. காரணம், இஸ்லாம் அதனை தடுத்திருக்கிறது.

## அவரவர் மதத்தை பின்பற்றுவதற்கான முழு உரிமை

*2:256. (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை.*

நபி(ஸல்) எச்சரிக்கிறார், முஸ்லிமல்லாத நபர்களிடம் கொடூரமாகவும், கடினமாகவும் நடந்து கொண்டு அவர்களின் உரிமைகளை குறைப்பவருக்கும், அவர்கள் தாங்க முடியாத அளவுக்கான சோதனையை தருபவருக்கும், அவர்களின் விருப்பத்திற்கு மாறாக பொருட்களை எடுத்துக்கொள்பவர்களுக்கும் எதிராக நான் தீர்ப்பு நாளில் புகார் கூறுவேன்.

இஸ்லாமிய ஆளுகைக்குள் எவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள நிர்பந்திக்க கூடாது என்பது தான் இஸ்லாத்தின் சட்டம். அதிலும், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவோ அல்லது ஆட்சியில் இருக்கிறோம் என்ற காரணத்தினாலோ முஸ்லிம்கள் அல்லாதோருக்கு எதிராக ஏதேனும் செய்தால் அவர்களுக்கு எதிராக முகம்மது நபியவர்களே மறுமை நாளின் போது இருப்பேன் என்றும் எச்சரிக்கிறார்.

## முஸ்லிமல்லாத நபர்களுக்கு இஸ்லாம் கொடுக்கும் உத்தரவாதம்

முஸ்லிம்களின் ஆளுகைக்குள் இருக்கும் மக்களுக்கெல்லாம் முஸ்லிம்களின் ஆட்சியில் இந்த உத்தரவாதம் கண்டிப்பாக கொடுக்கப்பட வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது.

உதாரணத்திற்கு,

**<u>சம்பவம்-1</u>** அபூபக்கர் சித்திக் (ரழி) தனது நஜ்ரான் நாட்டு முஸ்லிமல்லாத மக்களுக்கு எழுதிய கடிதம், "இறைவனின் அடிமையாகிய அபுபக்கர் கூறுகிறேன், உங்கள் அண்டை வீட்டாரின் உரிமைகள் பாதுகாப்படும். உங்களுடைய நிலங்கள், உங்கள் மத நம்பிக்கைகள், உங்கள் செல்வம், உங்கள் வேலையாட்கள், நீங்கள் உள்ளூரில் இருந்தாலும் வெளிநாடுகளில் இருந்தாலும், உங்கள் மத போதகர்கள், உங்கள் துறவிகள், உங்கள் தேவாலயங்கள், மடங்கள், உங்களுக்கு சொந்தமாக எதுவாக இருந்தாலும், அது பெரியதாக இருப்பினும் சிறியதாக இருப்பினும் அதில் எதையும் நீங்கள் இழக்க மாட்டீர்கள். அதன் மீது முழு கட்டுப்பாடும் உங்களுக்குரியதே."

## இஸ்லாமிய ஆட்சியில் நீதி

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருக்கும் மக்களுக்கு பாகுபாடு காட்டாமல் நீதி வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகிறது.

இதற்கு சில சம்பவங்களை உதாரணப் படுத்தலாம்...

**<u>சம்பவம்-2</u>** உமர் (ரழி) அவர்களிடம் எகிப்தில் இருந்து ஒரு மனிதர் வருகிறார். அவர் உங்கள் கவர்னர் தனக்கு அநீதி இழைத்து விட்டதாக கூறுகிறார். தனது ஒட்டகம் ஒன்றை எகிப்தின் கவர்னராக இருக்கும் அமர் பின் ஆஸ் அவர்களின் மகன் முஹம்மது அநியாயமாக பறித்து விட்டதாக குறிப்பிடுகிறார். இதனை விசாரித்த உமர் (ரழி) கவர்னர் அமர் பி ஆஸ் அவர்களையும், அவரது மகன் முகம்மது அவர்களையும் ஆஜராக சொல்கிறார்கள்.

விசாரணையின் முடிவில் புகார் உண்மை தான் என்று தெரியவந்த பின் உமர் புகாரளித்த எளிய மனிதனின் கையில் சாட்டையை குடுத்து கவர்னரின் மகனை அடிக்க சொல்கிறார்கள். அவருக்கான பொருள் திருப்பி ஒப்படைக்கப் பட்ட பின் தனது ஆட்சிக்குள் நடந்ததால் தன்னை தண்டிக்க விரும்பினாலும் தண்டிக் கலாம் என உமரவர்கள் கூறியதும் இஸ்லாமிய ஆட்சியின் நீதியை பற்றி வியந்து போகிறார் அம்மனிதர்.

**சம்பவம்-3** ஒரு முறை ஆட்சியாளராக இருக்கும் உமர் அவர்கள் மீது புகார் ஒன்று வருகிறது, அதில் விசாரணைக்காக நீதிமன்றத் திற்கு உமர் வருகிறர். உலகின் பல நாடுகளுக்கு ஆட்சியாளராக இருக்கும் கலீபா உமர் வந்ததும் நீதிபதி எழுந்து மரியாதை தருகிறார். அதனை உமரவர்கள் மறுத்து இது உங்களை நம்பி வந்த புகார்தாரருக்கு நீங்கள் இழைத்த முதல் அநீதி என நீதிபதியை எச்சரிக்கிறார். விசாரணையின் போது புகாரளித்த பாமரன் ஆட்சியாளரான உமர் அவர்களை சாட்சியம் தர கூறுகிறார்.

ஆனால் அதனை மறுத்த நீதிபதி ஆட்சியாள ரான உமர் அவர்களிடம் போய் சாட்சியமா என்று எதிர்கிறார். அப்போது உமர் (ரழி) எழுந்து நீங்கள் நாட்டின் ஆட்சியாளனையும், நாட்டின் பாமரனையும் ஒரே பார்வையில் பார்க்க வில்லையென்றால் உங்களுக்கு நீதி செலுத்த தகுதியில்லை என்று எச்சரிக்கிறார்.

**சம்பவம்-4** முஸ்லிமல்லாத பெண்ணொ ருத்தி உமர் (ரழி) அவர்களிடம் பள்ளிவாசல் கட்டுவதற்காக என் வீடு இடிக்கப்பட்டு விட்டது என்று முறையிடுகிறார். உமர் அவர்கள் விசாரணை நடத்துகிறார்கள். அப்போது அப் பகுதியில் முஸ்லிம்கள் அதிகமாகிவிட்ட நிலையில் பள்ளிவாசலை விரிவுபடுத்த அந்த பெண்ணின் வீட்டின் ஒரு பகுதி இடிக்கப்பட்ட தாகவும் அதற்கான தொகை அந்த பெண்ணின் பெயரில் பொது கரூவூலத்தில் பணம் செலுத் தப்பட்டி ருக்கிறது என்றும் கூறப்படுகிறது. அப்போது உமர் (ரழி) அவர்கள் பள்ளிவாசல் நீட்டிப்பை கைவிட்டு அந்த பெண்ணின் வீட்டை பழைய நிலைக்கு மாற்றி விடுங்கள் என தீர்ப்பளிக்கிறார்.

## போரின் போதான மனித உரிமைகள்

சாதாரண சூழலில் மனித உரிமைகளுக் கான சட்டம் ஒன்றாகவும், போர்க்காலங்களில் ஒன்றாகவுமே இருக்கும், இன்றைக்கும் கூட போர்க்காலங்களில் பெண்கள் கற்பழிக்கபடு வதும் குழந்தைகள் கொல்லப்படுவது என பல்வேறு அநியாயங்கள் நிகழ்த்தப்படுகிறது. ஆனால், இஸ்லாம் போர்க்காலங்களில் பின்பற் றப்பட வேண்டிய மனித உரிமைகள் என்று தனியாகவே ஒரு பட்டியலை வைத்திருக்கிறது.

நபி(ஸல்) கூறினார்கள் – போரில் குழந்தை களை கொல்லாதீர்கள், இறந்தவர்களை சிதைக் காதீர்கள் என பலவேறு நிபந்தனைகள் விதித் தார்கள். அதனை பின்பற்றிய முதல் ஆட்சியாள ரான கலீபா அபூபக்கர்(ரழி) அவர்கள் போருக்கு செல்லும் உஸ்மான் இப்னு சையத் அவர்களுக்கு 10 விடயங்களை கட்டளையிடுகிறார்,

“குழந்தைகள், பெண்கள், முதியவர்களை கொல்லக்கூடாது. பழம் தரும் மரங்களை வெட்டக்கூடாது. வீடுகளையும், வளர்க்கும் பிராணிகளையும் துன்புறுத்தக்கூடாது, பனை மரங்களை வீழ்த்தாதீர்கள், அவர்களிடம் துரோகமாத்துடன் நடந்து கொள்ளாதீர்கள், கோழைத்தனத்துடன் நடந்து கொள்ளாதீர்கள், நீங்கள் மடாலயங்களை கடந்து செல்வீர்கள் அங்கே தன் வாழ்க்கையை ஆன்மிகத்துக்கு அர்ப்பணித்த மக்கள் இருப்பார்கள் அவர்களை தொந்தரவு செய்யாதீர்கள்”

அதே போல் உமர் (ரழி) தனது ஆட்சிப் பகுதியான் இலியா பகுதி மக்களுக்கு வெற்றி பெற்ற பின் கூறுகிறார்கள்,

கடவுளின் விசுவாசியான உமர் கொடுக்கின்ற உத்தரவாதம் இது, தேவாலயங்கள், மடங்கள், சொத்துகள், ஆரோக்கியமாக இருப்பினும் சரி ஆரோக்கியமற்றவராக இருப்பினும் சரி. இந்த சமூகத்தின் அனைத்து மக்களுக்கும், உங்களின் உடைமைகள், தேவாலயங்கள், உங்களுடைய பணம், வீட்டின் அழகு பொருட்கள் என எதுவும் எடுத்துக் கொள்ளப்படாது. உங்களு டைய ஆன்மிக தளங்களுக்கு எந்த பாதிப்பும் வராது. மதத்திலிருந்து வெளியேற கட்டாயப் படுத்தப்பட மாட்டார்கள். அதன் பெயரில் துன்பங்களையும் அனுமதிக்க மாட்டார்கள்.

## இஸ்லாமிய ஆட்சியில் வழிபாட்டு மையங் களின் பாதுகாப்பு – சிந்தனையாளர்களின் கருத்து

கிறிஸ்துவ உலகின் அனைத்து பிஷப்களின் தலைவருக்கு கடிதம் எழுதுகிறார், பாட்ரியாச் ஜியோஃப்|||, “இறைவன் முஸ்லிம்களுக்கு உலகம் முழுக்க அதிகாரத்தை வழங்கினார். அவர்கள் எவ்வளவு செல்வந்தர்களாக விளங்கினார்கள் என்று நாம் அறிவோம். அவர்கள் உங்களிடையே வாழ்கிறார்கள். ஆனால், ஒருபோதும் கிறிஸ்துவ மதத்தை தாக்கவில்லை. மாறாக, அவர்கள் எங்கள் மதத்தின் மீது மதிப்பு கொண்டுள்ளனர். எங்கள் ஆயர்களையும், புனிதர்களையும் மதிக்கிறார்கள். எங்கள் தேவாலயங்களுக்கும், மடங்களுக்கும் நன்கொடை தருகிறார்கள்.”

கிரேக்க சிந்தனையாளர் கிறிஸ்துவர் கியாத்தோ – இறைவன் உலகையே ஆளக்கூடிய வர்களாக முஸ்லிம்களை வைத்திருந்தான். அவர் களை போலவே மற்றவர்களையும் நடத்தினார் கள். அவர்கள் கிறிஸ்துவத்தின் எதிரிகளல்ல. உண்மையில், அவர்கள் நம் சமூகத்தை புகழ்ந் தார்கள். நம் பாதிரிமார்களை மிகவும் கண்ணியத் துடன் நடத்தினார்கள். நமது தேவாலயங்கள் மற்றும் மடங்களுக்கு உதவிகள் வழங்கினார்கள் – என்கிறார்.

எழுத்தாளர், வில் டோரண்ட் – கலிபா உமையாக்களின் ஆட்சியில் கிறிஸ்துவர்கள், ஜோராஸ்ட்ரியர்கள், யூதர்கள், சபியர்கள் என அனைவரும் மிகுந்த நல்லிணக்கத்துடன் நடத்தப்பட்டார்கள். அப்படியொரு சுதந்திரம் தற்போது வரை கிறிஸ்துவ நாடுகளில் கூட கிடைக்காது. அவர்கள் தங்கள் மத சடங்குகளை மிக சுதந்திரமாக கடைபிடித்தனர். கோயில்கள் மற்றும் தேவாலயங்கள் அவர்களால் பாதுகாக் கப்பட்டன. அவர்கள் தங்களின் மத சடங்கு களையும் மதச்சட்டங்களையும் சுயாட்சியின் படி செயல்படுத்தி வந்தனர்.

இதற்கு முஸ்லிம்கள் ஆட்சியில் பல்வேறு உதாரணங்களும் இருக்கிறது. அவற்றில் சில,

**சம்பவம்–5** முஸ்லிம் கவர்னராக இருந்த அப்துல் மாலிக் சர்ச்சிற்கு சொந்தமான ஒரு பகுதியை ஆக்கிரமித்து மசூதி எழுப்பி விட்டார். இந்த தகவல் பின்னர் ஆட்சியாளர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் அவர்களுக்கு சென்றதும் கவர்ன ருக்கு கடிதம் எழுதி, இம்மாதிரியான செயலுக்கு தனது கண்டனத்தையும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியை திரும்ப ஒப்படைக்கவும் உத்தர விட்டார்.

**சம்பவம்–6** இன்று பாலஸ்தீனில் இருக்கும் ஜெருசேலம் முஸ்லிம்களின் பகுதியாக இருக்கும் போது – ஜெருசேலமில் யூதர்கள் வழிபடும் அழுகை சுவர் ஒன்று இருந்தது. இது யூதர்களுக்கு புனிதமான இடம். இது இடிபாடுகளுக்கு கீழ் புதைக்கப்பட்டது. அப்போது ஒட்டமான் கலீபாவாக இருந்த சுல்தான் அந்த இடிபாடுகளை அகற்றி யூதர்கள் வழிபடும் வகையில் ஏற்படுத்தி தர கவர்னருக்கு கடிதம் எழுதினார்.

இப்படி இஸ்லாமிய ஆட்சியில் மற்ற மதத்தை சார்ந்தவர்களுக்கு பல்வேறு வழிபாட்டு உரிமைகள் வழங்கப்பட்ட சமபவங்கள் கொட்டி கிடக்கிறது.

## நேர்மையாக எழுதக்கூடிய வரலாற்றாசியர்கள் கருத்து

லீபான் குறிப்பிடுகிறார், “முஹம்மது (ஸல்) அவர்கள் யூதர்களிடமும், கிறிஸ்துவர்களிடமும் மிகுந்த நல்லிணக்கத்துடன் நடந்து கொண் டார்கள். இஸ்லாத்திற்கு முன் தோன்றிய பிற மதங்களின் குறிப்பாக யூத மதம் மற்றும் கிறிஸ்துவம் அத்தகைய நல்லெண்ணத்தை பரிந்துரைக்கவில்லை. ஆனால் முஹம்மதுவின் நல்லிணக்கத்தை அவருக்கு பின்னால் வந்த ஆட்சியாளர்களும் பின்பற்றினார்கள் என்பதை வரலாற்றை ஆய்வு செய்யும் போது அறிய முடிகிறது.”

ராபட்சன் குறிப்பிடுகிறார் “முஸ்லிம்களால் மட்டுமே தனது சொந்த மதம் சொல்லும் கொள்கையை இறுக பிடிக்க முடிந்தது. பிற மதங்களை பின்பற்றுபவர்களுடனான நல்லி ணக்கம் என போர் காலங்களில் கூட அதனை மீறவில்லை. தங்கள் மத போதனைகளை விரும்பாதவர்களிடம் கூட சுதந்திரத்துடன் மக்களை நடத்தினார்கள்”

பன்மொழி எழுத்தாளர் சர் தாமஸ் அர்னால்ட், “முஸ்லிம்கள் ஆட்சியில் முஸ்லிம்

அல்லாத சிறுபான்மையினரை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்துதல், கிறிஸ்து வத்தில் இருந்து வெளியேற்றுதல் என எந்த வொரு நடவடிக்கையையும் நாங்கள் கேள்விப் பட்டதில்லை. இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இதுபோல் நடவடிக்கைகளை மேற்கொண்டி ருந்தால், பெர்டினண்டும், இசபெல்லாவும் இணைந்து ஸ்பெயினிலிருந்து இஸ்லாத்தை எப்படி துரத்தினார்களோ, லூயிஸ் 15 எப்படி கிறிஸ்த்துவத்தின் பிரொட்டஸ்டண்ட் பிரிவை பிரான்சில் பின்பற்றுவது தண்டனைக்குரிய குற்றமாக்கினார்களோ, யூதர்கள் எப்படி 350 ஆண்டுகள் இங்கிலாந்திலிருந்து கிறிஸ்துவர் களால் நாடு கடத்தப்பட்டார்களோ, அதே போல் கிறிஸ்துவத்தையும் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் செய்யவில்லை. அன்றைய காலத்தில் கிழக்கில் இருந்த தேவாலயங்கள் எந்த ஆதரவும் இன்றி தனித்து விடப்பட்டிருந்தன. ஆனாலும், அதன் மீது எந்த அத்துமீறல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுவே இஸ்லாமிய ஆளுகை எந்தளவுக்கு நல்லிணக்கத் துடன் நடந்து கொண்டார்கள் என்பதற்கான சான்று. மேலும் பல பகுதிகளிலிருந்து வந்த யூதர்கள் ஓட்டமன் ஆட்சிப்பகுதிளில் தஞ்சம் புக வந்துக்கொண்டே இருந்தார்கள்.''

அமெரிக்க எழுத்தாளர் லாத்தோர்ப் ஸ்டாட்டர்டு, ''கலீபா உமர் கிறிஸ்துவர்களின் தேவாலயங்களையும், புனித பகுதிகளையும் பாதுகாக்க எவ்வளவு நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அவ்வளவு நடவடிக்கைகளை எடுத்தார். அதையே அவரது வழி வந்த ஆட்சியாளர்களும் செயல்படுத்தினர். வருடம் முழுக்க உலகின் பல பகுதிகளிலிருந்து ஜெ ருசேலத்திற்கு கிறிஸ்துவர்கள் புனித பயணம் மேற்கொள்வார்கள். அவர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருந்தது.''

வரலாற்றாசியர் எடினி டெனியர், ''முஸ்லிம் கள் தங்கள் ஆட்சியில் எந்த வித மத அடக்குறை யையும், கட்டாய மத மாற்றுதல்கலையும் , துன்புறுத்தலையும் செய்யவில்லை. குறிப்பாக கிறிஸ்துவர்களை அரவணைத்தார்கள். அவர்கள் ஆட்சியிலேயே பெரிய பொறுப்புகளெல்லாம் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவே கிறிஸ்துவ ஆட்சியாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, முஸ்லிம்களை வெளியேற்றுவதையே முதன்மை பணியாக செய்தனர்.''

## இஸ்லாமிய ஆட்சியின் கீழ் மாற்று மதத்தினருக்கு சட்ட உரிமைகள்

இஸ்லாமிய அரசியலமைப்பின் கீழ் சிவில் சார்ந்த திருமணம், விவாகரத்து போன்ற உரிமைகள் அவர்களின் மத சட்டங்களின் அடிப்படையிலேயே சிறுபான்மையினருக்கு வழங்கப்படும். இந்தியாவில் எப்படி முஸ்லி ம்களுக்கென்று தனி சிவில் சட்டம் இருந்ததோ அதே போல் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் ஒவ்வொரு மதத்தவரும் அவர் மத விருப்பப்படி சிவில் உரிமைகளை அனுபவித்து கொள்ளலாம். (இன்று இந்தியாவில் முஸ்லிம்களின் சிவில் சட்டம் என்று சொல்லப்பட்டதில் முழுக்க தலையீடு செய்து மாற்றப்பட்டு விட்டது)

இதனை மேற்கத்திய எழுத்தாளர், ஏடம் மெட்ஸ் இப்படிக் குறிப்பிடுகிறார், ''இஸ்லாமிய அரசாங்கத்திற்குள் மாற்று மதத்தவருக்கு தனி நீதிமன்றங்கள்இருந்தன. அதில்சமூகச்சட்டங்கள் பின்பற்றட்டன. அதன் தலைவராக அவர்களை சார்ந்த மத தலைவர்களே தலைவர்களாக இருந்தனர். அதற்கும் இஸ்லாமியஅரசுக்கும் தொடர்பற்று இருந்தன.''

## எல்லோருக்கும் ஒரே அணுகுமுறை

முஸ்லிம்கள் என்றால் ஒரு சட்டமும், முஸ்லிம் கள் அல்லாதவர்கள் என்றால் மற்றொரு சட்ட மும் என்ற வரைமுறை தடை செய்யப்பட்டிருந் தது. அனைவருக்கும் ஒரே நடைமுறை பின்பற்றப் பட்டது.

**சம்பவம்-7** அபூக்கர்(ரழி) ஆட்சி காலத்தில் பஞ்சம்ஏற்பட்டுவிடுகிறது. அப்போது மக்களுக்கு பொதுக்கருவூலத்தில் இருந்து உதவ வேண்டும் என்று முடிவு எடுக்கப்படுகிறது. நிர்வாக ரீதியாக இஸ்லாமிய அரசுக்கென தனி நாடு உருவாகி விட்ட பிறகு முதன்முதலாக அரசின் கருவூலத் தில் இருந்து உதவிகள் வழங்குவதில் எப்படி முன்னுரிமை செலுத்துவது என்று விவாதிக்கப் படுகிறது. அப்போது முஸ்லிம்களில் இரு பிரிவாக இருக்கும் அன்சாரிகளுக்கும், முஜாஹிர்களுக் கும் முன்னுரிமை கொடுக்கலாம் என்றும் கூறப் படுகிறது. ஆனால்,இறுதியில் பசி அதிகம்

உள்ளவர்களுக்கே முதல் முன்னுரிமை என முடிவு செய்யப்படுகிறது. அதன் படி இஸ்லாமிய அரசின் பொதுக்கரூவூலத்தின் முதல் உதவி ஒரு ஏழை யூத மதக்குருவுக்கே சென்றது.

**சம்பவம்-8** உமர்(ரழி) ஆட்சிக்கலத்தில் கிறிஸ்துவ தொழு நோயாளிகள் உழைக்க முடியாத காரனத்தால் அவர்களுக்கு மாத மாதம் மானியம் வழங்குவதற்கும் உத்தரவிட்டார். அது பிற்காலத்திலும் தொடர்ந்தது.

## சிறைக்கதிகளுக்கான மனித உரிமைகள்

சம்பவம்: முகம்மது நபி (ஸல்) ஆட்சியின் போது, ஒரு ஜும்மா நாளில் மக்களிடம் உரை நிகழ்த்தும் போது ஒரு மனிதர் எழுந்து என் அண்டை வீட்டுக்காரர் ஏன் கைது செய்யப் பட்டார் என்று கேள்வி எழுப்புகிறார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அமைதி காக்கி றார்கள். மீண்டும் கேட்கிறார் அமைதி காக்கிறார்கள். இப்படி மூன்று முறை கேட்ட பிறகு நபி (ஸல்) கைது செய்யப் பட்ட மனிதனை விடுதலை செய்கிற ார்கள்.

பிறகு தன் தோழர்களிடம் (சட்ட ஆலோச கர்கள்) கூறிய போது அந்த குறிப்பிட்ட நபரை கைது செய்த அதிகாரி இக்கூட்டத்தில் தான் இருந்தார். அவர் கைது செய்யப்பட்ட காரணத்தை மூன்று முறை வாய்ப்பு கொடுத்தும் சொல்ல வில்லை. அதனா லேயே விடுதலை செய்ய சொன்னேன் என்றார்.

அநியாயமாக ஒருவரை கைது செய்து விசாரணையில்லாமல் சிறையில் தள்ளுவது இஸ்லாத்தின் பார்வையில் தடுக்கப்பட்ட ஒன்று. இதனை 1400 ஆண்டுகால சட்ட வழிமுறையாக வைத்திருக்கிறது இஸ்லாம்.

**சம்பவம்-9** கலீபா அலி (ரழி) அவர்களுக்கு உயிருக்கு சிலரால் ஆபத்து என்று உளவுத்துறை தகவல் வருகிறது. ஆனால் அதற்கான எந்த சாட்சியங்களும் இல்லை. ஆனால் பலர் குற்றம் சுமத்து பவர்கள் மீது கடின நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் அப்படி சதிவேலைகளை செய் கிறார்கள் என எந்த சாட்சியும் இல்லாத சூழலில் அவர்கள் மீது எந்த கைது நடவடிக்கையும் மேற்கொள்ள மாட்டேன் என்று உறுதியாக கூறி விட்டார்கள்.


இஸ்லாம் சாட்சிகள் இல்லாமல் விசாரணை என்ற பெயரில் நீண்ட காலம் சிறை வைப்பதை தடை செய்கிறது.

## இன்னும் நிறைய இருக்கிறது

இதுபோல் இஸ்லாத்தில் ஒவ்வொரு தனிபட்ட துறைகளிலும் கடைபிடிக்கப்பட வேண்டிய மனித உரிமைகள் என தீர்க்கமான வழிகாட்டல்கள் இருக்கிறது.

அதனை பின்வரும் நாட்களில் பார்க்கலாம்.


— அபூ சித்திக்.



காந்தியின் வரலாறு இன்றளவிலும் பல கருத்து முரண்பாடுகளை சுமந்து கொண்டே தான் கூறப்பட்டு வருகிறது. காந்தியின் சில பக்கங்களும் கூட இன்றும் அலசப்படாமல் இருக்கின்றது.

காந்தியை ஆன்மிகவாதியாக, அரசியல் நிபுணராக, அகிம்சையின் வடிவமாக பொதுவாக காட்டினாலும் அதற்கு பின்னால் அதிகம் பேசப்படாத வரலாறுகளும் உண்டு.

# மனுசாஸ்திரம் கொன்ற மகாத்மா



## கோட்சேக்களின் பார்வையில் காந்தி

காந்தி இந்து – முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தினார். காந்தியின் இந்த செயலால் இந்துக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர். இதனால் இந்த இந்திய தேசத்திற்காக காந்தியை கொன்றேன் என்பது கோட்சேவின் நேரடி வாதமாகவும். கோட்சேவின் அடிவருடியை சார்ந்துள்ள இயக்கங்களும் கட்சிகளும் வைக்கும் மறைமுக வாதமாகவும் இருக்கின்றன.

2000ம் ஆண்டு வெளியான டைம் பத்திரிகையின் சார்பாக நாதுராம் கோட்சேவின் சகோதரன் கோபால் கோட்சேவிடம் ஏன் காந்தியை கொன்றீர்கள் என கேட்ட போது "காந்தி ஒரு கபடதாரி, முஸ்லிம்கள் இந்துக்களை கொலை செய்யும் போதும் அவர் மகிழ்ச்சியாக இருந்தார். எவ்வளவு இந்துக்கள் கொல்லப்பட்டனரோ அவ்வளவு உயரம் அவரது மதச்சார்பின்மை கொடி பறந்தது." என்றார். இதுவெல்லாம் காந்தியை கொன்றதற்கு அவர்கள் கூறிய காரணங்கள்.

## காந்தி யார்?

தென்னாப்பிரிக்கவில் சட்டப்பணி செய்து திரும்பிய காந்தி கோபால கிருஷ்ண கோகுலே வழியாக இந்திய அரசியலில் ஈடுபட்டார். காந்தி அவர்கள் கலந்து கொள்ளும் அனைத்து கூட்டங்களிலும் பகவத் கீதை வசனங்களை கூற எப்போதும் தவறியதில்லை. முழு ஆன்மிக வாதியாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இருந்தாலும் சங்கர மடங்களிலிருந்து சில கொள்கைகளை விலக்கிக் கொண்டு இந்து மதத்தை சீர்படுத்தும் முயற்சியில் இறங்கினார்.

குழந்தை திருமணம் எதிர்ப்பு, மறுமணம், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஹரிஜன் என்ற பெயரை ஏற்படுத்தி அவர்களை முன்னேற்ற ஊக்குவித்தார். உடன்கட்டை முறைகள் எனும் மூடத்தனமாக இந்து மதத்தின் பெயரில் நடந்த கொடுமைகளை வெளிப்படையாக எதிர்த்தார். இதுவெல்லாம் போக அகிம்சை முறையில் இந்தியாவின் சுதந்திரத்திற்கு போராட்டங்கள் வாயிலாக முயற்சித்தார்.

இறுதியில் பிரிவினையை எதிர்ப்பதாக அறிவித்து இந்தியாவின் ஆசிரமங்களில் தன்னை அர்ப்பணித்து கொண்டார். ஆசரம பஜனை களுடன் தன் எல்லையை அதிகப்படுத்திக் கொண்டார். இந்திய சுதந்திரத்திற்கு பிறகு அரசியல் ரீதியாக காந்திக்கு எந்த அதிகாரமும் இல்லாமல் சென்றது. பின்பு, 1948ல் காந்தியை கோட்சே என்ற ஆர்.எஸ்.எஸ் தீவிரவாதி சுட்டுக் கொன்றான்.

## முரண்பாடுகளும் காந்தியும்

காந்தியின் வரலாற்றை ஆய்வு நூலாக எழுதிய பலரும் சில முரண்பாடுகளை சுட்டிக் காட்டுகிறார்கள். சில இன்னும் கூட பேசப் படாதவைகளாக இருக்கின்றன. முரண்களில் முக்கியமானதாக, கராச்சியில் 1931ம் ஆண்டு நடக்கவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு முன்பே பகத்சிங் தூக்கிலிடப்பட இருக்கும் போது காந்தி நினைத்திருந்தால் பகத்சிங்கை காப்பாற்றி யிருக்கலாம். ஆனால் காந்தி இதை பற்றி சரியான முடிவு எடுக்கவில்லை. அதற்கு பிற்காலத்தில் இதற்கு அரசியல் காரணங்களெல்லாம் சொல்லி மழுப்பப்பட்டன.

இன்று வரை காந்தி எனும் மாமனிதரின் வரலாற்று பக்கத்தில் அதிகம் பேசப்படாததாக உள்ள விடயங்கள்.

1) அகிம்சையை மட்டும் விரும்பிய காந்தி இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டனுக்கு ஆதரவாக இந்திய ராணுவத்தை அனுப்ப வழிமொழிந்தார். அகிம்சையை விரும்பிய காந்தி இந்திய சுதந்திரத்திற்கே ஆயுதம் வேண்டாமென்றவர் பிரிட்டனின் போர் நடவடிக்கைக்கு உதவியது ஏன்?

2) இரண்டாம் உலகப் போரின் முடிவில் பாலஸ்தீனம் அழிக்கப்பட்டு இஸ்ரேல் உருவாக் கப்பட காரணமாக அமையும் என்று காந்திக்கு தெரிந்திருக்காமல் இருக்க வாய்ப்பில்லை. அப்படியிருந்தும் பிரிட்டனுக்கு ஆதரவாக இந்திய ராணுவத்தை அனுப்பி விட்டு பாலஸ்தீன த்துக்கு ஆதரவாக தன்னுடைய பத்திரிக்கையில் எழுதியது ஏன்?


3) காந்தி இருக்கும் காலத்திலேயே காஷ்மீர் பிரச்சனையாக்கப்பட்டு விட்டது. அப்படியென் றால் காஷ்மீரின் நிலைப்பாட்டில் காந்தியின் முடிவு என்ன?

4) ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பிய காந்தி பிரிவினை ஏற்படும் போது ஏன் வெள்ளையனே வெளியேறு போராட்டம் போல எந்தவொரு பெரிய போராட்டத்தையும் அறிவிக்கவில்லை?.

இதுவெல்லாம் பேசப்பட வேண்டிய வரலாறுகள் ஆனால் பேசப்படாமலேயே காலங்கள் ஒடி விட்டன. இனிமேலாவது விடைகளை தேட முயற்சிப்போம்.

## காந்தியை கொன்றதற்கான காரணம்.

காந்தியை கொன்றதற்கான காரணமாக





ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்களான கோட்சேக்கள் கூறும் கருத்து முற்றிலும் கற்பனையாகவே இருக்கிறது.

காந்தி வெளிப்படையாக இந்து மத சீரமைப்பு என்ற பெயரில் மனுசாஸ்திரங்களை மீறினார் என்பதோடு மட்டுமல்லாமல் அந்த பழக்கத்தை மக்களிடம் விரிவுபடுத்தினார் என்பதற்காகவே கொல்லப்பட்டார் என்பதே சரியாக இருக்கும்.

அவர்களின் கூற்றுப்படியே இந்து மதத்திற் காக கொலை செய்தார்கள் என்று கருதினால் காந்தியை விட இந்து மதத்தை பிரபலபடுத்தி யவர்கள் யாரும் இல்லை. காந்தியின் விளை வாகவே கொத்துக் கொத்தாக மதம் மாறிய வர்கள் இந்து மதத்தில் நிலைக்க ஆரம்பித்தனர். அன்று இந்து மதத்தை காத்தவரே காந்தி என்றும் சொல்லலாம்.

ஆனால் காந்தியின் சில செயல்பாடுகள் அன்றைய தீவிரவாத அமைப்பின் தலைவராக இருந்த கோல்வார்க்கரை எரிச்சலூட்டியது. தீண்டாமை ஒழிப்பு என்ற பெயரில் காந்தி எழுப்பிய போராட்டம். குழந்தை திருமணம், உடன்கட்டை பழக்கம் என இந்து மத பெயரில் நடந்த சம்பவங்களை காந்தி எதிர்த்தது கோல் வார்க்கரையும் அவருக்கு கீழ் இருந்த கோட் சேக்களையும் அதிக கோபமடைய செய்தது.

சிறைக்கு சென்ற காந்தி அங்கு மாற்று மதங்களின் புத்தகங்களை படித்து விட்டு வெளியே வந்த போது அம்மதங்களை புகழ்ந்து பேசியது இன்னும் எரிச்சலூட்டிருக்கக் கூடும்.

ஒரு முறை தனது ஆசிரமத்தில் நோய் வாய்ப்பட்டு இருந்த ஒரு கன்றுக்குட்டியை அது துன்பப்படுவதை பார்க்க முடியாமல் கொல்ல சொல்லி உத்தரவிட்டார் காந்தி. பசுவை கொல்வது பாவம். அதனால் காந்தியை அனை வரும் பாவி என்றார்கள். (இன்றே கொலை செய்கிறார்கள் என்றால் 70 வருடத்திற்கு முன் சொல்லவா வேண்டும்)

மறுமணத்தின் கட்டாயத்தை பற்றி காந்தி பேசியது முற்றிலும் மனுசாஸ்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மாறானதாக இருந்தது. இந்த காரணங்களே காந்தியை கொல்வதற்கு கோட்சேக்கு போதுமானதாக இருந்திருக்கக் கூடும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் முஸ்லிம் அடையாளத்துடன் காந்தியை கொன்றுவிட்டால் வேதங்களை மறுத்து வந்த காந்தியின் முடிவும் ஏற்படும். இஸ்லாமியர் களையும் கலவரங்கள் பெயரில் இல்லாமலாக்க முடியும் என திட்டம் தீட்டினார்கள். ஆனால் முதாலவது மட்டும் நடந்தது. இரண்டாவது திட்டம் பலிக்கவில்லை.

காந்தி எனும் மகாத்மா மனுசாஸ்திரங்களை மீறியதால் கோட்சேவால் இறுதியாக கொல்லப் பட்டு காந்தியின் அத்தியாயம் முடிவுக்கு வந்தது.

– அபூ சித்திக்

- எஸ்.எம். முஷ்ரிப்

பாகம்-8




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## மக்கா மஸ்ஜீத் (ஹைதராபாத்) குண்டு வெடிப்பு – 2007

இந்த குண்டு வெடிப்பு மே–*18.2007* ஆம் ஆண்டில் நடந்தது. அதில் ஒன்பது பேர் கொலை செய்யப்பட்டார்கள். பலர் காயம் பட்டார்கள்.

மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பிற்கு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பிற்குமிடையே பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டு குண்டுகள் தாம். இரண்டு குண்டு வெடிப்புகளிலும் வைக்கப்பட்டிருந்தன. இரண்டும் இரண்டு இடங்களிலும் ஒரு குண்டு வெடித்தது, ஒரு குண்டு வெடிக்கவில்லை. இந்த இரண்டு குண்டு வெடிப்புகளிலும் (மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு) குண்டுகளை வெடிக்கச் செய்து பயன்படுத்தப்பட்ட உக்தி – வழிமுறை – ஒன்றேதான்.

இரண்டு குண்டு வெடிப்புகளிலும் உள்ள ஒற்றுமைகள், இத்தோடு நின்றுவிடவில்லை. அவற்றில் பின்பற்றப்பட்ட வழிமுறைகளும் ஒன்று போன்றவைதான்.

இந்த மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும் குண்டை வெடிக்கச் செய்த 'சிம்' (SIM) கார்டு பாபுலால் யாதவ் என்பவரின் பெயரில்தான் வாங்கப்பட்டிருந்தது. ஆனால் முகவரிகள் வேறாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இது மேற்கு வங்க மாநிலம், அசான்ரோல் என்ற இடத்திலிருந்து வாங்கப்பட்டிருந்தது. 'சிம்' கார்டு வாங்குவதற்காக ஓட்டுநர் உரிமம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழில் மே–*21,2007* –ல் வெளிவந்தது.


அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பில் எப்படி முதலில் கிடைத்த உருப்படியான, உண்மையான தடயங்கள் அமுக்கப்பட்டனவோ, அதேபோல் இதிலும் – மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பிலும் முதலில் கிடைத்த தடயங்கள், பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தன. முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டு வெடிப்பை நடத்தினார்கள் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. முஸ்லிம் இளைஞர்களை பல்வேறு காரணங்களையும் சொல்லி கைது செய்தார்கள்.

மெக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு நடந்த உடனேயே பல்வேறு குற்றப் பிரிவு செய்யப் பட்டன. இந்த வழக்குகளின் அடிப்படையில் அவர்கள் முஸ்லிம்கள் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்றானது. பின்னர் அவர்களை சித்திரவதைச் செய்து தாங்கள் விரும்பும் விதத்தில் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றார்கள்.

இப்படி நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களை கைது செய்தபின், இப்படிப் பலரைக் கைது செய்து சித்திரவதைச் செய்து அவர்களின் இளமையையும் – எதிர்காலத்தையும் சிதற அடித்தபின், 28 முஸ்லிம் இளைஞர்கள் மீது தங்கள் அறுதி பார்வையைச் செலுத்தினார்கள். அவர்களைத்தான் இந்தக் குண்டு வெடிப்புக்களில் முறையாகக் கைது செய்திருப்பதாக அறிவித்தார்கள். பின்னர் இவர்களைக் கொடூரமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கினார்கள். தாங்கள் சொல்வதைப்போல் சொல்லிட வேண்டும், எல்லா குண்டு வெடிப்புகளையும் நீங்கள்தாம் செய்தீர்கள் என ஒப்புக் கொள்ள வேண்டும் என்றார்கள்.

அந்த 28 இளைஞர்களும் அடுத்து வந்த சித்திரவதைகளை ஏற்றுக் கொண்டார்களே தவிர, தாங்கள் செய்யாததை செய்ததாக ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அதனால் காவல் துறை ஸ்தம்பித்து நின்றது. ஆனாலும் அவர்கள் மீதே பழியையும், குற்றத்தையும் சுமத்துவது என முடிவு செய்தார்கள் காவல் துறையினர் – அவர்கள் மீது பொய், புனைந்துரைக்கப்பட்ட சாட்சியங்கள் இவற்றின் அடிப்படையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள். ஆனால், விசாரணை நீதிமன்றம் அவர்கள் அனைவரையும் விடுதலை செய்தது. காவல்துறையினரை கடுமையாகச் சாடியது. அவர்களை – அந்த முஸ்லிம் இளைஞர்களைப் பொய்யான வழக்குகளில் இணைத் தததற்குக் கண்டனம் தெரிவித்தது.

இதனால் 28 முஸ்லிம் இளைஞர்கள், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில்தான் சித்திரவதைச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதால் ஆந்திரப் பிரதேச அரசு அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கிட முன் வந்தது. இதற்கு அங்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிகளே காரணம்.



நிவாரணங்களை வழங்கிய ஆந்திரப் பிரதேசத்தில், மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் மக்கள் எப்படி – குறிப்பாக சில வழக்கறிஞர்கள் எப்படிச் செயல்பட்டார்கள் என்பதை 'வைகறை வெளிச்சம்' இதழில் வெளியிட்டுள்ளோம். நாடெங்கும் குண்டு வெடிப்புகளை இந்துத்துவ வாதிகளே! இந்த உண்மையை உலகுக்கு அறிவித்தார்கள். (வைகறை வெளிச்சம் – வேர்கள் பதிப்பகம் மற்றும் வைகறை வாசகர் வட்டம்.)

நாம் மக்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தோம். ஆந்திராவில் இடைவிடா முயற்சியால் – இழப்பீடுகளையும் பெற்றார்கள்.

மாநில முதல்வர் பிறப்பித்த ஆணையில் (YSR. YS - இராஜசேகர் ரெட்டி) இப்படி அறிவித்தார்.

"The Victims of Police Atrocities in Mecca Masjid Blast Case" அதாவது "மக்கா மஸ்ஜித் வெடிகுண்டு வழக்கில் காவல்துறையின் குரூரங்களுக்குப் பலியானார்கள்."

பின்னர் இந்த வழக்கு, NIA என்ற தேசியப் புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. அது NIA மெக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பையும், அஜ்மீர் தர்கா குண்டு வெடிப்பையும் ஒன்றா

கவே விசாரணை செய்தார்கள். ஏனெனில் இவை இரண்டு குண்டு வெடிப்புகளும், எல்லா வகையிலும் ஒன்றுபோல் இருந்தன.

குண்டு வெடிப்பு சதியிலும், இவையே இரண்டும் ஒன்று போலவே இருந்தன. NIA, Nation Investigation Agency தேசிய புலனாய்வு முகமை தான் மேற்கொண்ட சீரிய புலனாய்வுக்குப் பின்னர் ஓர் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது. அதில் குற்றவாளிகளாக, அதே, ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதிரம் என்ற அமைப்புகளைச் சார்ந்தவர்களே அறிவிக்கப்பட்டனர்.

## குற்றம் சுமத்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்

இந்த வழக்கின் முடிவில் ஆந்திர நீதி குற்றம் சுமத்தப்பட்ட மூன்று அமைப்புகளைச் சார்ந்தவர்களையும் ஒட்டுமொத்தமாக விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பு ஏப்ரல்–18.2018 இல் வந்தது.

இதில் தடயங்களை மறைத்ததாக, NIA தேசிய புலனாய்வு முகமையை நீதிபதி சாடினார். இதனை 10 ஆவது அத்தியாத்தில் விரிவாக விவாதித்துள்ளோம்.

## சம்சவ்தா ரெயில் விரைவு வண்டி குண்டு வெடிப்பு வழக்கு 2007 – இரண்டு முறை வழிமறிக்கப்பட்ட விசாரணை

சம்சவ்தா எக்ஸ்பிரஸ் என்பது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரெயில் போக்குவரத்து. அதுவே சம்சவ்தா என்பதன் பொருள்.

ஆனால் 2007. பிப்ரவரி 19 ஆம் தேதி அது இரண்டு நாடுகளுக்கிடையேயும் தவறான உறவுகளை வளர்ப்பதன் ரெயில் போக்குவரத்தாக மாறிப் போய்விட்டது.

இந்த நாளில், இந்த ரெயில் வண்டியில் குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டுகள் ஹரியானா மாநிலத்தில் 'பானிப்பட்' என்ற இடத்தில் வைத்து வெடித்தன. இதில் 68 பேர் இறந்தார்கள். (பெரும்பாலாவர்கள் முஸ்லிம்கள்) இந்தக் குண்டு வெடிப்பால் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையே, யார் குற்றவாளி என்பதைக் கண்டுபிடிக்கும் மிகப்பெரிய பழி சுமத்தும் படலம் தொடங்கியது.

இந்திய அரசாங்கம், மத்திய உளவுத்துறை தந்தத் தவறான தகவல்களின் அடிப்படையில் பாகிஸ்தானின் 'ISI' என்ற உளவுத்துறையின் தூண்டுதலின் கீழ் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாம் இதைச் செய்கின்றார்கள் என்றது. ஆனால் இதற்கான எந்த ஆதாரத்தையும் தந்திடவில்லை.

(2007) அந்த வருடம் மார்ச்சு 6ஆம் நாள் நடந்த Counter Terror Mechanism - தீவிரவாத எதிர் நடவடிக்கைகள் என்ற பெயரில் இந்தியாவும் பாகிஸ்தானும், கூட்டுப் பேச்சுவார்த்தைகளை நடத்தின. அப்போது, ஒரு புகைப்படம் ஒன்றைத் தந்து அந்தப் புகைப்படத்திலிருப்பவர் பாகிஸ்தானைச் சார்ந்தவர் என்றார்கள்.

ஆனால், அதே நேரத்தில், ஹரியானா காவல்துறையைச் சார்ந்த, சிறப்பு புலன் விசாரணை அதிகாரிகள், உண்மையான குற்றவாளிகளின் பக்கம் நெருங்கிவிட்டார்கள். அந்த உண்மையான குற்றவாளிகள், ஆர்.எஸ்.எஸ். அபிநவ்பாரத் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த பிராமணிஸ்ட்டுகள்தாம். அவர்களுக்குக் கிடைத்த உறுதியான தகவல் மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூர் என்ற இடத்திற்கும், இந்தக் குண்டு வெடிப்புகளுக்கும் நிறைய தொடர்பு உண்டு என்பதாகும்.

இந்த இந்தூர் பகுதியில் நயாபாசார் என்றொரு அங்காடி. இந்த அங்காடியிலுள்ள கடை ஒன்றிலிருந்துதான் குண்டு வெடிப்பிற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இந்துத் தீவிரவாதிகள் வாங்கி இருந்தார்கள். அதேபோல் அங்கே கோத்தாரி என்றொரு சந்தை, இந்தச் சந்தையில்தான் குண்டுகளைக் கொண்டு செல்வதற்கான, சூட்கேஸுகள் என்ற பெட்டிகள் வாங்கப்பட்டிருந்தன. அந்த சூட்கேசுகளைப் போர்த்திட உறையைத் தைத்தடெய்லர் கடையையும் கண்டுபிடித்துவிட்டனர். இந்தக் கடைக்காரர்களை, முழுமையாக விசாரித்தார்கள். இந்த விசாரணையில் இந்தக் குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்ட முக்கியப் புள்ளிகளைக் கண்டு கொண்டனர். அவர்களைக் கைது செய்திட தயாரானார்கள்.

ஆனால் அந்த இந்தூர் மத்திய பிரதேசம் காவல்துறையினர் ஹரியானா காவல் துறையினருடன் கிஞ்சிற்றும் ஒத்துழைக்கவில்லை. அதனால் ஹரியானா காவல் துறையினர் வெறுங் கையோடு திரும்ப வேண்டியதாயிற்று.



மத்திய பிரதேச (இந்தூர்) காவல் துறைக்கு யார் அழுத்தங்களைத் தந்திருப்பார்கள் என்பதை நாம் எளிதில் புரிந்திட இயலும். (அது மத்திய உளவுத்துறைதார்).

ஒன்றரை ஆண்டுகளாக இந்த வழக்குக் கிடப்பில் போடப் பட்டது. அதன்பின்னர் திடீர் என அது உயிர்ப்பெற்றெழுந்தது.

ஆமாம், மாலேகான் குண்டுவெடிப்பின் கதாநாயகன், தளபதி கலோனல் பிரசாந்த் புரோகித் என்பவரை Narco Analysis Test நார்கோ அனாலிஸிஸ் டெஸ்ட்டுக்கு உட்படுத்தியபோது, அவர் பல உண்மைகளை ஒத்துக்கொண்டார்.

நவம்பர்–9,2008 ஆம் ஆண்டு பெங்களூர் தடயவியல் சோதனைக் கூடத்தில் வைத்து நடந்த விசாரணையின் போது, அவர் தளபதி புரோகித் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப் பிற்குத் தானே ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்களைக் கொடுத்தேன் என ஒத்துக் கொண்டார்.

கலோனல் (எ) இராணுவ தளபதி பிரசாந்த் புரோகித், நமது இராணுவத்தின் ஆர்.டி.எக்ஸ் கிடங்கிலிருந்துதான் எடுத்து சங்கப் பரிவாரங்களுக்குக் கொடுத்தார். வெடிக்கச் செய்தார். அப்பாவி மக்களைப் பிணமாக்கினார். அப்போது "அவர் அரசின் அதிகாரியாக சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்."

இராணுவத் தளபதி, பிரசாத் புரோகித் மாலேகான் குண்டு வெடிப்பு 2008 இல் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை காவல்துறையினர் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து விசாரிக்க வேண்டும், எனக் கோரிடும் மனுவை அரசு வழக்கறிஞர் அகே மிஸ: சார் நாசிக் நீதி மன்றத்தில் நவம்பர்–15, 2008–ல் தாக்கல் செய்தார். அப்போது இந்த உண்மையை நாசிக் நீதி மன்றத்தில் சமர்ப்பித்தார்.

இப்படி சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பை நடத்திய உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட விருந்த நிலை வந்தது. எல்லோரும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது IB : Intelligence Bureau என்ற மத்திய உளவுத்துறை வேகமாக விசாரணையில் குதித்தது. உண்மையை உலகுக்குச் சொன்னால் மத்திய அரசின் நம்பகத்தன்மை உலக அளவில் கெட்டுப்போகும். அதனால் உண்மையைக் கண்டறிவதை உடனேயே நிறுத்த வேண்டும் என கூறி, ஹரியான காவல் துறையையும் மராட்டிய மாநிலத்தின் தீவிரவாத தடுப்பு நடவடிக்கை தடுப்புக் காவல் துறையையும் இரும்புக் கரம் கொண்டு தடுத்தது.

தாங்கள் ஏற்கெனவே பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. (ISI) என்ற அமைப்பைக் குறை கூறிவிட்டோம். அது அப்படியே இருக்கட்டும் எனக் கூறிவிட்டார்கள்.

– இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடரும்



# தலித்களுக்கெதிராகவும் கிறிஸ்துவர்களுக்கெதிராகவும் நிகழ்த்தப்பட்ட அநீதிகள்

உத்திர பிரதேசத்தில் பாஸ்டர் ரூபேஷ் உறவினர் ஒருவரை சந்திக்க சென்ற போது காவலர்கள் மதமாற்றத்தில் ஈடுபடுவதாக கூறி கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். (செப்.3)

கிறிஸ்துவர்களுக்கு எதிராக இந்தியாவில் நிகழ்த்தப்படும் தாக்குதல் தொடர்ச்சியாக அதிகரித்து கொண்டே இருக்கிறது.

## கிறிஸ்துவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்

*2016ல் – 330, 2017ல் – 440*

*2018ல் – 447, 2019ல் – 527*

*2020ன் பாதி கணக்குப்படி – 293*

சம்பவங்கள் என கிறிஸ்துவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டே வருகிறது.

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் சக்கிலியர் சமூகத்தை சேர்ந்த பட்டியலின் மக்களுக்கு சலூன் கடைகளில் முடி வெட்டக்கூடாது என சாதி வெறியர்கள் தடுத்து வைத்திருந்தனர்.

அப்பகுதியில் மட்டும் மொத்தம் 274 தலித் குடும்பங்கள் இருக்கிறது, இவர்கள் முடி வெட்டுவதற்காக 42 கி.மீ தொலைவில் உள்ள மூணாரில் அல்லது 12 கி,மீ தொலைவில் உள்ள எல்லப்பட்டியிலும் சென்று தான் முடி வெட்டி வருகிறார்கள். (செப்.4)

தெலுங்கானாவில் ஒரே இரவில் சர்ச் தரை மட்டமாக இந்துத்துவ கும்பலால் இடிக்கப் பட்டது. இப்பகுதியில் மொத்தம் 180 கிறிஸ்துவ குடும்பங்கள் இருக்கிறது. (செப்.5)

கேரளாவில் செயின்ட் தெரசா மகளிர் பள்ளியின் முதல்வர் தனது பள்ளி குழந்தைகளும் ஓனம் வாழ்த்து கூறி மெசேஜ் அனுப்பியிருக்கிறார். இதனி சிவ வாகினி என்ற இந்துத்துவ கும்பல் புகார் செய்து பள்ளி முதல்வர் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டார்.

அங்கே காவலர்கள் முன்னால் தான் இந்து மக்களை காயப்படுத்தியதற்கு மன்னிப்பு கோருகிறேன் என்று எழுதிக்கொடுத்து அதனை சத்தமாக படிக்க சொல்லி வீடியோவாக எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்கள். (செப்.6)

இந்தியாவின் கேத்தோலிக் கிறிஸ்துவர்கள் அமைப்பு இந்தியாவில் வாழும் தலித் கிறிஸ்துவர்கள் அதிகம் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் எனவும் வரும் காலத்தில் புதிய கல்விக் கொள்கை கிறிஸ்துவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் என்று அறிக்கை வெளியிட்டது. (செப்.7)

கரொனா காலக்கட்டத்தில் மற்ற சமூகத்தை விட தலித் சமூக மக்கள் தான் மூன்று மடங்கு தங்களது தொழிலை இழக்க வேண்டி வரும் என பொருளாதார அறிஞர் அஷ்வினி தேஷ்பாண்டே கூறினார். (செப்.8)

தர்மபுரி மாவட்டத்தில் தானகுத்தாலி நகரத்தில் 36 வயதான தலித் சமூகத்தை சேர்ந்த அர்ஜுனன் இடத்திற்கு அருகில் உயர் சாதியை சேர்ந்தவரின் இடம் உள்ளது.

இரவு தூங்கி எழும் போது தனது வீட்டை சுற்றி வேலிக்கம்பிகள் போட்டு வீட்டு நடை பாதையை மறைத்து விட்டனர். வீட்டின் அடிப் படை தேவைக்கு கூட கிராமத்திற்குள் போகாதா வாறு வேலி கொண்டு பாதையை மறைத்து விட்டனர்.

தனது வீட்டுக்கு தேவையான பொருட்களை அர்ஜூனின் உறவினர்கள் வேலிக்கு மறுபுறம் இருந்துதூக்கி எறிகிறார்கள். வேலி போட்ட உயர் சாதிக்காரர்களிடம் இதனை அகற்ற கோரினால் அவர்கள் சாதியை குறிப்பிட்டு மிக ஆபாசமாக பேசுவதாகவும், மிரட்டுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். (செப்.8)

உத்திரபிரதேசத்தில் கிறிஸ்துவ மத போதகர்களை தெருவில் நிறுத்தி வைத்து பஜ்ரங்தள் அமைப்பை சேர்ந்தவர்கள் ஆபாசமாகவும், மிரட்டியும் அதை வீட்யோவாக எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டனர். (செப்.9)

பஞ்சாப மாநிலத்தில் தாரான் மாவட்டத்தில் பாஸ்டர் ஜெராஸ் தன் குடும்பத்துடன் வழிபாட்டில் ஈடுபட்டு வீட்டுக்கு வரும் போது கடுமையாக கத்தி, வாள் போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டார். இதில் அவரது மனைவி மற்றும் மகனுக்கும் பலமான காயங்கள் ஏற்பட்டது.

இதனை பற்றி காவல்நிலையத்தில் புகார் அளிக்க சென்ற போது தங்களை தாக்கிய கும்பல் காவல்நிலையத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அப்பகுதி எம்.எல்.ஏ வின் ஆட்கள் என்பதால் புகார் பதிவு செய்யவும் காவல்துறை மறுத்து விட்டது. (செப்.19)

வத்தலக்குண்டு மேலக்கோவில்பட்டியில் சர்ச் ஒன்றில் பெட்ரோல் வெடிகுண்டு வீசப்பட்டது. இதில் நாகராஜ் என்ற ஒருவன் கைது செய்யப்பட்டிருக்கிறான். (செப்.21)

ஒடிசா மாநிலத்தில்தும்சிங்கா மாவட்டத்தில் 15 வயது தலித் சிறுமி உயர் சாதி ஒருவரின் தோட்டத்தில் பூ பறித்து விட்டதற்காக 50 தலித் குடும்பங்கள் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டு மூன்று மாதத்தைக் கடந்திருக்கிறது.

காவலர்கள் ஒவ்வொரு முறை வந்து சமாதானம் செய்து ஒப்பந்தம் போட முயலும் போது உயர்சாதி மக்கள் இதனை ஏற்கவில்லை. இரண்டாவது முறை ஒப்பந்தம் போடலாம் என்ற பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிய 50 தலித் குடும்பங்கள் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். (செப்.22)

உபியின் ஹத்ராஸ் மாவட்டத்தில் 19 வயதான இளம்பெண் நான்கு உயர் சாதி மனிதர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டாள். (செப்.24)

ஜார்க்கண் மாநிலத்தில் பழங்குடி கிறிஸ்துவ குடும்பத்தை சேர்ந்த ஏழு பேர் மாட்டை அறுத்தார்கள் என்ற வதந்தியை காரணமாக வைத்து இந்துத்துவ கும்பல் கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு பாதி மொட்டை அடிக்கப்பட்டு மிகவும் அசிங்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். (செப்.26)

கொரொனா காலக்கட்டத்திற்கு இடையிலேயே சென்னை மந்தைவெளி சேரி பகுதியில் இருந்து மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களுடைய வீடுகள் இடிக்கப்பட்டன. (செப்.27)

தலித் சமூகத்தை சேர்ந்த வழக்கறிஞர் பிராமணர்களுக்கு எதிரான பதிவு சமூக வலைத்தளத்தில் பகிர்ந்ததால் கடுமையான முறையில் கொல்லப்பட்டார். (செப்.29)

தமிழகத்தில் கரோனா காலத்தில் எப்படி தலித்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்திருக்கிறது என்பது பற்றியான விரிவான கட்டுரை கேரவன் ஆங்கில இதழில் வெளிவந்திருந்தது,

கரோனா காலத்தில் வெளியூரில் இருந்து சொந்த ஊருக்கு திரும்பிய பட்டியலின மக்கள் பல பேர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தாக்கப்பட்டிருக்கின்றனர்.

கரோனாவுக்கு முன் மாதத்திற்கு தலித்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் பயங்கரமான வன்முறை சம்பவங்கள் ஐந்தாவது இருக்கும். ஆனால் அது கரோனாவிற்கு பின் இப்படியான 30க்கும் மேற்பட்ட வன்முறைகள் நிலவுகின்றன.

தலித்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று கிராம பஞ்சாயத்து தலைவர்களாக இருக்கும் தலித்கள் எந்த சுதந்திரமும் இல்லாமல் தொடர்ச்சியாக உயர்சாதியினரால் தாக்குதல் உள்ளாக்கப்படுவதும், புகார் கொடுத்தாலும் காவலர்களும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என பல தலித் கிராம தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அம்பேத்கர் போட்டோ அணிந்து கொண்டு தன் தங்கையின் நண்பர்களிடம் பேசிக்கொண்டு இருந்த இளைஞனை ஒரு வன்னியர் சமூகத்தை சேர்ந்த காவலர் கொடூரமாக தாக்கியது என பல சம்பவங்களை பதிவு செய்திருக்கிறார்கள் (செப்.30)



சிலுவைப் போர்கள் 2.0

தொடர்

## 14–ஆம் நூற்றாண்டு கீழ்த்திசை

# அறிஞர்களும் இஸ்லாமும்

அன்பார்ந்த வாசகர்களே இந்தப் பகுதியில், முஸ்லிம்கள் எப்படியெல்லாம், மனித சமுதாயத்தின் வில்லன்களாக காட்டப்படு கின்றார்கள். அதற்கு இஸ்லாத்தின் எதிரிகள் எப்படி யெல்லாம் வரலாற்றை திரித்தார்கள். வன்மங்களைப் பரப்பினார்கள் என்பதைத் தெளிவுபடுத்தி வருகின்றோம். இதில் ஜான் பெஃப்பர் அவர்கள் எழுதிய Crusade 2.0 The Wests Regent war on Islam என்ற நூலை மொழியாக்கம் செய்து தந்தோம்.

அவருடைய நூலை அடியொற்றிய சில பல வரலாற்றுத் தகவல்களை நாம் தேடினோம். பல அழுத்தமான ஆதாரங்கள் கிடைத்தன. ஜான் பெஃப்பர் அவர்களின் நூலில் இடம்பெறாத பல வரலாற்றுத் தடங்களும் நமக்குக் கிடைத்தன. அவற்றை வாசகர்களுக்குத் தந்திட வேண்டும் என விரும்பினோம்.இதனால் இனி ஜான் பெஃ பர் அவர்களின் நூலில் கிடைத்த ஆதாரங்களில் ஒன்றுதான் என ஆக்கிக் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ்.

இப்படித் தேடிய புதிய தகவல்களுள் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன் அலிகர் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத் துறை நடத்திய சிறப்புச் சொற்பொழிவு ஒன்றில் கிடைத்தது.

அலிகர் பல்கலைக் கழகத்தின் சிறப்பு சொற் பொழிவுகளில் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் அப்துல் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள் :

16 ஆம் நூற்றாண்டில், நாடகங்கள் தாம், மக்கள் தொடர்பு சாதனங்கள், நாடகங்கள் தாம் மக்கிடையே செய்திகளை எடுத்துச் செல்பவை யாகவுமிருந்தன. அவை செய்திகளை அழுத்த மாக எடுத்துச் சொல்லின. மக்கள் மனதில் பதியவும் வைத்தன. நெடும் நீள நாடகங்களும், தெருக்கூத்துகள் போல் அமையும். சிறு நாடகங் களும், அப்போது நிரம்பி நிற்கின்றன. ஆனால் இந்த நாடகங்களில் துருக்கியர்களை மிகவும் குரூரமானவர்களாகவும், மக்களை அடக்கி ஆள்பவர்களாகவும் மனிதாபிமானமற்றவர்களா கவும் ஒடுக்குமுறைகளைக் கையாள்பவர்களா கவும் சித்தரித்தார்கள்.

அதேபோல் துருக்கிய கலாச்சாரத்தை, எதிர்மறையான ஓர் கலாச்சாரமாகவும் காட்டி னார்கள். இவற்றின் ஒட்டுமொத்தமான பிரதி பலிப்பு மக்கள் மத்தியில் இஸ்லாத்தை எதிர்மறை யானதாகவும், எதிரிகளாகவும் காட்டுவதே. (Milli Gazette 1-15, Dec-2016)

துருக்கியர்களின் கலாச்சாரத்தையும் 16 ஆம் நூற்றாண்டுகளில், தாக்கியதற்கு ஓர் வரலாற்றுப் பின்னணி உண்டு. அது,

1453–இல் துருக்கியில் கிலாபத் மீண்டும் நிலைநாட்டப் பெற்றது. "Christendom" என்ற கிருஸ்தவ உலகின், மார்பிடம் எனக் கருதப் பட்ட 'கான்ஸ்டாண்டி நோபுள்' வெற்றி கொள்ளப்பட்டது. கான்ஸ்டாண்டி நோபுள்,

இஸ்லாத்தான்புல் என்றானது. இந்த இழப்பை கிருஸ்தவ உலகால், தாங்கிக் கொள்ள இயல வில்லை. தங்களின் முரட்டுப் பலத்தால் சாதிக்க முடியாமல் போனதை காலமெல்லாம் கட்ட வீழ்த்துவிடும் இஸ்லாமோபோஃபியா – இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் கட்ட வீழ்த்துவிடும் பொய்ப்பிரச்சாரங்கள் வழி சாதிக்க முயற்சி செய்தார்கள்.

இந்த முயற்சிகளின் வழி அவர்கள் சில பல வெற்றிகளையும் ஈட்டினார்கள். பல மாணவர் களை – இளைஞர்களை – சிந்தனையாளர்களை அவர்கள் இஸ்லாத்திற்கெதிராகவும் முஸ்லிம் களுக்கெதிராகவும் திருப்புவதில் வெற்றி பெற்றார்கள்.

இப்படி தனக்குத் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு வெறுப்பை வளர்த்துக் கொண்டவர் களுள் ஒருவர்தான். Lord Byror – லார்டு பைரோர். இவர், யதார்த்தமாக ஒருமுறை துருக்கிக்குச் சென்றிருந்தார். சிலகாலம் தங்கியி ருந்தார்கள். அதுபோது அவர் கண்ட காட்சிகள் அந்த மக்களோடு பழிகிப்பார்த்து இவையெல் லாம் தனக்கு இளம் வயது முதலே போதிக் கப்பட்டவை அனைத்தும் பொய் – உண்மைக்கு நேர் எதிரானவை என்பனவற்றைக் கண்டார். பின் அவர் தன் கருத்துக்களைக் கட்டுரைகளாக 1902–இல் வெளியிடும்போது இப்படிக் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய பெண்களுக்கு சொத்துக்களை சொந்தமாக்கிக் கொள்ளும் உரிமை இல்லை. ஆனால் துருக்கியில் பெண்கள் வியாபார நிறுவனங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். அவர்களே வியாபாரங்களை நடத்தினார்கள். தொழில் நிறுவனங்களை நடத்தினார்கள். ●

– இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடரும்

## சுதந்திரத்திற்காக போராடி சிறை சென்ற முதல் முஸ்லிம் பெண்மணி

# பேகம் முஹம்மது பாத்திமா

டெல்லியில் உள்ள சாந்தி சௌக் என்னு மிடத்தில் ஆங்கிலேயே அரசு நிகழ்த்திய ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினை வு கூற ஒன்றிணைந்த போது 1932ம் வருடம் ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டார்.

“அரசாங்கத்திற்கு எதிராக போர் புரிதல்” என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட பேகம் முஹம்மது பாத்திமா மன்னிப்பு கேட்பதற்கு பதிலாக நீதிமன்றத்திலும் சுதந்திர முழக்கம் இட்டார்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் போது நீதிபதி, பாத்திமா அவர்களிடம் உங்களுக்காக வாதாட அரசு தரப்பிலிருந்து கூட வழக்கறிஞர்களை நியமித்து கொள்ளலாம் என கூறினார்,

அதற்கு பதிலளித்த பாத்திமா, இந்த நீதி மன்றம் அநியாயத்தின் பெயரில் கட்டப்பட்ட கொடூரமான ஆட்சியாளர்களின் ஆதரவின் அடிப்படையில் செயல்படுகிறது. இந்த அடிமைப்படுத்தும் கொடூர ஆட்சியாளர்களி டமிருந்து எந்த பணிவும் தனக்கு தேவையில்லை என்று வீர உரையாற்றினார்.

நீதிமன்றம் தனது உத்தரவில், “இது போல் தைரியம் நிறைந்த பெண்மணிகளை பார்ப்பது அரிது. இவர் செய்த குற்றத்திற்கு ஆறு மாத சிறைத்தண்டனை என்று தீர்ப்பளித்தது.”

இந்தியாவின் சுதந்திரத்தில் முஸ்லிம் ஆண்கள் மட்டும் முன்னனியில் நின்றிடவில்லை. முஸ்லிம் பெண்களும் தைரியமாக முன்வரிசையில் நின்று போராடினார்கள் என்பதற்கு பாத்திமாவின் வாழ்க்கையே சான்று.

முஸ்லிம்கள், மன்னிப்பு கேட்டு என்றும் அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு அடிமை யாக இருப்பதில்லை. அடிபணிய மறுத்து சுதந் திரக்காற்றை பெறுவதற்கு ரத்தம் சிந்த தயாராக இருப்பவர்கள். ●



## இந்துத்துவாவின் ஆட்சியில்

# தலித்களுக்கு இதுதான் நிலை

இந்தியாவில் மிக மோசமான காட்டுமிராண்டித்தனமான ஆட்சி நடந்து வருகிறது என்று சொன்னால் அது உத்திரபிரதேசத்தில் நடைபெறும் ஆட்சி தான். கொலை, கற்பழிப்பு, திருட்டு என எல்லாவற்றிலும் தற்போது முதலிடம் உபி அரசுக்கு தான்.

ஆனால் இதனை தான் சங்கிகள் ராம ராஜ்ஜியம் என்று சொல்லி வருகிறார்கள். ஆனால் இந்த ராம ராஜ்ஜியத்தில் முஸ்லிம்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அநியாயங்கள் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது.

அதிலும் ஒடுக்கப்பட்ட பட்டியலின மக்களின் நிலை மிகவும் மோசம். இதற்கு சமீபத்தில் நிகழ்த்தப்பட்ட ஒரு கோர சம்பவம் ஒரு உதாரணம்.

### ஹாத்ராஸ் பாலியல் வன்புணர்வு

உத்திரபிர தேசத்தின் ஹாத்ராஸ் மாவட்டத்தில் சான்பா மிகச்சிறிய கிராமம் மொத்தமே 600 குடும்பங்கள் தான். அதில் பாதி குடும்பம் உயர் சாதியினரான தாகூர் வகுப்பை சேர்ந்தவர்கள். 100 குடும்பத்தினர் பிராமண வகுப்பை சேர்ந்தவர்கள். 15 குடும்பங்கள் மட்டும் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள்.

இந்தியாவின் மிகக்கொடிய நோயான சாதிக்கொடுமை எதுவும் குறையாமல் சாதிக் கொடுமை நிகழும் ஒரு கிராமம் தான் சான்பா கிராமம். தலித்களின் முன்னோர்கள் தாகூர் மற்றும் பிராமணர்களின் வீடுகளை துடைத்து அதற்கு பகரமாக ரொட்டி வாங்குவார்கள். அது இன்று நின்று விட்டாலும் அவர்களை அதே கீழ் நிலையில் தான் உயர்சாதியினர் அணுகிறார்கள்.

தலித் மக்கள் கடைக்கு சென்று ஏதாவது வாங்கும் போது தவறுதலாக எதன் மீதாவது கை பட்டு விட்டால் அதனை விலை கொடுத்து வாங்கி விட வேண்டும். தலித் கை பட்டு தீட்டு பட்டு விட்டதால் அது விற்பனைக்கு ஆகாது என்ற நடைமுறை இன்றும் இக்கிராமத்தில் தொடர்கிறது.

தாகூர் மற்றும் பிராமணிய மக்கள் யாரும் தலித்களின் வீடுகளுக்குள் வர மாட்டார்கள். ஏதாவது வேலை சம்பந்தமாக அழைக்கக் கூட வேறு ஒரு சமூகத்தாரின் வழியாக தான் சொல்வார்களாம்.

இப்படியொரு மோசமான கிராமத்தில் தலித் குடும்பமாக ஆஷாவின் குடும்பமும் வாழ்கிறது. (பெயர் மாற்றப்பட்டிருக்கிறது)

ஆஷாவுக்கு 19 வயது. அம்மாவுக்கு காது முழுவதுமாக கேட்காது. காதில் எப்போதும் பஞ்சு இருக்கும். இரண்டு அண்ணன்கள். ஒருவர் தோட்டத்தை பார்க்கிறார். இன்னொருவர் வெளி ஊரில் படிக்கிறார்.

எப்போதும்போலவயலில்ஆஷாவும்அவரது தாயாரும் வயலில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆஷாவின் அண்ணன் மாடுகளுக்கு தண்ணீர் வைத்து கொண்டிருந்தான். சிறிது நேரம் கழித்து ஆஷாவின் தாயார் ஆஷா இல்லாததை கவனிக்கிறார். தண்ணீர் குடிக்க சொல்லாமல் சென்று விட்டாள் என்று நினைத்து கோபத்துடன் வேலையை தொடர்கிறார்.

வெகு நேரம் ஆகியும் திரும்பாததால் வீட்டிற்கு திரும்பும் போது ஆஷாவின் நீல செருப்புகள் வழியில் கீழே கிடப்பதை பார்த்து

அரண்டு விட்டார். செருப்பு கிடப்பது உயர் சாதி தாகூர் சமூகத்துக்கு சொந்தமானவர் தோட்டத் துக்கு அருகில். அதிலும் அந்த தோட்டத்துக்காரர் ஏற்கனவே விலங்குகள் தங்களின் தோட்டத்தில் மேய்கிறது என நியாயம் கேட்க போன ஆஷா வின் தாத்தா கைவிரல்கள் துண்டித்தார். இந்த பயத்துடன் தோட்டத்தின் பாதையில் சென்று பார்த்த போது, தன் மகள் ஆஷா ஆடையின்றி நாக்கு வெளியே வந்து பிறப்புறுப்பில் ரத்தம் வழிந்தவாறு நிலத்தில் சரிந்து கிடந்ததை கண்டு கதறி அழுது தன் மகளை காப்பாற்றுங்கள் என்று கதறுகிறார்.

எடுத்த முயற்சி எதுவும் பலனிக்கவில்லை.

இந்த டிஜிட்டல் உலகில் அநீதிகளை வெளிப் படுத்தினால் உதவி கிடைக்கும் என்று கருதி டிவிட்டர் தளத்தில் ஆஷா காவல்நிலையத்தில் மயங்கி கிடக்கும் போட்டோவை போட்டு அவளுக்கு நிகழ்ந்த அநீதிளை பதிந்து சில செய்தி சேனல்களையும் டேக் செய்திருக்கிறார். ஆனால், ஒருவர் கூட பதில் தரவில்லை. கண்டு கொள்ளாமல் விடப்பட்டது.

மருத்துவமனையில் தன்னை வன்புணர்வுக்கு உள்ளாக்கிய நான்கு உயர் சாதி தாகூர் சமூகத்தை




ஆஷாவின் அண்ணன் ஓடி வந்து தன் தங்கை யின் நிலையை பார்த்து உதவிக்கு அருகிலிருப்ப வர்களை அழைக்கிறான். உதவிக்கு ஒருவர் கூட வரவில்லை. உயிருக்கு போராடிக்கொண்டிருக் கும் தன் தங்கையைக் தூக்கிக் கொண்டு தாயுடன் சான்பா காவல்நிலையத்திற்கு செல்கிறார்கள். அங்கே காவல்துறை நாடகம் போடாமல் பெண்ணை தூக்கிக் கொண்டு போ என சத்தமிடு கிறார்கள்.

ஆஷாவின் உறவினர் ஒருவர் வந்து காவல் துறையினரிடம் வழக்கு பதிவு செய்ய வைத்து மருத்துவமனைக்கு அழைத்து செல்கிறார்கள். ஆஷாவின் இந்த நிலைக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று ஆஷாவின் அண்ணன்கள் சேர்ந்த இளைஞர்களின் பெயரையும் சொன்னாள் ஆஷா. ஆனால் சாதித்திமிர் பிடித்த கொடூர நான்கு மிருகங்களால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட ஆஷாவின் உயிர் பிரிந்தது.

கிட்டத்தட்ட 20 நாட்கள் போராட்டம். ஆனால், இப்போதுதான் இந்த செய்தி அனை வரின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது. அதற்குள் ஆஷாவின் உயிர் பிரிந்து விட்டது.

இந்த சம்பவத்தில் சிறு துளி கூட கற்பனை இல்லை. அங்கே நடந்த சம்பவத்தை கள ஆய்வு செய்து News laundry என்ற செய்தி நிறுவனம் தகவல் திரட்டியிருக்கிறது.

## நள்ளிரவில் அடக்கம்

இந்த பிரச்சனை கவனம் ஈர்க்கப்பட்டு விட்ட தால் காவல்துறை இதனை மூடி மறைப்பதற் காக நடு இரவில் குடும்பத்தார்களை கட்டாயப் படுத்தி ஆஷாவின் உடலை எரித்து விட்டார்கள்.

தமிழ் செய்திதாள்கள் இச்செய்தியை எப்படி பிரதிபலித்தன என்று தெரியுமா?..

தமிழ்நாட்டிற்கு வெளியே நடக்கும் செய்திகள் குறிப்பாக டெல்லி தவிர மற்ற மாநிலங்களில் நடக்கும் செய்திகளை ஆங்கில ஊடகங்களில் இருந்து தான் செய்திகளை எடுத்து போடுவார்கள்.

அதன்படி ஆங்கில நாளேடுகளில் முழுக்க, "தலித் பெண் பாலியல் வன்புணர்வு" என்ற தலைப்பில்தான் செய்தி வெளியிட்டிருந்தார்கள், ஆனால், நமது தமிழ் ஊடகங்கள் அந்த தலித் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் செய்தி வெளியிட்டன.

தினகரன் நாளிதழ், "உத்திரபிரதேசத்தில் நான்கு பேர் கொண்ட கும்பலால் இளம்பெண் சாவு"

தினமணி நாளிதல், "கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளான இளம் பெண் தில்லி மருத்துவமனையில் உயிரிழப்பு"

தினமலர் நாளிதழில், "கூட்டு பலாத்காரம் உபியில் இளம்பெண் பலி"

இந்து தமிழ் நாளிதழில், இப்படியொரு செய்தியே இடம்பெறவில்லை.

இதுதான் தமிழ் ஊடகங்களில் லட்சணம். தலித் அடையாளத்தை மழுங்கடித்து ஒரு சமூகத் திற்கு எதிராக நடக்கும் சம்பவங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்க்காமல் இருப்பதற்காக நிகழ்த்தப்படும் சதியே இத்தகைய போக்கு.

## தலித் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் பாலியல் குற்றங்கள்

இந்தியாவில் தலித்களுக்கெதிராக குற்றங் கள் நடந்து கொண்டே இருக்கிறது என்றாலும் சாதிய ஆதிக்கம் நிலவும் விதமாக தொடர்ந்து தலித் சமூக பெண்கள் பாலியல் ரீதியான தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

தலித் சமூக பெண்களின் மீது சாதிக் கொடுமையை சுமத்துவது என்பது பாலியல் ரீதியான வன்புணர்வாகவே வந்து முடிகின்றது.

2014 மே 27ம் தேதி உத்திரபிரதேசத்தின் கத்ரா கிராமத்தில் இரண்டு தலித் இளம்பெண்கள் உயர்சாதியினரால் கடத்தப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு மரத்தில் தொங்கவிடப்பட்டனர். இது அவர்கள் தங்கள் ஊதியத்தில் 3 ரூபாயை உயர்த்தி தரக்கோரி கேட்டதற்காக நடத்தப்பட்டது.

ஏப்ரல் 2018ல் மத்திய பிரதேச மாநிலத்தில் ஒரு தலித் இளம்பெண் கையில் ஆறு மாத கருவை பிளாஸ்டிக் பையில் போட்டவாறு காவல்நிலையத்திற்கு சென்று நியாயம் கேட் டார். அந்த பெண்ணை மூன்று உயர் சாதிக் காரர்கள் ஆறு மாதம் அடைத்து வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

2016ல் ஹரியானாவில் உயர் சாதியினராக மதிக்கக்கூடிய ஜாட் சமூகத்தினர் அரசு பதவி களில்தங்களுக்கானஇட ஒதுக்கீட்டைஏற்படுத்தி தர வேண்டும் என்று வன்முறையில் ஈடுபட்டனர். இதில் சிலர் தலித் குடும்பத்தை சேர்ந்த ஒன்பது பெண்களை இழுத்து வந்து கூட்டு பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டனர்.

இதுபோல் இன்னும் பல்வேறு சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தேசிய குற்ற வியல் ஆவண பணியகம் (NCRB) மற்றும் தலித் மனித உரிமை அமைப்புகளின் 2016ன் அறிக்கைப் படி இந்தியாவில் ஒரு நாளைக்கு நான்கு தலித் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.

தலித்களுக்கெதிரான இந்த கொடூரங்கள் நடக்காமல் தடுப்பதற்காக பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டும் அது வெறும் சட்டங் களாக மட்டுமே இருக்கிறதே ஒழிய தலித்களுக் கெதிராக இருக்கும் உயர்சாதி மனநிலை இன்றும் மாறவே இல்லை.

சாதிகளின் பிடியில் நின்று கொண்டு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் எவரும் இக்கொடூரங்களுக்கு ஆதரவானவர்கள் தான். இவர்களால் தான் இந்த மனநிலை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

– அபூ சித்திக்.




# இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகள்

ஹரியானாவை சேர்ந்த இமாம் ஒருவர் கடுமையாக இந்துத்துவ தீவிரவாதிகளால் தாக்கப்பட்டார். (செப்.1)

குஜராத்தில் இந்து மதத்தை சேர்ந்தவருக்கான நிலத்தை முஸ்லிம் மதத்தை சேர்ந்த்வர் வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஹனிஃபா என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. (செப்.1)

டெல்லி கலவர வழக்கில் கைது செய்யப்பட்ட தாஹிர் உசேன் தனது தவறை ஒப்புக் கொண்டு காவலர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கி விட்டதாக அனைத்து செய்தி தாள்களும் வெளியிட்டன.

RTI மூலம் கேட்ட கேள்விக்கு காவல்துறையினர் அப்படி ஏதும் வாக்குமூலம் பெறப்படவில்லை என பதில் அளித்தனர். (செப்.2)

காஷ்மீரில் தன் கிளர்ச்சியாளர்களின் படைகளில் இணைந்து பலியான அண்ணனின் நினைவாக இறந்தவருக்கு விருப்பமாக கிரிக்கெட் விளையாட்டை விளையாடியதற்காக காஷ்மீர் இளைஞர்கள் 10 பேர் கடுமையான UAPA சட்டத்தின்கீழ்கைது செய்யப்பட்டனர். (செப்.3)

புதிதாக கட்டவிருக்கும் பாபரி பள்ளியில் பழைய பாபரி பள்ளியின் எந்த அங்கமும் இருக்காது. அது பழமையான கட்டட வடிவிலும் இருக்காது. இப்போது என்ன மாதிரியான கட்டடங்கள் இருக்கிறதோ அது போல் தான் இருக்கும் என்று அரசு கொடுத்த 5 ஏக்கர் நிலத்தில் மசூதி கட்ட நியமிக்கப்பட்டிருக்கும் பொறியாளர் கூறினார். (wire 03.09.2020) (செப்.3)

உபியில் பாசித் கான் என்ற முஸ்லிம் இளைஞனை பொய்யான திருட்டு குற்றச்சாட்டை சுமத்தி மரத்தில் கட்டி வைத்து கடுமையாக தாக்கி அதனை பொதுத்தளத்திலும் வெளியிட்டனர். கொடூரமான தாக்குதலால் இளைஞர் இறந்து விட்டார்.

இந்த ஆண்டு முஹர்ரம் பண்டிகையும், விநாயகர் சதுர்த்தியும் அடுத்தடுத்து வந்தன. இதில் மத்திய பிரதேச அரசு பொது வெளியில் தங்கள் வழிபாடுகளை நிகழ்த்த தடை விதித்திருந்தது.

ஷியா பிரிவை சேர்ந்த ஒரு இளைஞன் பொதுவெளியில் தன் வழிபாடுகளை நடத்தினார் என்று கூறி கடுமையான சட்டமான தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தனர்.

ஆனால் அதுவே விநாயகர் சதுர்த்தி தினத்தை 10 நாள் திருவிழாவாக கொண்டாடிய பாஜக எம்எல்ஏ உட்பட பலரின் மீதும் எந்த நடவடிக்கையும் இல்லை. (செப்.4)

உ.பி. மாநிலத்தில் விஷ்வ இந்து பரிசத் அமைப்பை சேர்ந்த ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததற்காக என கூறி 42 வயதான ஹசன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

தனி மனிதனுக்கு கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் எதற்காக தேசத்துரோக வழக்கு என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பினர். (செப்.5)

இதழியல் பட்டப்படிப்பு முடித்த 24 வயதான காசால அஹமது என்ற முஸ்லிம் பெண்மனிக்கு ஹிஜாப் எனும் தலைமுடியை மறைக்கும் ஆடையை அணிந்திருந்ததால் இந்தி செய்தி சேனல் ஒன்றில் வேலை மறுக்கப்பட்டது.

உத்திரபிரதேசத்தில் டாக்சி டிரைவராக வேலை பார்க்கக்கூடிய அல்தாப் ஆலம் என்ற முஸ்லிம் மனிதருக்கு சிலர் போன் செய்து ஜெய் ஸ்ரீ ராம் சொல் என்று மிரட்டியிருக்கிறார்கள். இதனை தொடர்ந்து அவர் கொலையும் செய்யப் பட்டிருக்கிறார். மிரட்டியவர்களின் போன் ரிக்கார்டை காவல்துறையிடம் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. (செப்.7)

இந்துத்துவ சக்திகளின் பிரதான வேலையே போட்டோஷாப்களின் மூலமும் மார்பிங் செய் யப்பட்ட வீடியோ மூலமும் முஸ்லிம்களுக்கெதி ரான கலவரத்தை தூண்டுவது தான்.

இதனை alt news என்ற உண்மை கண்ட றியும் செய்தி நிறுவனம் வெளிரும் பொய்ச் செய்திகளை எல்லாம் தோலுரித்து காண்பித்து கொண்டிருந் தார்கள்.

இதில் alt newsன் சக நிறுவனரான முஹம்மது ஜுபரி முன்னனியில் நின்றார். அதனால், அவர் மீது பொய்யான பாலியல் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புகாரை கொடுத்தவர் நீண்ட நாட்கள் ஜுபைரை ஆபாசமாக பொதுத் தளத்தில் திட்டி எழுதி வந்தவர். (Newslaundry 08.09.2020) (செப்.8)

55 வயதான குரேசி எனும் முஸ்லிம் பெரியவரை உத்திரபிரதேச காவலர்கள் வீட்டிற்குள் புகுந்து கடுமையாக தாக்கியிருக் கிறார்கள். இத்துடன் வீட்டில் இருந்த 20000 ரூபாயையும் கொள்ளையடித்து சென்று விட்டார்கள் என குரேசியின் மனைவி பேகம் பேட்டியளித்திருக்கிறார். (செப்.8)

கேரளாவில் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்ட வழகில் இவர்கள் மீது சந்தேகம் இருக்கிறது என்று 18 மற்றும் 20 வயதுடைய அப்துல் ரஹ்மான் மற்றும் பிலால் இருவரை அழைத்து சென்றனர் காவலர்கள். விசாரணை என்ற பெயரில் நெஞ்சில் ஏறி அமர்ந்து ஆணுறுப்பில் லைட்டர் மூலம் சூடு வைத்திருக் கிறார்கள் என அவர்களது வழக்கறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள், (செப்.9)

கேரளாவில் சையத் என்ற sdpi கட்சியின் உறுப்பினர் ஒருவர் கொடூரமாக கொல்லப்பட் டார். இந்த கொலையை செய்த மூன்று தநந காரர்கள் கைது செய்யப்பட்டனர். (செப்.10)

2020ல் முஸ்லிம்கள் அதிகமாக மடநஇ தேர்வில் வெற்றி பெற்று விட்டார்கள் என்ற தவறான பொய் பிரச்சாரத்தை முன்னிறுத்தி சுதர்சன் எனும் இந்தி செய்தி சேனல் UPSC ஜிஹாத் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்ப முனைந்தது. அதனை நீதிமன்றம் சென்று நிறுத்தி வைத்தனர் சமூக ஆர்வலர்கள். ஆனால்,அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்ப மோடி அரசு அனுமதி வழங்கியது. (செப்.10)

ஹரியானாவில் முஸ்லிம் இஹ்லாக் எனும் முஸ்லிம் இளைஞன் கையில் 786 என்று பச்சை குத்தியிருந்ததால் அவரின் கையை இந்துத்துவ தீவிரவாதிகள் வெட்டி எடுத்தனர். (செப்.7)




கர்நாடகாவில் போதைப்பொருள் வணிகம் காரணமாக ஒரு நடிகை கைது செய்யப்பட்ட பிறகு அந்த செய்தியை drug jihad என தலைப் பிட்டு கன்னட மீடியாக்கள் செய்தி வெளியிட் டன. முஸ்லிம்களை தொடர்ச்சியாக குறி வைக்க பயன்படுத்தப்படும் ஜிஹாத் என்ற வார்த்தையை போதைப்பொருளுடன்குறிப்பிட்டு மேலும்முஸ் லிம் வெறுப்பு செய்திகளை வெளியிட்டார்கள். (செப்.12)

புகழ்பெற்ற முன்னாள் IPS அதிகாரியான ஜூலியோ ரிபெரியோ, டெல்லி காவல்துறை டெல்லி கலவர வழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவதாகவும், விசாரணை நியாய மாக நடத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (செப்.12)

சபீர் என்ற ஜம்முவை சேர்ந்த முஸ்லிம் இளைஞன் முஸ்லிம் பெண்களிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சித்த மஹேசின் நடவடிக் கைகளை கேள்வி கேட்டதற்காக, இந்துத்துவ அமைப்பை சேர்ந்தவர்களால் கொல்லப்பட் டார். (செப்.13)

இரண்டு காஷ்மீர் பத்திரிக்கையாளர்கள் தங்கள் வேலையை சரியாக பார்த்ததற்காக கடுமையாக காவலர்களால் தாக்கப்பட்டனர். (செப்.15)

ஒரே இரவில் உத்திரபிரதேசத்தில் ஒரு மசூதி சாலை விரிவாக்கம் என்ற பெயரில் காணாமல் ஆக்கப்பட்டது. இது குறித்து விரிவான அறிக்கை article 14 செய்தி தளத்தில் வெளியிடப்பட்டது. (செப்.15)

26 வயதான அப்பாவி காஷ்மீர் இளைஞன் காவல்துறையின் கஸ்டடியில் கொல்லப்பட் டான். அதற்கு எதிராக போராட்டம் நடத்தப் பட்டது. காவலர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. (செப்.16)

பெங்களூரில் ஏற்பட்ட கலவரத்தினை ஆய்வு செய்த உண்மை கண்டறியும் குழுவினர் காவலர்கள் உரிய நேரத்தில் செயல்பட வில்லை. செயல்பட்டிருந்தால் கலவரம் தடுக்கப்பட்டி ருக்கும் என்று கூறினர். (Newsminute 16.09.2020) (செப்.16)

42 வயதான காஷ்மீரின் தாயார் அநியாயமாக மகனின் முன்னால் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (செப்.17)

காஷ்மீரில் சோபியன் பகுதியில் மூன்று அப்பாவி இளைஞர்கள் இந்திய ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் இராணுவம் அஊஸடஅ சட்டத்தை அதிகாரிகள் தவறாக பயன்படுத்தினார்கள் என்று ஒத்துக்கொண்டது. ஆனாலும், அந்த குடும்பத்திற்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. (செப்.18)

செப்டம்பர் 19 2008ல் டெல்லி காவல் துறையால் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் பாட்லா ஹவுஸ் பகுதியில் 17 வயது இளைஞர் உட்பட பலர் எண்கவுண்டர் செய்யப்பட்டனர். (செப்.19)

காவலர்கள் அவர்களை தீவிரவாதிகள் என்றனர். ஆனால், அதற்குபின் அவர்கள் கொடுத்த தகவல் அனைத்தும் முன்னுக்கு முரணாக இருந்தது. அப்பாவி இளைஞர்கள் திட்டமிட்டு கொல்லப்பட்டதாக அப்பகுதி யினர் கூறினர். விரிவான விசாரணை வேண்டும் என்று போராடினர்.

12 வருடங்கள் கடந்தும் அந்த சம்பவத்திற்கு எந்த விசாரணையும் செய்யப்படவில்லை.

நியூஸ் நேஷன் என்ற ஊடகத்தின் விவாத நிகழ்ச்சியில் பேசிய பாஜகவை சேர்ந்தவர் இந்தியாவில் குரான் தடை செய்யப்பட வேண்டும் என்றும் குர் ஆன் தீவிரவாதிகளை உருவாக்குகிறது என்றும் பேசினார். அவரை நெறியாளர் தடுத்து நிறுத்தவுமில்லை. இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. (செப்.19)

சர்ஜீல் இமாம் என்ற இளைஞர் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தின் முன்னனியில் நின்றதால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த வழக்கில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்த காவல்துறை அவர் தேச பிரிவினை சம்பந்தமாக ஒரு ஆய்வை நிகழ்த்த பல்வேறு புத்தகங்கள் படித்ததனால் தீவிரவாத சிந்தனைக்கு ஆட்படுத்தப்பட்டிருக் கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (செப்.20)

காஷ்மீரில் இண்டர்நெட் வேகம் தடை செய்யப்பட்டு 2ஜி வேகத்தில் மட்டுமே இண்டர் நெட் கொடுக்கப்படுகிறது. இது ஊரடங்கில் இருக்கும் மாணவர்களுக்கும், கல்வியாளர் களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்ற கேள்விக்கு 2ஜி வேகத்திலேயே தேவையான தை கற்றுக்கொள்ள முடியும் என்று அரசு பதில் கொடுத்தது. (செப்.21)

டெல்லி கலவர வழக்கில் காவலர்களால் அநியாயமாக கைது செய்யப்பட்டிருக்கிற கல்வி யாளர் குல்ஃபிசா பாத்திமா தான் சிறையில் மனரீதியாகவும், உளவியல் ரீயாதகவும் வன் முறைக்கு உள்ளாக்கப்படுவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார். (செப்.21)

*26* வயதான சுஹைலை சந்தேகத்தின் பெயரில் அழைத்து சென்ற மும்பை காவல்துறை கடுமையாக தாக்கியிருக்கிறார்கள். சுஹைலை விடுவிக்க வேண்டுமென்றால் இரண்டரை லட்சம் லஞ்சமாக கேட்டிருக்கிறார்கள். காவலர்கள் தாக்குதலில் சுஹைலின் மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்து விட்டார். (செப்.22)

டெல்லி கலவரத்திற்கு மூல காரணமாக இருந்தது பாஜக தலைவரின் கபில் மிஸ்ராவின் வெறுப்புபேச்சு. ஆனால், காவல்துறையின்குற்றப் பத்திரிக்கையில் கபில் மிஸ்ரா அப்டியொரு உரை நிகழ்த்தவில்லை என்று குறிப்பிட்டது. ஆனால், கபில் மிஸ்ரா பேசிய வீடியோ உலகம் இருக்க மக்கள் பார்த்தார்கள். (செப்.22)

காஷ்மீரின் பல்காம் மாவட்டத்தில் இரண்டு காஷ்மீர் பெண்கள் தாங்கள் காவல்நிலையத்தில் ஆண் காவலர்களால் மிக மோசமாக தாக்கப் பட்டோம் என்று ஊடகங்களிடம் கூறினார்கள். (செப்.22)

ஜார்க்கண்ட் மாநிலத்தில் பாஜக ஆட்சி அகற்றப்பட்டதற்கு பிறகு அங்கே முஸ்லிம்கள்




மீதான கொடுமை குறைந்திருப்பதாக ஒரு ஆய்வறிக்கை சொல்கிறது. (செப்.23)

முஸ்லிம் வாலிபர்கள் இருவர் பசுவதை தடை சட்டத்தின் கீழ் தவறுதலாக கைது.

உத்திரபிரதேச மாநிலத்தில் ஜாகிர் அலி தியாகி மற்றும் 17 வயதான ரவூஃப் அஹ்மதும் பசுவதை தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டனர்.

உத்திரபிரதேசத்தில் பசுவதை தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் 10 வருடம் சிறை தண்டனை.

ஜாகிர் அலி தொடர்ச்சியாக அரசை விமர்சித்து வந்ததாலும், ரவூஃப்பின் அப்பா தனது பால் நிறுத்திய வயதான மாட்டை காட்டில் விட்டு வந்ததற்காகவுமே இந்த கைது நடத்தப்பட்டிருக்கிறது. இவர்கள் எந்த பசுவதை நிகழ்விலும் ஈடுபடவில்லை.


இந்த வருடம் மட்டும் இந்த பிரிவின் கீழ் 4000 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றன ர். இதில் பெரும்பாலானோர் முஸ்லிம்களும், தலித் களும் ஆவர். (scroll 23.09.2020)

காஷ்மீரின் முன்னாள் முதல்வர் ஃபரூக் அப்துல்லா ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் தற்போது காஷ்மீர் மக்களின் மனநிலையில் யாருமே தங்களை இந்தியர்கள் என்று உணர வில்லை. நாங்கள் காந்தி சொன்ன இந்தியாவில் தான் இணைந்தோம். மோடியின் இந்தியா மிக மோசமானதாக இருக்கிறது எண்றார். (செப்.25)

பாபர் காத்ரி என்ற காஷ்மீரி வழக்கறிஞர் காஷ்மீரில் சுட்டு கொல்லப் பட்டார். இவர் தொடர்ச்சியாக காஷ் மீருக்கு எதிராக அரசு எடுத்து வரும் நடவடிக்கையை கேள்விக்கு உட்படுத்தி வந்தவர். வழக்கறிஞரின் தந்தை காவல் துறையின் மீது நம்பிக்கை இல்லை என்றும், எப்படியும் அவர்கள் ஏதாவது ஒரு ஏழை காஷ்மீரை இழுத்து வந்து இதற்கு பலிகடா ஆக்குவார்கள். இதுதான் காஷ்மீரில் நடக்கிறது என அவர்கள் விசாரணைக்கு கூட நான் ஒத்து ழைக்க மாட்டேன் என கூறி விட்டார். (செப்.29)

உபி மாநிலத்தின் அலகாபாத் மாவட் டத்தில் இருக்கும் பழமையான ஈத்கா மசூதி கிருஷ்ண ஜென்ம பூமி இருக்கிறது அதனை மீட்டெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையில் அக்டோபர் 15ம் தேதி அகில இந்திய சாதுக்கள் சபை கூடுகிறது. பாபரி மசூதி இடிப்பிற்கும் இப்படி யான சாதுக்கள் சபை கூடி தீர்மானம் இயற்றியது. (செப்.30)

# கொரோனா பாதுகாப்பு வழிகள்..!



பொதுமக்கள் மற்றும் நோயாளிகளை கொரோனா ஆபத்திலிருந்து எப்படிக் காப்பது? தமிழக அரசு இதற்காக வழிகாட்டு முறைகளை வெளியிட்டுள்ளது. முகக் கவசம் அணிவது, அடிக்கடி கை கழுவுவது ஆகியவற்றுடன் இதையும் பின்பற்ற வேண்டும்.

## நீரிழிவு நோயாளிகளைக் காக்க

■ கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்புக் குடிநீரை முறையாகத் தயாரித்துப் பருகவும்.

■ முழு தானியங்கள், பருப்பு வகைகள், முட்டையின் மஞ்சள் கரு, மீன், பச்சை மற்றும் நார்ச்சத்துள்ள காய்கறிகள் சாப்பிடவும்.

■ மஞ்சள், இஞ்சி, பூண்டு, சீரகம், வெந்தயம், சுக்கு, மிளகு போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

■ உடற்பயிற்சி, யோகா போன்றவற்றை தவறாமல் செய்யவும்.

■ ரத்த சர்க்கரை அளவை வாரம் ஒருமுறை பரிசோதிக்கவும்.

■ கால்கள் மற்றும் பாதங்களை கவனமாகப் பராமரிக்கவும்.

## இதய நோயாளிகளைக் காக்க

■ காய்கறிகள் மற்றும் பழங்கள் நிறைந்த உணவை சாப்பிடவும்.

■ ஆரோக்கியமான உணவுகள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும்.

■ இதய செயலிழப்பு நோய் உள்ளவர்கள் உணவு மற்றும் நீர்க் கட்டுப்பாடுகளை அவசியம் பின்பற்றவும்.

### கபசுரக் குடிநீர் அளவு என்ன?

கொரோனா அச்சம் தவிர்க்கும் கபசுரக் குடிநீர் யார் யார் எந்த அளவில் குடிக்க வேண்டும்?

■ ஆரோக்கியமாக இருப்பவர்கள், வாரம் மூன்று முறை குடிக்கவும். 10 வயது வரை 10 மில்லி, 10 முதல் 15 வயது வரை 20 மில்லி, 15 முதல் 18 வயது வரை 30 மில்லி, பெரியவர்கள் 40 மில்லி குடிக்கவும்.

■ டாக்டர்கள், போலீஸார், சுகாதாரப் பணியாளர்கள் போன்றவர்கள் ஒரு நாளில் ஒரு வேளை 50 மில்லி குடிக்கவும்.

■ கொரோனா நோயாளிகள் தினம் மூன்று வேளை 40 மில்லி குடிக்கவும். நோயாளியைப் பராமரிக்கும் குடும்பத்தினர் 50 மில்லி இரண்டு வேளை குடிக்கவும்.

■ ஹோமியோபதி மருந்தான ஆர்சனிக் ஆல்பம் 30, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இதை மூன்று நாட்கள் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவும். பெரியவர்களுக்கு 6 உருண்டை, குழந்தை களுக்கு 4 உருண்டை.

■ ஸ்டென்ட் பொருத்தியுள்ள நோயாளிகள், தங்களது மருந்துகளை தவறாமல் உட்கொள்ளவும்.

■ தினமும் 8 மணிநேரம் ஆழ்ந்த உறக்கம் அவசியம்.

## சிறுநீரக நோயாளிகளைக் காக்க

■ டாக்டர்கள் சொல்லியிருக்கும் உணவுக் கட்டுப்பாடு மற்றும் நீர்க் கட்டுப்பாடுகளை தவறாமல் பின்பற்றவும்

■ டாக்டர்கள் ஆலோசனைப்படி ஆரோக்கியமான உணவுகள் எடுத்துக் கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும்.

■ சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு டயாலிசிஸ் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள், கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும்.










■ எந்தக் காரணத்துக்காகவும் டயாலிசிஸ் சிகிச்சையைத் தவிர்க்கக் கூடாது. அது உயிருக்கே ஆபத்தாக முடியும்.

■ தொடர் சிகிச்சையில் இருப்பவர்களுக்கு ஒரு மாத மருந்துகளை முன்கூட்டியே வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## கர்ப்பிணிகளைக் காக்க

■ கர்ப்ப காலத்தில் நீரிழிவு நோய், ஆஸ்துமா நோய், உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும்.

■ மருத்துவக் காரணங்கள் தவிர, வேறு எதற்காகவும் வெளியில் செல்லக்கூடாது. வீட்டுக் குள்ளும் மற்றவர்களிடம் இடைவெளியைக் கடைபிடிக்கவும்.

■ தொண்டை கரகரப்பு, வலி, இருமல், காய்ச்சல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற பிரச்னைகள் இருந்தால், உடனே மருத்துவரின் ஆலோசனைப் பெறவும்.

■ கர்ப்ப கால பரிசோதனைகளைத் தவறாமல் செய்து கொள்ளவும்.

■ ஆரோக்கியமான உணவு சாப்பிடவும், வீட்டுக்குள்ளேயே நடைப்பயிற்சி செய்யவும்.

■ மருத்துவமனை பிரசவமே பாதுகாப்பானது. அச்சமின்றி மருத்துவமனை செல்லவும்.

■ பிரசவத்திற்கு பிறகு உரிய பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, குழந்தைக்குப் பால் ஊட்டவும்.

■ காய்கறிகள், பழங்கள் நிறைய எடுத்துக் கொள்ளவும், வைட்டமின் சி நிறைந்த ஆரஞ்சு, கொய்யா, எலுமிச்சை, நெல்லிக்காய் அதிகம் சாப்பிடவும்.

■ உணவில் மஞ்சள், சீரகம், பூண்டு, இஞ்சி, வெங்காயம் அதிகம் சேர்த்தால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.

■ வீட்டைச் சுற்றியே வாக்கிங் போகலாம். யோகா பிரணாயாமம் செய்யலாம்.

■ படிப்பது, இசைக் கேட்பது என்ற மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ளவும்.

## குழந்தைகளைக் காக்க

■ குழந்தைகள் சாப்பிட தனி தட்டுகள், டம்ளர்கள் உபயோகிக்க வேண்டும். சாப்பிட்ட பின் அவற்றை சுடு தண்ணீரில் கழுவவும்.

■ தினமும் வீட்டையும், அதிகமான கைபடும் கதவு, கைப்பிடி, தாழ்ப்பாள், தண்ணீர்க் குழாய்கள் போன்ற பொருட்களையும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யவும்.

■ வீட்டுக்குள்ளேயே விளையாடவும், உடற் பயிற்சி செய்யவும் அவர்களை ஊக்குவிக்கவும்.

■ உணவில் முட்டை, பருப்பு வகைகள், முழு தானியங்கள் காய்கறிகள் சேர்க்கவும்.

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று

புத்தகத்திலிருந்து

# கத்தியின்றி ரத்தமின்றி முதல் கிப்லா ஜெருசலம் மீட்பு வரலாறு!



## உமர் (ரழி) அவர்கள் காலத்தில்தான் ரோம பேரரசு வெற்றி கொள்ளப்பட்டது

அல்லாஹ்வின் பாதையில் தங்களை அர்ப் பணித்துக்கொண்ட முஸ்லிம்கள் ஜெரு சலேம் நோக்கி நடந்தார்கள்.

முஸ்லிம்கள் செல்லுமிடமெல்லாம் வெல்லும் செய்தி ஜெருசலத்தைக் காத்து நின்ற கிறிஸ்தவ படைகளையும் சென்றடைந்தது. சற்று ஈடுகொடுத்து பார்த்தார்கள். முடியவில்லை. ஓடி ஒளிந்து கொண்டார்கள். இனி இந்த உண்மை வீரர்களை முஸ்லிம்களை எதிர்கொண்டு ஆகப்போவது எதுவும் இல்லை என முடிவு கட்டினார்கள்.

பாதிரியார்கள், கிறிஸ்தவ மதகுருக்கள் இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு முடிவை எடுத் தார்கள். நாம் சரண் அடைவோம். ஆனால் முஸ்லிம்களின் தலைவர் உமர் (ரழி) அவர்களி டம் மட்டுமே ஜெருசலத்தை ஒப்படைப்போம். வேறு யாரிடமும் ஒப்படைக்க மாட்டோம் என்பதுதான் அந்த முடிவு. தளபதி அபூ உபைதா (ரழி) அவர்கள் இச்செய்தியை உமர் (ரழி) அவர்களுக்கு அனுப்பினார்கள்.

செய்தி மதினாவிலிருந்த இஸ்லாமிய ஆட்சித் தலைவர் உமர் (ரழி) அவர்களை எட்டியது. உமர்(ரழி) அவர்கள் ஜெருசலத்தை ஏற்றெடுக்க பயணமானார்கள். முதலில் சிரியா சென்று பின்னர் ஜெருசலம் செல்வதாக முடிவு. அலீ (ரழி) அவர்களை அழைத்து தான் திரும்பி வரும் வரை கலீஃபாவின் பணிகளை கவனிக்க வேண்டும் என கூறி கலீஃபா அவர்கள் பணிகளை ஒப்படைத்துவிட்டு பயணமானார்கள்.

தன் வாழ்நாள் முழுவதும் எளிமையின் எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டிய இறை வனின் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை அப்படியே பின்பற்றுபவராய் வாழ்ந்தார்கள் உமர் (ரழி) அவர்கள்.

அன்சாரி நபித்தோழர்கள் சிலரும், முஹாஜரின் நபி தோழர்கள் சிலரும் உமர் (ரழி) அவர்களுடன் பயணமானார்கள்.

சிரியாவில் உள்ள ஒரு நகரமான ஜாபியா என்னுமிடத்தில் உமர் (ரழி) அவர்களை சந்திக்க வேண்டும் என முஸ்லிம் படைகளின் தளபதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

யஜீத் (ரழி), அபூசுஃப்பியான் (ரழி), ஹாலித் பின் வலீத் (ரழி) ஆகியோர் உமர் (ரழி) அவர்களை அழைக்க வந்தார்கள். இது ஹிஜ்ரத் துக்கு பின் 16-ம் ஆண்டில் ரஜப் மாதத்தில் நடந்தது.

எளிமையின் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த வர்கள் தான் முஸ்லிம் தளபதிகள். எனினும் மலைகளாய்க் குவிந்த வெற்றிகள், அந்த வெற்றிகள் வானளாவ பெற்றுத் தந்த செல்

வங்கள். இவை அந்த முஸ்லிம் தளபதிகளின் ஆடைகளில் பளிச்சிட்டன.

ஆமாம்! அவர்கள் நல்ல உயர்தர ஆடைகளை அணிந்திருந்தார்கள். அவர்கள் கம்பீரமாய் வீற்றிருந்த குதிரைகள், அக்குதிரைகளின் மேல் விரிக்கப்பட்டிருந்த விலையுர்ந்த விரிப்புகள். இவையெல்லாம் பளபளப்பைக் காட்டின. வழக்கமான எளிமை அங்கு இல்லை.

கலீஃபா உமர் (ரழி) அவர்கள் இவர்களைக் கண்டவுடன் சற்று வேதனையடைந்தார்கள். இவர்கள் வெற்றிகள் குவித்த வளத்திற்கு அடிமையாகி விட்டார்களோ என்ற அச்சம் கலிஃபா அவர்களை வேதனையால் வருத்திற்று. வாளும் போரும் இனி இவர்களுக்கு அன்னிய மாகிப் போகுமோ என உமர் (ரழி) அவர்கள் அஞ்சினார்கள்.

இந்த பளபளக்கும் படைத் தளபதிகளை கண்டவுடன் தன் குதிரையை விட்டுக் கீழே இறங்கினார்கள். அங்கே கிடந்த சில சிப்பி களைப் பொறுக்கினார்கள். அவற்றை இந்த முஸ்லிம் தளபதிகளை நோக்கி வீசினார்கள்.

'அதற்குள்ளால் நீங்கள் பாரசீகப் பழக்க வழக் கங்களுக்கு ஆளாகி விட்டீர்களா ?' என்றார்கள் .

அங்கே நின்ற தளபதிகள் குடியரசுத் தலை வரின் கோபம் , அவர்கள் எடுத்து வைத்த வினா இவற்றிற் க்கு பதிலாக தங்கள் மேலாடைகளைச் சற்று விலக்கி காட்டினார்கள். உள்ளே வாளும் , இதர போர் கருவிகளும் தங்கள் பளபளப்பைக் காட்டி பளிச்சென பதில் சொல்லின . அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை விஞ்சி அந்த போர்க் கருவிகள் ஒரு செய்தியை சொல்லின. அந்த தளபதிகளின் தலைவர் அவர்கள் நன்றாகவே உணர்ந்தார்கள். தங்கள் கோபம் தணிந்தவர் களாக கலீஃபா உமர் (ரழி) அவர்கள் , 'இதுதான் உண்மை என்றால் எந்த பங்கமும் நடந்துவிட வில்லை ,'என்று கூறினார்கள்.

இதன்பொருள், 'நீங்கள் அல்லாஹ்வின் வழியில் போர் செய்யும் தயாரிப்பையும், மன நிலையையும் இழந்துவிடவில்லை என்றால் எந்த நஷ்டமும் இல்லை ' என்பதாகும்.

வசதியும், வளமும் வரப்பெற்றவர்கள் தியாகம், ஜிஹாத், வசதி குன்றிய வாழ்க்கை என்பவற்றைக் கேட்டால் ஒரு ஒவ்வாமைக்கு உள்ளாவார்கள். அது நமது தளபதிகளிடம் தொற்றிவிடக்கூடாது என்பதே உமர்(ரழி) அவர்களின் அச்சம் .

மதீனாவிலிருந்து சிரியாவுக்கு நீண்ட பயணம் மேற்கொண்டார்கள் மிகப்பெரிய தொரு நிலப்பரப்பை ஆட்சி செய்த கலீஃபா உமர் (ரழி) அவர்கள். ஆனால் அவர்கள் தங்கு வதற்கென ஒரு சிறு கூடாரம் கூட வழியில் ஏற்பாடு செய்யப்படவில்லை. இப்படி காடு மேடுகளை கடந்து அங்கே வந்து நின்றார்கள். தளபதிகளின் உபசரிப்பிற்குப் பின் சற்று உயர மான மலைக்குன்றின் மேல் ஏறினார்கள் உமர் (ரழி) அவர்கள். எவ்வளவு பெரிய இடத்தையும், பழமையும் பெருமையும் வாய்ந்த நகரங்களை யும் முஸ்லிம்கள் வெற்றி கொண்டிருக்கின் றார்கள் என்பதைக் கண்டு அல்லாவுக்கு நன்றி சொன்னார்கள் .

பின்னர் உமர் (ரழி) அவர்கள் கிறிஸ்தவர் களோடு செய்து கொள்ள வேண்டிய ஒப்பந்தத் தின் உண்மை நகலை எழுதி முடித்தார்கள்.

மறுநாள் உமர் (ரழி) அவர்கள் தங்கள் தோழர்களோடு அமர்ந்திருந்தார்கள். அது போது தூரத்தில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு படையொன்று பாய்ந்து வந்தது. உடனிருந்த தோழர்கள் வாளை உருவிக்கொண்டு பாய்ந் தார்கள். அவர்களை விஞ்சி முந்தினார்கள் உமர் (ரழி) அவர்கள் .

'நில்லுங்கள் ! அவர்கள் நம்மை நெருங் கட்டும். அவர்கள் நம்மோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வரும் கிறிஸ்தவர்களாக இருக்கலாம் ' என்றார்கள் கலீஃபா அவர்கள் .

ஆமாம் ! அவர்கள் அந்த கிறிஸ்தவர் களேதான். தயாராக இருந்த ஒப்பந்தத்தைத் தன்னோடிருந்த நபித்தோழர்களிடம் காட்டி அவர்களின் ஒப்புதலை பெற்றார்கள் .

பின்னர் அது கிறிஸ்தவர்களின் பார்வைக்குப் போனது. அவர்களும் ஒப்புதல் தந்தார்கள். உமர் (ரழி) அவர்கள் அந்த கிறிஸ்தவர்களுடன் ஜெருசலம் சென்றார்கள்.

உமர் (ரழி) அவர்கள் பயணம் செய்த குதிரை தன் கால்களைச் சற்று நொண்டிற்று. உமர் (ரழி)

அவர்கள் குதிரையை விட்டு கீழே இறங்கி னார்கள். அதற்கு பணிவிடை செய்து ஓய்வெடுக்க வைத்தார்கள்.

உடனேயே குழுமியிருந்தோர் தங்கள் கலீஃபா மேற்கொண்டு தங்கள் பயணத்தைத் தொடர்ந் திட துருக்கியைச் சார்ந்த வசீகரமிக்கதொரு குதிரையைக் கொண்டு வந்தார்கள். குதிரை மேல் அழகியதோர் விரிப்பு. உமர் (ரழி) அவர்கள் அதன்மேல் ஏறி யமர்ந்தார்கள். தான் ஏதோ ஒரு ஆடம்பரத்தின் மேல் அமர்ந்திருப்பதைப் போல் ஓர் உணர்வு...! உடனேயே கீழே இறங்கி விட்டார்கள் அதிலிருந்து கால்நடையாகவே ஜெருசலத்தை வந்தடைந்தார்கள் .

'நீங்கள் ஒரு பெரும் சாம்ராஜ்யத்தின் அதிபதி.... நீங்கள் நடந்தே வருவது சரியல்ல 'என்றார்கள் ஒன்றாக வந்தவர்கள் .

இதற்கு உமர் (ரழி) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள் :

'எனக்கு அல்லாஹ் தந்திருக்கும் 'முஸ்லிம் ' என்ற கண்ணியம் ஒன்றே போதும் !'

உமர் (ரழி) அவர்கள் அங்கே பல நாள்கள் தங்கியிருந்தார்கள் . பைத்துல் முகத்தஸை மீண்டும் கட்டும் பணியினை உமர் (ரழி) அவர்களே நேரில் நின்று கவனித்தார்கள். காஅஃப் என்பவர் கிறிஸ்தவ பாதிரியார்களின் தலைமைப் பாதிரியாக இருந்தார்.

அவரை அழைத்து கிறிஸ்தவர்களும், யூதர்களும் புனிதமாகக் கருதும் இடங்களைக் கேட்டார்கள் கலீஃபா அவர்கள். பாதிரியார் அவற்றை காட்டினார் . சக்ராஹ் (Sakrah) என்ற இடத்திற்கு பக்கத்தில் வந்தபோது,' நீங்கள் மக்காவில் இருக்கும் ஹஜருல் அஸ்வத்தை மதிக்கும் அளவிற்கு நாங்கள் இதை மதிக்கின் றோம் ' எனக் கூறினார் அப்பாதிரியார்.

அவ்வாறு சொன்ன அப்பாதிரியார் தன் பாத அணிகளைக் கழற்றி விட்டு அதன் அருகில் சென்றார். உமர் (ரழி) அவர்களும் அவ்வாறே தன் பாத அணிகளை கழற்றி வைத்துவிட்டு உள்ளே பிரவேசித்தார்கள் .

பாதிரியாரின் கண்களில் கண்ணீர் துளிகள் பனித்தன, உமர் (ரழி) அவர்களின் மாற்றாரின் உணர்வுகளை மதிக்கும் மாண்புகண்டு .

பெருமானார் (ஸல்) அவர்கள் தனது விண்ணேற்றத்தின்போது நின்று தொழுத இடத்தை மூடி இருந்த செடிகளையும் கொடி களையும் தன் கைகளாலேயே அப்புறப்படுத்தி னார்கள். அங்கேயே ஒரு பள்ளிவாசலை கட்ட பணித்தார்கள். அந்த பணிகளையும் தன் மேற்பார்வையிலேயே நிறைவேற்றினார்கள் .

இப்படியே தலைமை பாதிரி காஅஃபுடன் சுற்றி வந்திடும்போது, 'மீட்பின் ஆலயம்'(Church of Resurrection) என்ற ஆலயத்தின் முன் வந்தார் கள். ஆலயத்திற்குள் உமர் (ரழி) அவர்களைப் பாசத்தோடும் பரிவோடும் அழைத்துச் சென் றார் அப்பாதிரியார்.

ஆலயத்தின் உள்ளிருந்த பாதிரிகள் உவகை யோடு வரவேற்றார்கள். உமர்(ரழி) அவர்களோடு வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளுக்கு கவர்னர் களாக நியமிக்கப்பட்டவர்களும் உடன் சென்றார்கள் .

**அஸர் தொழுகையின் நேரம் வந்தது. அத்தனை கிறிஸ்தவப் பாதிரிகளும் உமர் (ரழி) அவர்களை அங்கேயே தொழ சொன்னார்கள் .**

**உமர் (ரழி) அவர்கள் பாதிரிகளின் இந்தப் பாசம் நிறைந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை .**

**'நான் இங்கே தொழுதேன் என்பதைக் காரணங்காட்டி, பின்னால் வரும் முஸ்லிம்கள் இந்த ஆலயத்தில் சொந்தம் கொண்டாடக்கூடும்' என கூறி அங்கே தொழ மறுத்து விட்டார்கள்.**

நூல் : முஸ்லிம்களின் முதல் கிப்லா பைத்துல் முகத்தஸ்

ஆசிரியர் : **மு. குலாம் முஹம்மது** M.A
(விடியல் வெள்ளி, வைகறை வெளிச்சம் மாத பத்திரிகைகளின் நிறுவனர் மற்றும் ஆசிரியர் )

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.